# சமூகக்கல்வியும் வரலாறும்

தரம் 9



குறிப்புகள்



கணிப்பீட்டு செயன்முறைகள்

பயிற்சிகள்

ஆக்கம் : நா. மயில்வாகனம்
B.A. (Cey), (Modern History). Dip-in-Ed. (Cey)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 9

# சமூகக்கல்வியும் வரலாறும்

- குறிப்புகள்
- வினா - விடைகள்
- கணிப்பீட்டுப் பயிற்சிகள்

வரலாறு புதிய மேலதிகமீட்டற் குறிப்புகள் இறுதியில் தரப்பட்டுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைவாக
மாணவர்களின் சுயகற்றலுக்கும் செயன்முறைகளுக்கும் உதவியாகக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

**பாடசாலை மட்டக்கணிப்பீடு (SBA) நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவானது**

ஆக்கம் : நா. மயில்வாகனம்
B.A. (Cey.) (Modern History), Dip-in-Ed, (Cey.)
சென். தோமஸ் பாடசாலை,
கொள்ளுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர் 2000

© உரிமை : ஆக்கியோனுக்கே

- சமூகக்கல்வியும் வரலாறும் தரம் 9 (புதிய பாடத்திட்டம்) நூலினைத் தாமாகவே விளங்கிக் கற்பதற்கு உதவியாகக் குறிப்புகள் வினா + விடைகளாகத் தரப்பட்டுள்ளன.
- மாணவர்கள் தேர்ச்சிசார் பரீட்சைகளுக்கு (SBA) ஆயத்தம் செய்வதற்கு இக்குறிப்புகள் வழிகாட்டியாக அமையும்.
- இவ்வினாவிடைக் குறிப்புகள் வகுப்பறையில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை இலகுபடுத்த உதவியாக அமையும்.
- கடந்த 15 வருடங்களாக எனது சமூகக்கல்வி வரலாறு நூல்களுக்கு மாணவர்கள் தரும் வரவேற்பு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் தருகின்றது.

ஆக்கியோன்
**நா. மயில்வாகனம்**
சென். தோமஸ் பாடசாலை
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03.

**குரு கல்விச் சேவை**

விலை ரூபா **75/=**

**மொத்தமாக நூல்களைப் பெறுவதற்குத் தொடர்பு கொள்ள வேண்டியது:**

**யாழ்ப்பாணத்தில் :** **ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
235, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**கொழும்பில் :** **லங்கா புத்தகசாலை**
F. L. 1-4 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. இலங்கையின் புவியியற் பின்னணி

## 1. இலங்கையின் அமைவிடம்

அ) இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள தீவாகும்.

ஆ) இலங்கைக்கு வடக்கே இந்திய தீபகற்பம் மிக அண்மையாக அமைந்துள்ளது.

இ) இந்தியத் தீபகற்பத்திலிருந்து இலங்கையைப் பாக்கு நீரிணை பிரித்து நிற்கின்றது.

ஈ) ஆசியாக் கண்டத்தில் அயல்நாடுகளாக இந்தியாவும் , இலங்கையும் விளங்குகின்றன.

உ) இலங்கை கேந்திரநிலையத்தில் அமைந்திருப்பதால் கீழைத்தேச மேலைத்தேச நாடுகளுடன் தொடர்புகொள்ள முடிந்தது.

ஊ) இலங்கையைச் சூழவுள்ள கண்டங்கள் (1) வடக்கே - ஆசியாக் கண்டம் (2) தெற்கே - அந்தாட்டிக் கண்டம் (3) மேற்கே - ஆபிரிக்காக் கண்டம் (4) கிழக்கே - அவுஸ்திரேலியாக் கண்டம்

## 2. இலங்கையின் அகல, நெடுங்கோட்டு நிலையம்

அ) இலங்கையானது வடஅகலக் கோடு 5° க்கும் 6° க்கும் 9° க்கும் 10° க்குமிடையிலும் கிழக்கு நெடுங்கோடு 79° க்கும் 80° க்கும் 81° க்கும் 82° க்கும் இடையில் அமைந்துள்ளது.

ஆ) இலங்கை மத்திய கோட்டிற்கு வடக்கே 5°55' - 9°51' வட அகலக்கோடுகளுக்கும் 79°42' - 81°52' கிழக்கு நெடுங்கோடுகளுக்கும் இடையில் அமைந்துள்ளது எனத் தெளிவாகக் கூறலாம். ஏறத்தாள 4° அகலக்கோட்டுப் பரப்பையும் 2° நெடுங்கோட்டுப்பரப்பையும் இலங்கை கொண்டுள்ளது.

## 3. இலங்கையின் பருமனும் உருவமும்

அ) இலங்கையின் பரப்பளவு :- 65525 சதுரக்கிலோ மீற்றர்


ஆ) இலங்கையின் மிகக் கூடிய நீளம் :- 432 கிலோ மீற்றர்; வடக்கே பருத்தித்துறையிலிருந்து தெற்கே தேவுந்தர வரையுள்ள தூரம்

இ) இலங்கையின் ஆகக் கூடிய அகலம்:- 224 கிலோ மீற்றர்; மேற்கே கொழும்பிலிருந்து கிழக்கே சங்கமன் கந்தை வரை உள்ள தூரம்

ஈ) இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணையின் தூரம் :- 32 கிலோ மீற்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வட அகலக் கோடுகள் 5° 55' (5பாகை 55 நிமிடங்கள்) 9° 51' இடையிலும் கிழக்கு நெடுங்கோடுகள் 79° 42' -81° 52' இடையிலும் அமைந்துள்ளது.

**இலங்கையின் அகல நெடுங்கோட்டு நிலை**

**4. இலங்கைக்கு அறிமுகமான இனத்தவர்கள் வழங்கிய பெயர்கள்.**

| | இனத்தவர்கள் | பெயர்கள் |
|---|---|---|
| அ) | ஆரியர் | தம்பபண்ணி |
| ஆ) | கிரேக்கர் | தப்பிரோபேன் |
| இ) | அராபியர் | செரண்டிப் |
| ஈ) | சீனர் | சீலன் |
| உ) | போர்த்துக்கீசர் | செயிலான்/செயிலாவோ |
| ஊ) | ஒல்லாந்தர் | சிலான் |
| எ) | ஆங்கிலேயர் | சிலோன் |

**இலங்கையைச் சூழவுள்ள தீவுகள்**

மாலைதீவுககள்

அந்தமான் தீவுகள்

நிக்கோபார் தீவுகள்

மொரிஸியஸ் தீவு

மடகஸ்கர் தீவு

சுமாத்திரா

சொக்கத்ரா




**இலங்கையின் ஒப்பீட்டு நிலையம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இலங்கைக்கு வழங்கும் புனைபெயர்கள்

அ) தர்மதுவீபம் ஆ) இரத்தின துவீபம் இ) சீஹல துவீபம்

ஈ) இந்து சமுத்திரத்தின் முத்து உ) இந்து சமுத்திரத்தின் நிலவையரா

6. இலங்கையின் அழகை வியந்த நூலாசிரியர்கள் சிலர்

அ) பாகியன் ஆ) இபன்பதூத

இ) மார்க்கோ போலோ ஈ) ஜோன்டி மாறிக்னொலி

7. இலங்கையின் நிலையான காரணமாக [illegible] பொருளாதார அரசியல் கலாசாரம் என்பவற்றில் ஏற்பட்ட செல்வாக்குகள்.

அ) ஆரியரின் வருகை

* வட இந்தியாவின் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்தனர்.
* இலங்கையில் வடமேற்கு வடகிழக்குப் பகுதிகளில் குடியேறினர்
* இலங்கையின் சனத் தொகையில் பிரதான பங்கினராக உள்ளனர்.
* விவசாயம் நெற்பயிர்ச் செய்கையைப் புகுத்தினர்.
* இவர்களின் மொழி. சமூக வழக்கங்கள். வாழ்க்கைப் பாங்கு இங்கு நிலைபெற்றன.

ஆ) பௌத்த மதம் பரவியமை

* இந்தியாவிலிருந்து பௌத்த மதம் இலங்கையில் பரவியது.
* இலங்கையின் கலாசாரப் பாங்கில் நிலையான தன்மைக்கு உதவியது.

இ) திராவிடரின் வருகை

* தென்னிந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியேறினர்
* இலங்கையின் சனத்தொகையில் நிலையான பகுதியினராக இடம் பெற்றுள்ளனர்.
* தமிழ் மொழி. இந்து மதம். கலைகள். தமிழ்க் கலாசாரம் என்பன பரவின.

ஈ) அராபிய பாரசீகரின் வருகை

* அராபிய பாரசீகர் வர்த்தக நோக்கில் வந்து குடியேறினர்.
* முஸ்லிம்கள் எனக் குறிப்பிடப்படும் இவர்கள் இலங்கையின் சனத் தொகையில் நிலையான பகுதியாக உள்ளனர்.
* இஸ்லாம் மதத்தையும் தமது கலாசார பழக்கவழக்கங்களையும் புகுத்தினர்.

உ) போர்த்துக்கேயரின் வருகை

* போர்த்துக்கேயர் வருகையினால் கத்தோலிக்க மதம் பரவியது.
* போர்த்துக்கேய மொழிச்சொற்கள். உணவுகள். நிலையான திருமணமுறைகள் என்பன எமது பண்பாட்டில் செல்வாக்குப் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ) ஒல்லாந்தரின் வருகை

* ஒல்லாந்தர் வருகையினால் புரட்டஸ்தாந்து மதம் பரவியது.
* உரோமன் டச்சுச் சட்டமுறை, கட்டடக்கலை, ஒல்லாந்தமொழிச் சொற்கள் எமது பண்பாட்டில் செல்வாக்குப் பெற்றன.
* பறங்கியர் என்ற இனம் சமூகத்தில் இடம்பெற்றனர்.

எ) பிரித்தானியரின் வருகை

* பிரித்தானியர் வருகையினால் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைமுறை, பாராளுமன்றமுறை ஏற்பட்டது.
* ஆங்கில மொழி, அங்கிலிக்கன் திருச்சபைக் கிறிஸ்தவ மதம், பழக்க வழக்கங்கள், நடை, உடை, பாவனைகளின் செல்வாக்கு இலங்கையில் ஏற்பட்டது.

**8. இலங்கையின் அகலக்கோடு நிலையம், தீவாக இருப்பது ஆகிய காரணிகளால் ஏற்பட்டுள்ள புவியியற் செல்வாக்குகள்**

அ) மத்தியகோட்டிற்கு அண்மையில் ஏறக்குறைய 5° தொடக்கம் 10° அகலக் கோடுகளுக்குள் இலங்கை அமைந்துள்ளது.

ஆ) வருடம் முழுவதும் சமமான உயர் வெப்ப நிலை நிலவுகின்றது. சராசரி வெப்பநிலை 27°C ஆகும்.

இ) இந்து சமுத்திரத்திலுள்ள தீவாதலால் வெப்பநிலை மட்டுப்படுத்தப் படுகின்றது.

ஈ) மத்திய கோட்டுக்கு அண்மையில் அமைந்துள்ளதால் வருடம் முழுவதும் பரவலான மழையைப் பெறுகின்றது.

உ) பருவக் காற்று நாட்டின் காலநிலை மீது செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக உள்ளது.

ஊ) இந்து சமுத்திரத்திலுள்ள நீரோட்டங்களின் செல்வாக்கும் காணப் படுகின்றது.

### 9. இலங்கை சர்வதேச புகழ் பெறக் காரணங்கள்

*அ) **நீண்ட வரலாறும் பண்பாடும் கொண்டதாயிருத்தல். :–** 2500 வருட கால நீண்ட வரலாற்றினை இலங்கை கொண்டுள்ளது.*

*ஆ) **இந்து சமுத்திரத்தின் மத்தியில் ஒரு குவிமைய்ய நிலையமாக இலங்கை காணப்படல்:–** கப்பல் விமானப் பாதைகளின் கேந்திர நிலையத்தில் இலங்கை அமைந்துள்ளது.*

*இ) **இயற்கை வனப்பு அதற்கேற்ப காலநிலை நிலவுதல்:–** இலங்கை சூரியனில் மிதக்கும் தீவு என அழைக்கப்படுகின்றது.*


*ஈ) **தேசிய கலைப்பொருட்கள், இரத்தினக் கற்கள் காணப்படல்:–** இலங்கை இரத்தினதுவீபம் என அழைக்கப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) **இயற்கைத் துறைமுகம் :-** இயற்கைத்துறைமுகமான திருகோணமலை. ஆசியாவில் சிறந்த துறைமுகங்களின் ஒன்றான கொழும்பு. சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்கா ஆகியன காணப்படல்.

10. உலகின் பிரதான விமான மார்க்கங்கள் முக்கியமான கப்பற் பாதைகள்




**அ) இலங்கையிலிருந்து விமான மார்க்கம் மூலம் தொடர்புடைய நகரங்கள் சில**

(1) கொழும்பு - ரோக்கியா (யப்பான்)

(2) கொழும்பு - இலண்டன் (இங்கிலாந்து)

(3) கொழும்பு - பேர்த், மெல்போன், சிட்னி (அவுஸ்திரேலியா)

(4) கொழும்பு - பாங்கொக் (தாய்லாந்து)

(5) கொழும்பு-கராச்சி (பாகிஸ்தான்) (6) கொழும்பு-சிங்கப்பூர் (சிங்கப்பூர்)

**ஆ) இலங்கையின் கப்பல் மார்க்கங்களுடன் தொடர்புடைய நகரங்கள் சில:-**

(1) இலங்கை - பிறிமன்டில் (அவுஸ்திரேலியா)

(2) இலங்கை - நியுயோர்க் (அமெரிக்கா ஐக்கிய நாடுகள்)

(3) இலங்கை - கேப்ரவுன் (தென்னாபிரிக்கா)

(4) இலங்கை-சென்னை, கல்கத்தா, பம்பாய் (இந்தியா)

(5) இலங்கை-வெலிங்ரன் (நியூஸிலாந்து)

# 02. இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்கள்

11. இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்களின் முக்கிய பிரிவுகள்.

அ) **கரையோரச் சமவெளி:** கடல் மட்டத்திலிருந்து 30 மீற்றர் வரை உயரமான பகுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) **அகச் சமவெளி:** 30 மீற்றர் சமவுயரக் கோட்டுக்கும் 300 மீற்றர் சமவுயரக் கோட்டுக்கும் இடைப்பட்ட பகுதி.

இ) **மத்திய மலைநாடு:** 300 மீற்றர் சமவுயரக் கோட்டுக்கு மேற்பட்ட பகுதி

ஈ) **சப்பிரகமுவா மலைத்தொடர்:** மத்திய மலைநாட்டிற்கு தென்மேற்காக அமைந்துள்ளது.

உ) **கல்லோயாக் குன்றுகள்:** மத்திய மலை நாட்டிற்குக் கிழக்கே அதன் அண்மையில அமைந்துள்ளது



12. கரையோரச் சமவெளி

* கடல் மட்டத்திலிருநது 30 மீற்றர் சமவுயரக்கோட்டுக்குட்பட்ட பிரதேசம்.
* வடக்கில் 32 கிலோமீற்றர் வரை அகன்றும் தெற்கில் 3 கிலோ மீற்றர் வரை ஒடுங்கியும் காணப்படுகின்றது.



தரைத்தோற்ற வலயத்தின் குறுக்குவெட்டு

13. கரையோரச் சமவெளியின் விசேடமான (பல்லுருவ) நிலவுருப் புக்களின் அம்சங்கள்.
உதாரணங்கள்:-



**(அ) தீவுகள்:-**

* இலங்கையின் வடமேற்குத் திசையில் தீவுகள் காணப்படுகின்றன. இத் தீவுகள் தனியானவைகளாக அமைந்துள்ளன.
* உ+ம் (1) காரைதீவ (2) ஊர்காவற்றுறை (3) நயினாதீவு (4) நெடுந்தீவு (5) புங்குடுதீவு (6) கச்சதீவு

**ஆ) கடனீரேரிகள்:-**

* கடலிலிருந்து விடுதலை பெறாத நிலப்பகுதிக்குள் ஊடறுத்துச் சூழக் காணப்படும் உவர் நீரைக் கொண்ட நிலப்பரப்பு. கடனீரேரி எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பக்கங்களிலும் தரையினால் சூழப்பட்டுக் குடாக்களைவிட ஒடுங்கிய வாய் மூலம் கடலோடு தொடுக்கப்பட்டிருக்கும்.

உ+ம (1) மட்டக்களப்பு (2) புத்தளம் (3) நீர்கொழும்பு (4) யாழ்ப்பாணம

இ) முனை:-

கடற்பகுதியை நோக்கி நீண்ட ஒடுக்கமான நிலப்பரப்பு முனை எனப்படும்.

உ+ம் (1) தேவந்திராமுனை (2) யானை... (3) பவுல்முனை (4) இராட்சத...

ஈ) குடா:-

கடலுடன் தொடுக்கும் வாய்ப்பகுதி ...அகன்றதாகக் காணப்படும்.

நிலப்பகுதியை ஊடறுத்துக் காணப்படும். உவர்நீரைக் கொண்டது.

குடாக்கள் துறைமுகங்கள் அமைக்கப் பொருத்தமானவை.

உ+ம (1) வெலிகமக்குடா (2) கொட்டியாரக்குடா (3) அறுகமக்குடா

உ) கழிமுகம் (டெல்ரா):-

ஒரு ஆற்றினால் வாரிக் கொண்டு வரப்படும் பொருட்கள் அதன் முகத்தில் முக்கோண வடிவில் அல்லது விசிறி வடிவில் படியவிடுவதால் உண்டாவதாகும்.

உ+ம் டெலரா அமசங்களுடைய ஆறுகள்:- (1) மகாவலிகங்கை (2) கலா ஓயா (3) மீ ஓயா

ஊ) சேற்று நிலங்கள்:-

ஆறுகள் பெருக்கெடுத்துப் பாயும் சந்தர்ப்பங்களில் வெள்ளப் பெருக்குகள் உண்டாகும் போது ஆற்றுமுகங்களை அண்டிச் சேற்று நிலங்கள் உண்டாகின்றன.

உ+ம் (1) முத்துராஜவெல (களனிகங்கை ...) (2) ...த்தத்துவ (பொல கொட நீர்த்தேக்கங்களைச் சூழ்ந்த பகுதிகளில்)

எ) உவர் நீர்த்தேக்கங்கள:- (உப்பளங்கள் அல்லது உப்பங்கழிகள்)

கரையோரத்தின் சிலபகுதிகளில் கடலை...த் தொடுத்துக் காணப்படும் உவர்நீரைக் கொண்ட பள்ளங்கள் உப்பளங்கள் எனப்படும்

உ+ம (1) ஆனையிறவு (2) அம்பாந்தோட்டை (3) நிலாவெளி

ஏ) பாறைக்குன்றுகள்:-

இலங்கையின் தென்மேற்குக் கரையோரத்துக்கு அப்பாலமைந்துள்ளன

உ+ம:(1) பெரிய இராவணன் கோட்டை (2) சி... ...கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14.** அகச் சமவெளியின் முக்கிய அம்சங்கள்

அ) 30 மீற்றருக்கும் 300 மீற்றருக்கும் இடைப்பட்ட சமவுயரக் கோட்டுக்கு இடையில் அமைந்துள்ளது.

ஆ) இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் மூன்றிலொரு பங்கு இவ்வலயத்துள் அடங்கும்.

இ) நீண்ட காலமாக மண்ணரிப்புக்குள்ளாகி எஞ்சி நிற்கும் குன்றுகளை (மொனட்டுனொக்குகளை) உடையது.

ஈ) இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த நாகரிகம் அகச் சமவெளியில் தோன்றி வளர்ந்தது.

**15.** இலங்கையின் மத்திய மலைநாட்டின் முக்கிய அம்சங்கள்

* இப்பிரதேசத்தில் சாதாரண உயரம் 300 மீற்றருக்கு மேற்பட்டதாகும்.
* மத்திய மலைநாட்டின் மலைத் தொடர்கள் ஒரு நங்கூர வடிவத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.



| மலைத் தொடர்கள் | |
|---|---|
| 1. நங்கூரத்தின் அடிப்பாகத்தில் மேற்குப் பகுதியில் | சிவனொளிபாதமலை (சமனலை 2238 மீ.) |
| 2. நங்கூரத்தின் அடிப்பாகத்தில் கிழக்குப் பகுதியில் | அப்புத்தளை, நமுனகுல மலைகள் (2035 மீ.) |
| 3. நங்கூரத்தின் மத்தியில் (நடுத்துண்டாக) | பிதுரு தாலகால மலை (2524 மீ.) |
| 5. நங்கூரத்தின் வட கிழக்கில் | நக்கிஸ் மலை (1863 மீ.) |
| 6. நங்கூரத்தின் தெற்கில் (நடுமையம்) | கிரிகால பொத்த. (2388 மீ)<br>தோட்டப் பொல (2537 மீ) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. ஆறுகள்

| உற்பத்தியாகும் மலைத்தொடர்கள் | ஆறுகள் |
|---|---|
| 1. சிவனொளிபாத மலைத்தொடர் | (1) மகாவலிகங்கை<br>(2) களனிகங்கை<br>(3) களுகங்கை |
| 2. அப்புத்தளை, நமுனகுல | (1) மாணிக்க கங்கை<br>(2) கிரிந்தி ஓயா<br>(3) குமுக்கன் ஓயா |

## 17. மேட்டு நிலங்கள்



* உயர்ந்த மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சமநிலம் மேட்டு நிலம் எனப்படும்.

அ) **ஹற்றன் மேட்டுநிலம்:-** தென் திசையில் சிவனொளிபாத மலைக்கும் கிழக்குத் திசையில் பிதுறுதலாகலை மலைத்தொடருக்கும் இடையில் 900-1515 மீற்றர் உயரத்திற்கு இடைப் பட்டதாக அமைந்துள்ளது.

ஆ) **வெலிமட மேட்டுநிலம்:-** பிதுருதாலகால, அப்புத்தளை நமுனகுல மலைத் தொடருக்கிடையில் அமைந்துள்ளது. இதன் சராசரி உயரம் 900 மீற்றராகும்.

இ) **மகவலதென்ன, கொஸ்லந்தை மேட்டுநிலம்:-** சிவனொளிபாதமலைக்கும் அப்புத்தளை நமுனகுல மலைகளுக்குத் தெற்காக உள்ளது. இதன் உயரம் 300-900 மீற்றருக்கு உட்பட்டது.

ஈ) **கண்டி மேட்டு நிலம்:-** ஹற்றன் மேட்டுநிலத்துக்கும் வெலிமடை மேட்டு நிலத்துக்கும் வடக்காகக் கண்டி மேட்டு நிலம் உள்ளது. இதன் உயரம் 600-900 மீற்றருக்கும் உட்பட்டது. கண்டி மேட்டு நிலத்திலேயே மகாவலிகங்கை முழங்கைவளைவுடன் தும்பறைப்பள்ளத்தாக்கில் பிரவேசிக்கின்றது.

## 18. சப்பிரகமுவா மலைத்தொடர்:- முக்கிய அம்சங்கள்

அ) மத்திய மலைநாட்டிற்குத் தென் மேற்குத் திசையில் அமைந்துள்ளது.

ஆ) களுகங்கையினாலும் வளவகங்கையினாலும் மத்திய மலை நாட்டிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) இந்த மலைத் தொடரை புளுத்தோட்டை இரக்குவானை மலைத் தொடர் எனவும் அழைப்பர்.

ஈ) இவ்வலயத்தின் சிறப்பம்சமாக வடேமற்கிலிருந்து தென்கிழக்குத் திசை நோக்கிச் செல்லும் சமாந்தரமான மலைத் தொடர்களைக் குறிப்பிடலாம்.

உ) (1) நில்வளகங்கை (2) ஜின்கங்கை (3) பெந்தோட்டகங்கை ஆகிய ஆறுகள் இங்கு உற்பத்தியாகின்றன.

**19.** கல்லோயாக் குன்றுகள் - முக்கிய அம்சங்கள்

அ) மத்திய மலை நாட்டிற்குக் கிழக்கே அகச்சமவெளியின் கிழக்குப பகுதியைச் சார்ந்துள்ளது.

ஆ) ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிகழ்ந்த மண்ணரிப்புக்குப பின் எஞ்சியுள்ள பல தனிக் குன்றுகளைக் கொண்டுள்ளது.

இ) (1) நுவரகல்கந்த (658 மீ) (2) கோவிந்தகல் (558 மீ) (3) கொககாகலை (687 மீ) (4) இங்கினியகல (315 மீ) (5) மொனராகல போன்ற குனறுகள் காணப்படுகின்றன.

ஈ) (1) கல்ஓயா. (2) ஹெடஓயா. (3) குமுக்கன்ஓயா (4) வில்ஓயா ஆகிய ஆறுகள் உற்பத்தியாகின்றன.

**20.**

| நீர் வீழ்ச்சிகள் | உயரம் (மீற்றரில்) | அமைந்துள்ள நதிகள் |
|---|---|---|
| (1) பப்பரகந்த | 240 | கிருத்திஓயா |
| (2) குருந்துஓயா | 188 | மகாவலிகங்கை |
| (3) தியலும | 170 | கிருத்திஓயா |
| (4) கிருந்தி அல்ல | 165 | களுகங்கை |
| (5) றம் பொட | 119 | மகாவலிகங்கை |
| (6) லககபான | 114 | களனிகங்கை |
| (7) அபர்டின் | 90 | களனிகங்கை |
| (8) டெவொன் | 85 | மகாவலிகஙகை |
| (9) துன்கிந்த | 576 | மகாவலிகஙகை |
| (10) எல்பின் | 55 / | மகாவலிகங்கை |
| (11) மானவெல | 20 | மகாவலிகஙகை |
| (12) [illegible] | 07 | கிரிந்திஓயா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21.

| பிரதான கணவாய்கள் | அமைந்துள்ள பிரதான வீதிகள் |
|---|---|
| 1. கலதெகர | குருணாக்கல் - கண்டிவீதி |
| 2. பலன | கொழும்பு - கண்டிவீதி |
| 3. கினிகத் தென | அவிசாவெல - நுவரெலியா வீதி |
| 4. பலக்கடுவை | மாத்தளை - கண்டிவீதி |
| 5. அப்புத்தளை | பலாங்கொடை - பண்டாரவளை வீதி |
| 6. அல்ல | வெல்லவியா - பதுளை வீதி |

22. இலங்கையின் இயற்கை நீர் வடிகாலமைப்பு

* இலஙகையில் பெரும்பாலான ஆறுகள் மத்திய மலைப் பிரதேசததில் ஊறறெடுத்து உலாவலயத்தினூடாகப் பாய்ந்து கரையோரச் சமவெளியைக கடநது கடலில் விழுகின்றன.
* சககரம் போன்ற (ஆரைவடிகால்) அமைப்பில் மதத்திய மலைநாடடிலிருந்து ஆறுகள செல்கின்றன
* இலஙகையில் 103 ஆறுகள உளளன இவற்றுள் நீளத்தையும் பாய்ந்து செலலும நீரின் அளவையும கருதுமிடத்துச 34 ஆறுகள மாத்திரமே முககியமானதாக விளஙகும.

| ஆறுகள் | நீளம் (கி. மீற்றர்) | பாயும் திசை |
|---|---|---|
| மகாவலிகங்கை | 334 | வடக்கு |
| அருவி ஆறு | 164 | மேற்கு |
| கலாஓயா | 148 | மேற்கு |
| களனிகங்கை | 145 | மேற்கு |
| யான்ஓயா | 142 | கிழக்கு |
| தெதுருஓயா | 142 | மேற்கு |
| வளவகங்கை | 138 | தெற்கு |
| மாதுறுஓயா | 135 | கிழக்கு |
| மகாஓயா | 134 | மேற்கு |
| களுகங்கை | 129 | மேற்கு |
| குமுக்கன்ஓயா | 116 | தென்கிழக்கு |
| மாணிக்ககங்கை | 114 | தெற்கு |
| ஜின்கஙகை | 113 | தொக |
| மீ ஓயா | 109 | மேறகு |
| கலஓயா | 108 | கிழக்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. இலங்கையின் காலநிலை

**21.** வானிலை; வரைவிலக்கணம் தருக.

* யாதேனும் ஓர் இடத்தில், யாதேனும் ஓர் நேரத்தில் உள்ள குறுகியகால வளிமண்டலத்தின் இயல்பே வானிலை எனப்படும்.

**22.** காலநிலை; வரைவிலக்கணம் தருக.

* நீண்ட ஒரு காலப்பகுதியிலே தினசரி வானிலை, மூலகங்களை அவதானித்து அவற்றின் அடிப்படையில் இனங்கண்டு அறியப்படும் போது நிலமைகள் காலநிலை எனப்படும்.

* *கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள பிரதான வானோக்கு நிலையத்திலும் வேறு அவதானிப்பு நிலையங்களிலும் பதியப் பட்ட நீண்ட ஒரு காலப்பகுதியின் அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் காலநிலை எத்தகையது என்ற பொது முடிவுக்கு வரலாம்.*

**23.** வளிமண்டல இயல்பை அறிய உதவும் வானிலை மூலகங்கள் யாவை?

| | | |
|---|---|---|
| 1) வெப்பநிலை | 2) படிவுவீழ்ச்சி | 3) ஈரப்பதன் |
| 4) முகில் | 5) காற்றின் வேகம் | 6) காற்று வீசும் திசை |

**24.**

| காலநிலைகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள். | |
|---|---|
| 1) அகலக்கோட்டு நிலையம் | 2) தரையுயரம் |
| 3) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம் | 4) நீரோட்டங்கள் |
| 5) நிலப்பகுதியிலுள்ள நீர்ப்பகுதி | 6) மலைத்தடுப்பு |

**25.** இலங்கையில் வெப்பநிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைத் தருக.

**(அ) இலங்கை அமைந்துள்ள அகலாங்கு நிலையம்:**

(1) இலங்கை மத்திய கோட்டுக்கு அண்மையாக வட அகலாங்குகள் 5°55"-9°55" இடையில் அமைந்துள்ளமையால் சூரியவெப்பம் ஆண்டு முழுவதும் ஒரே சீராகக் கிடைக்கின்றது.

(2) இலங்கையில் பருவகால வேறு பாடுகள் காரணமாக வெப்ப நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவு மாற்றங்கள் ஏற்படுவதில்லை.

(3) இலங்கையின் தாழ்ந்த பகுதிகளில் நட்டாண்டு வெப்பநிலை பொது வாக 27.4°C ஆக உள்ளது. இலங்கையின் வெப்பநிலை வீச்சு 2.8°C க்கு மேற் படுவதில்லை.

**(ஆ) தரையுயரம் அல்லது ஏற்றம்:**

(1) இலங்கையின் உள்நாட்டுப் பகுதியான மத்தியமலைநாட்டில் வெப்பநிலை குறைவாக உள்ளது.

(2) நழுவு வீதத்திற்கமைய ஒவ்வொரு **100**மீற்றர் ஏற்றத்திற்கும் வெப்பநிலை **0.64°C** வீதம் குறைகிறது.




அளவுத்திட்டம் 1:2,400,000

| நகரம் | கடல் மட்டத்திலிருந்து உயரம் (மீற்றரில்) | வெப்பநிலை |
|---|---|---|
| கண்டி | 450 | 24.2° C |
| தலவாக்கலை | 1375 | 18.5° C |
| நுவரெலியா | 1882 | 15.4° C |
| பீதுருதாலகால | 2534 | 11.5° C |

**(இ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம்:**

(1) இலங்கை சிறிய தீவாக உள்ளது. இந்து சமுத்திரத்திலிருந்து வீசும் குளிர்ச்சியான காற்று இலங்கையின் கரையோரப் பகுதிகளின் வெப்பநிலையைக் குறைப்பதில் துணையாக உள்ளது.

(2) இலங்கையின் கடற்கரையில் இருந்து உள்நாட்டில் அமைந்துள்ள எந்தவோர் இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் 113 கிலோமீற்றருக்கு மேற்படுவதில்லை. இதனால் இலங்கையின் பெரும்பகுதி கடற்காற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்கைப பெறுகின்றது. குளிர்ந்த கடற்காற்றுக்கள் எங்கும வீசி ஈரலிப்பை ஏற்படுத்தி வெப்பநிலையை மட்டுப்படுத்துகின்றன.

**(ஈ) இந்தியத் துணைக்கண்டத்திற்கு அண்மையில் இருத்தல்:**

(1) உயர்ந்த வெப்பநிலையுடைய இந்திய துணைக்கண்டத்திற்கு அணமையில் அமைந்துள்ளதால் இலங்கையின வடபகுதியின் வெப்பநிலை உயர்வாக உள்ளது.

(2) இலங்கையின் யாழ்ப்பாணம். அனுராதபுரம் பிரதேசங்களின் [illegible]நிலையில் இது பிரதான தாக்கம் விளைவிக்கும காரணி யாக உள்ளது. மார்ச். ஏபரலில் கொழும்பின் வெப்பநிலை 26.1°C ஆக இருக்க யாழ்ப்பாணத்தின் வெப்பநிலை 27.6°C ஆக உள்ளது.

**(உ) பருவக்காற்றுக்கள்:**

(1) இலங்கையில் வீசும் வடகீழ். தென்மேல் பருவக்காற்றுக்கள் [illegible] நிலையில செல்வாககுச செலுத்துகின்றன.

(2) அதிக நீராவியைச் சுமந்துவரும் இப்பருவக் காற்றுக்கள் தரைக்கு மேலாக [illegible]சும்போது அவை செல்லும் பாதையில் உள்ள நிலப் பரதேசங்களில் வெப்பநிலையைக் குறைக்கின்றன.

## இலங்கையின் மழைவீழ்ச்சியின் போது அம்சங்கள்

(1) இலங்கை மத்திய கோட்டுப் பிரதேசத்தில் அமைந்திருப்பதால் அதிகளவு ஞாயிற்று வெப்பத்தினையும். பரவலான மழைவீழ்ச்சியையும் பெறுகிறது.

(2) ஈரவலயத்தில் மலைநாட்டின் மேற்குச் சரிவுகள் மிக உயர்ந்த அளவான மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன. இப்பிரதேசத்தில் வட்டவளை 5475 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி யையும். கினிகத்தென 5100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழச்சியையும் பெறுகின்றன

(3) தெனகீழ் வலயத்திலுள்ள யாலவுக்கு 950 மில்லிமீற்றா [illegible]ழை வீழ்ச்சியும். வடமேல் வலயத்திலுள்ள மனனாருக்கு 967 மில்லிமற்றர் மழைவீழ்ச்சியும் கிடைக்கின்றன.

27. [illegible]

(1) உகைப்பு மழை (மேற்காவுகை மழை)

(2) பருவககாற்[illegible] [illegible]ழை (மொனசூன் [illegible]ழை) (3) சூறாவளி மழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. [illegible]

(1) புவியின மேறபரப்பு ஞாயிற்றுக் கதிரச ால சூடாக்சப்படுகிறது. சூடேறிய மேற்பரபபில் உள்ள வளியும் சூடாக்கப்பட்டு மேல் எழுகின்றது. உகைப்பு ஓட்டமாக மேல் எழுந்து செல்லும் வளியின் வெப்பநிலை வீழ்ச்சியடைகிறது. இதனால் வளியில் உள்ள நீராவி ஒடுங்கி மழையாகப் பெய்கின்றது. இதனையே உகைப்புமழை என அழைப்பர்.

(2) இலங்கை மத்திய கோட்டுப் பகுதிக்கு அண்மையில் அமைந்திருப்பதால் ஞாயிற்று வெப்பத்தை ஆண்டு முழுவதும் குறைவின்றிப் பெறுவதால் உகைப்புச் செயன்முறை நிகழ்கிறது. ஆனால் பருவக்காற்றுக்களின் செல்வாக்குக் காரணமாக அவை வீசும் காலங்களில் உகைப்புச் செயன்முறை தற்காலிகமாகத் தடைப்படுகிறது.

(3) உகைப்புச் செய்முறை மார்ச்-ஏப்ரல், ஒக்டோபர்-நவம்பர் மாதங்களில் தெளிவாக வெளிப்படுகின்றது.

(4) உகைப்பு மழை "மாலைநேர மழை" "இடி மின்னல் புயல் மழை". "மேற்காவுகை மழை" போன்ற பலபெயர்களால் அழைக்கப்படும்.

உகைப்புச் செயன்முறை




29. பருவக்காற்று மழை.

இலங்கையில் செல்வாக்குச் செலுத்தும் பருவக்காற்றுக்கள் அவை வீசும் திசைக்கேற்பப் பெயர் பெறுகின்றன.

(1) தென்மேல் பருவக்காற்று

(2) வடகீழ்ப் பருவக்காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30.** தென்மேல் பருவக்காற்று மழை; முக்கிய அம்சங்கள்.

(1) இந்து சமுத்திரத்தின் தென்மேற்கு உயர் அமுக்கவலயத்திலிருந்து தாழமுக்கத்தை நோக்கி இலங்கையினூடாகஇக்காற்று வீசுகின்றது.

(2) இந்து சமுத்திரத்தினூடாக வீசுகின்றமையால் அதிகளவு நீராவியைக் காவிச்செல்கிறது.

(3) மத்திய மலைநாட்டைத் தாண்டிச் செல்லும்போது நீராவி ஒடுங்கி மலைநாட்டின் மேற்கிலும் தென்மேற்கிலும் உள்ள பிரதேசங்கள் அதிக மழையைப் பெறுகின்றன.

(4) அம்பாந்தோட்டை தென்மேல் பருவக்காற்று வீசும்வழியில் நேராக அமைந்தும் மலைகள் எதுவுமில்லாமையால் அதிக மழையைப் பெறுவதில்லை.

**31.** வடகீழ் பருவக்காற்று மழை; முக்கிய அம்சங்கள்.

(1) இந்து சமுத்திரத்தின் மத்திய கோட்டின் இரு மருங்கிலும் நிலவும் தாழமுக்கப்பரப்பை நோக்கி வடகீழ்பருவக்காற்று வீசுகின்றது.

(2) இந்திய உபகண்டத்தின் வரண்ட பிரதேசத்தில் ஆரம்பித்து மத்திய கோட்டுத் தாழமுக்கத்தை நோக்கி வீசுகிறது.

(3) சிறிய நீர்ப்பரப்பான வங்காளவிரிகுடாவைக் கடந்து வீசுவதால் நீராவியின் அளவும் சிறிதாகவே இருக்கின்றது. குறைந்தளவு மழையே பெறப் படுகின்றது.

(4) இலங்கையின் வடபகுதியும் கிழக்குப் பகுதியும் மத்திய மலைநாட்டின் வடகீழ்ச்சரிவும் அதிக மழையைப் பெறுகின்றன.

**32.** சூறாவளி மழை; முக்கிய அம்சங்கள்.

(1) அயனமண்டல சூறாவளியும் இலங்கைக்கு மழையைக் கொடுக்கிறது. சூறாவளியை **இறக்கங்கள்** அல்லது **சுழல்காற்று** என்றும் கூறுவர்.

(2) இச்சூறாவளி தாழமுக்கம் பெரும்பாலும் நிகழும் வங்காள விரிகுடா விலேயே உண்டாகின்றது.

(3) பருவக்காற்றுக்களின் இடைக்காலங்களில் சூறாவளி உண்டாகிறது. பொதுவாக **ஒக்டோபர், நவம்பர்** மாதங்களில் வடகீழ்பருவக்காற்றுக் காலங்களில் ஏற்படும் சூறாவளி பிரபல்யமானது.

(4) இலங்கையின் கிழக்குக்கரை ஊடாகப் புகும் இச்சூறாவளி பொதுவாக வடமேற்குத் திசையால் வெளியேறுகின்றது.

(5) இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு மழையைக் கொடுக் கும் பிரதான காரணியாக சூறாவளி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 33. இலங்கையின் மழைவீழ்ச்சி ஒழுங்குமுறைகள்.

(1) ***தென்மேல் பருவக்காற்றுக் காலம்:-*** மே முதல் செப்ரெம்பர் வரை-அதிக மழை கிடைக்கும் காலம்.

(2) ***உகைப்பு மழைக்காலம்:-*** ஒக்டோபர் முதல் நவம்பர் வரை - உகைப்பு மழைக்காலமாகிலும் சூறாவளியே மழைவீழ்ச்சியில் பெரும்பங்கு கொண்டுள்ளது.

(3) ***வடகீழ்ப் பருவக்காற்றுக் காலம்:-*** டிசெம்பர் முதல் பெப்ரவரி வரை - இக்காற்றினால் அதிகமழை கிடைப்பதில்லை. சூறாவளி மூலம் கணிசமான மழை கிடைக்கலாம்.

(4) ***இடைப்பருவப் பெயர்ச்சிக் காலம்:-*** மார்ச் முதல் ஏப்ரல் வரை- உகைப்பு மழை வீழ்ச்சி அதிகம்.




அளவுத்திட்டம் 1:2,400,000

## 34. இலங்கையின் மழைவீழ்ச்சி வலயங்கள்.

(1) **ஈரவலயம்:** 2000 மில்லிமீற்றருக்கு மேல் மழைபெறும் வலயம்.

(2) **உலர் வலயம் (வரண்ட பிரதேசம்):** 1250-2000 மில்லி மீற்றருக்கும் இடைப்பட்ட மழைவீழ்ச்சியைப் பெறும் வலயம்.

(3) **அரைவறள் வலயம்:** 1250 மில்லி மீற்றருக்கு குறைந்த மழைவீழ்ச்சியைப் பெறும் வலயம்.

## 35. இலங்கையின் பிரதான காலநிலை வலயங்கள்.

* தரைத்தோற்றம், வெப்பம், மழைவீழ்ச்சி, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது.

(1) தாழ்நில ஈரவலயம் (2) தாழ்நில உலர் வலயம்

(3) மலைநாட்டு உலர் வலயம் (4) மலைநாட்டு ஈரவலயம்

* அரைவறள் வலயம் எனப்படும் ஒடுங்கிய சிறு பிரதேசங்கள் தாழ்நில உலர்வலயத்தில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. இலங்கையின் இயற்கைத் தாவர வலயங்கள்

**36. இயற்கைத் தாவரம் என்றால் என்ன?**

* மனிதனின் தலையீடு இன்றி ஒரு பிரதேசத்தில் தாமாகவே வளர்கின்ற தாவரங்கள் இயற்கைத் தாவரங்கள் எனப்படும்.
* உ+ம் (1) சிறிய நீர்த்தாவரங்கள் (2) செடி கொடிகள் (3) பெரிய மரங்கள் (4) புல்பூண்டுகள் (5) முட்புதர்கள் (6) பெரிய அழகான காடுகள்

**37. இயற்கைத் தாவரப் பரம்பல்**

* தரைத்தோற்ற அமைப்பு. மண். காலநிலை (வெப்பம். மழைவீழ்ச்சி) என்பன இயற்கைத் தாவரத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகும்.
* இலங்கையில் அநேகமான பிரதேசங்களில் காலநிலை. மண் ஆகிய வற்றுக்கு அமையவே இயற்கைத் தாவர வலயங்கள் அமைகின்றன.




A மத்தியகோட்டு ஈரவலயக் காடுகள்
B உலர் வலயக் காடுகள்
C இடைவெப்பவலய என்றும் பசுமையான காடுகள்
D மலைநாட்டு ஈரவலயக் காடுகள்
E புல்வெளிகள்
F பற்றை முட்புதர்க் காடுகள்
G கண்டல் தாவரங்கள்

**இலங்கையில் காடுகள்**

1 வில்பத்துச் சரணாலயம்
2 சோமாவதி தேசிய வனப்பூங்கா
3 வஸ்கமுவ தேசிய வனப்பூங்கா
4 மாதுறு ஓயா தேசிய வனப்பூங்கா
5 சிவனொளிபாத அடவி
6 உடவளவை தேசிய வனப்பூங்கா
7 யாளல தேசிய வனப்பூங்கா
8 சிங்கராஜவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. **இயற்கைத் தாவரப் பரம்பல்:- அவதானிப்புக்கள்**

***அ) சிங்கராச வனத்தில் அவதானிக்கப்பட்டவை:-***

* *சர்வதேச வனமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.*
* *பல்வேறு வகைப்பட்ட இயற்கைத்தாவரங்கள், விலங்குகள், நுண்ணங்கிகள் காணப்படுகின்றன.*

***ஆ) பேதுறுதலாகலவில் அவதானிக்கப்பட்டவை:-***

* *உயரம் கூடக் கூட தாவர இனப் பெருக்கம் வேறுபட்டுக் காணப்படல்.*
* *சிங்கராச வனம் போன்ற அடர்ந்த காடுகள் காணப்படவில்லை.*
* *மரங்களில் பாசிகள் அதிகம் காணப்படுகின்றன.*

***இ) ஹோட்டன் சமவெளியில் அவதானிக்கப்பட்டவை:-***

* *1500 மீற்றரிலும் கூடிய உயரத்தில் அமைந்துள்ளது.*
* *இங்கு "உலகத்தின் முடிவு" என்னும் பிரதேசம் உள்ளது.*
* *ஹோட்டன் சமவெளியிலிருந்து 'எல்க' சமவெளியைப் பார்க்கலாம்.*

***ஈ) குருணாகல் பிரதேசத்தில் அவதானிக்கப்பட்டவை:-***

* *ஈரவலய, வரண்ட வலய மரங்கள் காணப்படுகின்றன.*
* *மீளக் காடாக்கம் நடைபெறுகின்றது.*

***உ) புத்தளம் பிரதேசத்தில் அவதானிக்கப்பட்டவை:-***

* *செழிப்பாக வளர்ந்த காடுகள் காணப்படவில்லை.*
* *சேற்றுநிலத் தாவரங்கள், உப்பளங்கள் உள்ளன.*

39. **மத்திய கோட்டு ஈரவலயக் காடுகள்**

* தாழ்நிலப் பிரதேசங்களிலும் மலைநாட்டிலும் காணப்படுகின்றன.
* விவசாய நகரமயமாக்க விரிவாக்க நடவடிக்கைகளால் காடுகளின் அளவு குறைந்துள்ளது. இன்று காடுகளின் அளவு 8% மாக உள்ளது.
* இப்பிரதேசத்தில் ஆண்டு மழை வீழ்ச்சி 2000 மில்லி மீற்றருக்கும் அதிகமாகும்.
* ஆரம்பகால காட்டு வளமாக மிஞ்சியிருப்பது சிங்கராஜ வனம் மாத்திரமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40.

| சிங்கராச வனம் |
|---|
| 1) சிங்கராஜ வனம் இரத்தினபுரி மாத்தறை, காலி ஆகிய மாவட்டங்களின் எல்லைகளை அண்மித்து அமைந்துள்ளது. |
| 2) 21 கிலோ மீற்றர் நீளமும் 3 கிலோமீற்றருக்கு மேற்பட்ட அகலத்தையும் கொண்டுள்ளது. |
| 3) இது சர்வதேச விலங்குப் புகலரணாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. |
| 4) மரங்களின் நுனிப்பகுதிகள் கொடிகளினால் பின்னப்பட்டு முகட்டில் வலை போல் அமைந்துள்ளது. |
| 5) மரங்களின் அடியில் காணப்படும் கீழ்வளரிகள், ஈரத்தன்மை காரணமாக இக்காட்டு நிலங்களுக்குள் போவது கடினமாகும். |
| 6) வெவ்வேறுபட்ட தாவர இனப்பரம்பல் கிட்டத்தட்ட 100–140 வரையில் காணப்படுகின்றன. |
| 7) ஹொரா, கீனா, ஈரப்பலா, கொடபர, நாவல், ஹல், மீதெல்ல மில்ல, நதுன் போன்றன பிரதான தாவர வகைகளாகும். |
| 8) வேறுபட்ட பாசி வகைகள், ஓர்கிட் வகைகள் காணப் படுகின்றன. |
| 9) இலங்கையில் எஞ்சியிருக்கும் 348 புல்லினங்களுள் 142 இங்கு உள்ளன. |

**41.** உலர் வலயக் காடுகள்

அ) தாழ் நில வரண்ட வலயத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது.

ஆ) இவ்வலயத்தின் **சராசரி மழைவீழ்ச்சி 1250-2000 மீற்றருக்கு உட் பட்டதாகும்.** வடகீழ்ப் பருவக்காற்றினால் இவ்வலயம் மழையைப் பெறுகின்றது.

இ) மழைவீழ்ச்சிக்கு ஒரு பருவத்தில் மாத்திரம் பெறப்படுவதிலும் ஆவியுயிர்ப்பினாலும் காடுகள் வளர்வது தடைப்படுகின்றது.

ஈ) **மரங்களில் சராசரி உயரம் 15-20 மீற்றர்களாகும்.** மரங்களிடையே இடைத்தூரம் காணப்படுகின்றது.

உ) முதிரை, பாலை, யாவறணை, கருங்காலி, சமண்டலை, மில்லர முதலிய **பெறுமதிமிக்க மரங்கள் இக்காடுகளில் உள்ளன.**

ஊ) **கீழ்வளரிகள் காணப்படுவதில்லை** 2-3 மீற்றர் உயரமான செடிகள் குட்டையான மரங்களே உள்ளன.

எ) மீளக்காடாக்கத்தின் கீழ் இப்பிரதேசத்தில் ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் தேக்குமரங்கள் பயிரிடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**42.** மலைநாட்டு ஈரவலயக் காடுகள்

அ) **சிவனொளிபாத மலை, பேதுருதலாகாலை போன்ற மலைத் தொடர் பகுதிகளில் மாத்திரம்** காணலாம்.

ஆ) மழைவீழ்ச்சி 2000 மி. மீற்றருக்கும் அதிகமாகக் கிடைத்தாலும் தரை உயர்ச்சி காரணமாக வெப்பநிலை தாழ்வாக (20°C-25°C) உள்ளது. இதனால் **மரங்கள் அடர்த்தியாகவோ உயரமாகவோ வளர்வதில்லை. மரங்களின் உச்சி முகடு போன்று உள்ளது.**

இ) சாதாரணமாக 8-10 மீற்றர் உயரமுடைய மரங்களைக் காணலாம். மரங்களில் ஓர்கிட், பட்டைகள், இலைகள் என்பன அதிகமாகக் காணலாம். கீழ்ப்பகுதிகளில் அடர்த்தியான வளரிகள் உள்ளன.

ஈ) இங்கு வளரும் மரங்களில் **கீனா, மிகிரியா, சப்பு** ஆகியன வீடு கட்டடங்கள் அமைக்கப் பயன்படுத்தக் கூடியன. ஏனையவை விறகிற்கு மட்டுமே பயன்படக்கூடியவை.

உ) **கோப்பி, தேயிலை, கொக்கோ போன்ற பயிர்களை வளர்ப்பதற்காக இக்காடுகள் அழிக்கப்பட்டுள்ளதால்** காடுகளின் அளவு குறைவாக உள்ளது.

**43.** இடை வெப்ப வயலக்காடுகள்

அ) **இக்காடுகள் ஈரவலயத்தையும் உலர் வலயத்தையும் பிரிக்கும் எல்லைப் பிரதேசங்களில் இரு புறங்கிலும் அமைந்துள்ளது.**

ஆ) **இங்கு உலர் வலய, ஈரவலயத் தாவரங்கள் உள்ளன.**

இ) ஆரம்பத்தில் காணப்பட்ட தாவரங்கள் தேவைகளுக்காக அகற்றப்பட்டு விட்டன. இப்பொழுது தோட்டப் பயிர்ச் செய்கையின் கீழ் **மகோகனி பலா,** போன்ற தாவரங்கள் காணப்படுகின்றன.

**44.** புல்வெளிகள்

அ) **பத்தனைப் புல்வெளிகள்:-** ஈரவலய, **உலர்வயல புன்னிலம்** என இருவகைப்படும். மத்திய மலை நாட்டின் ஈரஉலர் வலயங்களில் 1520 மீற்றரிலும் உயர் பிரதேசங்களில் காணப்படுகின்றன.

ஆ) **ஈரவலயப் புல்வெளி:-** றோட்டன் சமவெளி - போபத்தலாவ, எல்க் சமவெளி, சீதாஎலிய, உயர் சமவெளிகளில் உள்ளன.

அ) **வறள் வலய பத்தனாக்கள்:- ஊவாப் பள்ளத்தாக்கில் பெரும் பாலும் உள்ளன.** மானா, இலூக் போன்ற தடித்த புல் வகைகள் இங்கு காணப்படுகின்றன. **பைன்ஸ், யூகலிப்ரஸ், அக்கேசியா** போன்ற மரங்கள் அதிகமாகப் பயிரிடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. தலாவ புல்வெளிகள்

* **சவானா** என்றழைக்கப்படும் இப்புல் வெளிகள் **பிபிலை, லுணுகல,** அம்பாறை போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்றன.

* வடகீழ் பருவக்காற்றினால் கிடைக்கும் **குறைந்த மழைவீழ்ச்சியும்,** தென்மேல் பருவக்காற்றுக் காலத்தில் நிலவும் **வரட்சியும் வேகமாக வீசும் உலர் காற்றும், மெல்லிய மண் படையும்** புல் வெளிகளின் வளர்ச்சிக்கு உதவியுள்ளன.

* "இலூக்" எனப்படும் தீப்பற்றும் தன்மையுடைய புற்கள் அதிகம் காணப்படுகின்றன. இடையிடையே மரங்களையும் தனித்துக் காணலாம்.

## 46. பற்றை முட்காடுகள்

* இக்காடுகள் இலங்கையின் வடமேற்குத் தென்கிழக்கு **மன்னார், அம்பாந்தோட்டை** பிரதேசங்களில் காணப்படுகின்றன.

* 1000 மில்லி மீற்றருக்குக் குறைவான மழைவிழ்ச்சியைப் பெறும் பிரதேசமாகும். **நீண்ட கால வரட்சி காணப்படுவதால் பெரும் மரங்கள் வளர்வதில்லை. முட்புதர்களும் பற்றைகளுமே உள்ளன.**

* காரை, சூரை, ஈச்சை, கள்ளி முதலிய பற்றைகளும், கள்ளிச் செடிகளும், உட் பிரதேசத்தில் மிகச் சிறுமரக் காடுகளும் உள்ளன.

## 47. கண்டல் தாவரங்கள்

* **ஆற்றுக்கழிமுகங்களிலும், களப்புப் பிரதேசங்களிலும் காணப்படும் கடற்கரையைச் சூழலுக்குட்பட்ட ஒருவகை இயற்கைத் தவரமாகும்.**

* யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, நீர்கொழும்பு, புத்தளம் ஆகிய பிரதேசங்களில் நதி முகத்துவாரங்களிலும் இவை காணப் படுகின்றன. இவ்வாறு இலங்கையின் வடமேற்குப் பிரதேசத்திலிருந்து தென்கிழக்கு வரையில் பரந்துள்ளது.

* **1000-1250 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி, 27°C லும் கூடிய வெப்பநிலையுள்ள பிரதேசங்களில் இவை வளரும்.**

* **கண்டல் தாரவங்களின் பயன்கள்:- (1) கடல்வாழ் உயிரினங்களின் வளர்சிக்கு உதவும் (2) களப்புகள், முகத்துவாரங்கள் கடலரிப்பில் இருந்து பாதுகாக்க இவை உதவும்.**

## 48. காடுகள் அழிக்கப்படுவதற்குரிய காரணங்கள்

(1) **சனத்தொகை அதிகரிப்புடன் கூடிய அத்தியாவசியத் தேவைகள்: சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப விவசாய நடவடிக்கைகள் கட்ட டங்கள், பாதைகள், அமைக்கவும், கைத்தொழில் நிலையங்கள் அமைக் கவும் மரப்பலகைத் தேவைக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடம் | சனத்தொகை (மில்லியனில்) | காடுகள் ஹெக்டேயரில் (ஆயிரத்தில்) | முழுநிலப்பரப்பும் காடுகளின் அளவும் |
|---|---|---|---|
| 1900 | 3.5 | 112 | 70% |
| 1956 | 8.0 | 80 | 44% |
| 1981 | 15.0 | 40 | 24% |
| 1992 | 17.0 | 33 | 23% |


(2) **சேனைப் பயிர்ச் செய்கைக்காக காடுகள் அழிக்கப்படல்;** உலர் வலயத்தில் சேனைப் பயிர்ச் செய்கைக்காகப் பெறுமதி மிக்க மரங்கள் அழிக்கப் படுகின்றன. காட்டை எரித்தே சேனைப் பயிர்ச் செய்கைக்கு நிலம் பெறப்படுகின்றது.

(3) காடழித்தல் அவசியமின்றிக் காடுகள் வெட்டப்படுவதால் காடுகளின் அடர்த்தி குறைகின்றது.

(4) **விறகுத் தேவைக்காக காடழித்தல்;** நமது நாட்டின் எரிபொருள் 90% விறகாகும். கிராமப் புறங்களில் விறகு அதிகமாகப பயன் படுத்தப்படுவதால் பெறுமதி மிக்க மரங்கள் வெட்டப்பட்டு விறகு பெறப்படுகின்றது.

## 49. இயற்கைத் தாவரத்தின் பயன்கள்

* பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் பல தேவைகளுக்கு இயற்கைத் தாவரங்கள் உபயோகிக்கப்படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) சூழல் தொகுதியின் சமநிலைத் தன்மையைப் பேண உதவுகின்றது.

(1) ஒட்சிசன் வாயுவைத் தயாரிக்கின்றது.

(2) அசுத்தமான காற்றைச் சுத்தமாக்குகின்றது.

(3) காட்டு விலங்ககளின் வாழ்விற்கு உதவுகின்றது.

(4) மண் வளத்தைப் பாதுகாக்கின்றது.

(5) மண் அரிப்பைத் தடுக்கின்றது.

(6) சூழல் மாசடைதலைத் தடுக்கும் முக்கிய காரணியாகத் தொழிற் படுகின்றது.

ஆ) இயற்கையைப் பாதுகாக்க உதவுகின்றது.

(1) இயற்கைத் தாவரங்கள் இயற்கை அழகை அளிக்கின்றன.

(2) சூழலில் வாழும் நில, நீர் வாழ் உயிரினங்கள் விலங்குகள் வாழ்விற்கு உதவுகின்றது.

(3) இயற்கை விஞ்ஞான ஆய்வுகூடமாக விளங்குகின்றது.

இ) பொருளாதாரக் காரணங்களுக்கு இயற்கைத் தாவரங்கள் உதவுகின்றன.

(1) கட்டடங்கள் அமைக்க மரப்பலகை உதவும்.

(2) விறகு எரிபொருளாகப் பயன் படுகின்றது.

(3) பசளையைப் பெறக்கூடியதாக உள்ளது.

(4) உணவு மூலிகைகள், இரசாயனப் பொருட்களைப் பெற முடிகின்றது.

(5) பொதி செய்யும் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

(6) உபகரணங்கள் அமைக்க உதவுகின்றது:- உ+ம் படச்சட்டங்கள், விளையாட்டுப் பொருட்கள், ஆயுதங்களுக்கென கைபிடிகள்

**50.** காட்டுவளம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அடிப்படைக் காரணிகள்.

(1) புவியில் வாழும் உயிரினங்களின் வாழ்க்கையையும் இனவிருத்தியையும் உறுதிப்படுத்தல்.

(2) மீனினங்கள் காட்டு விலங்குகள், புன்னிலங்கள் போன்ற வளங்களைப் பேணிப்பாதுகாத்தல்.

(3) உயிர் கோளத்திலுள்ள இனங்களின் தொகையை அதிகரிக்கச் செய்தல்.

(4) விசேட உயிரினங்கள் புவியிலிருந்து அழிதலைத் தடுத்தல்.

**51.** காட்டு வளத்தைப் பாதுகாக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள்.

(1) மரம் நடும் திட்டத்தினைத் தேசிய ரீதியில் செயற்படுத்தல்.

செப்ரம்பர் 1ம் திகதி மரநடுகைத் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மரங்களைச் சட்ட விரோதமாக வெட்டுவோருக்குத் தண்டனைகள் வழங்குதல்.

(3) காடு வளர்ப்புத் திட்டங்களை உள்ளூர் வெளிநாட்டு உதவியுடன் நடைமுறைப்படுத்தல்.

(4) தேசிய வனப் பூங்காக்களைப் பேணுதல்.

(5) ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டம் மூலம் வெளிநாட்டு உதவிகளைப் பெறல்.

## 05. உணவுப் பயிர்கள்

**52.** நெற்பயிர்ச் செய்கையின் முக்கியத்துவம்.

(1) இலங்கையில் தானிய விவசாயத்தில் நெற்செய்கை முக்கியமானதாகும்.

(2) வாழ்வாதாரப் பயிர்ச் செய்கையில் நெற்பயிர்ச் செய்கை பிரதான மானதாகும்.

(3) புராதன காலந்தொட்டு நெற்பயிர் பிரதான பயிராக விளங்கி வருகின்றது.

(4) நெல் பயிரிடப்படும் நிலப்பரப்பின் அளவு பயிர்ச் செய்கைக்கான நிலப்பரப்பில் முதலிடம் பெறுகின்றது.

(5) மற்றைய தானியங்களைவிட நெல்லே பிரதான உணவாக விளங்கு கின்றது.


(6) நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை கூடுதலானதாகும்.

(7) இலங்கையில் ஆரியர் குடியேற்றங்கள் நெற்பயிர்ச் செய்கைக்கு ஏற்ற காலநிலை, நீர் வசதிக்கேற்ற இடங்களிலேயே அமைந்திருந்தன.

(8) சிங்கள மன்னர்கள் அணைகள், குளங்கள், கால்வாய்கள் அமைத்து நெற்ச்செய்கைக்கு வேண்டிய நீரை அளித்தனர்.

(9) 13ம் நூற்றாண்டில் அன்னியரின் ஆக்கிரமிப்பால் பாதிப்படைந்த நெற்பயிர்ச் செய்கை 19ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வரண்ட வலய நீர்ப்பாசன முறைகளைப் புனருத்தாரணம் செய்ய ஆரம்பித்ததைத் தொடர்ந்து அபிவிருத்தி அடைந்தது. நெல் உற்பத்தியும் அதிகரித்தது.

இலங்கையின் நெல் உற்பத்தி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**53.** நெற்பயிர்ச் செய்கை இடம்பெறும் பிரதேசங்கள்.

(1) தாழ்பிரதேச வரண்ட வலய நிலங்கள்

(2) தாழ்பிரதேச ஈரவலய நிலங்கள்

(3) மலைப் பகுதி சார்ந்த நிலங்கள்

**54.** தாழ்பிரதேச வரண்ட வலய நெற்பயிர்ச் செய்கை.

(1) **நெற்பயிர்ச் செய்கை நடைபெறும் பிரதான மாவட்டங்கள்:-** குருணாகல், அநுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, பொலனறுவை, அம்பாறை, யாழ்ப்பாணம், வவுனியா.

(2) **நெற்செய்கை மேற்கொள்ளப்படும் இரண்டு போகங்கள்:-**

சிறுபோகம்:- ஏப்ரல் - செப்ரம்பர் வரை

மகாபோகம்:- ஒக்ரோபர் - மார்ச் வரை

(3) **மகாபோகத்தில் அதிகளவில் நெற்பயிர்ச் செய்கை இடம் பெறுகின்றது:-** மழைவீழ்ச்சி அளவு போதியதாக இல்லாதமையால் நீர் விநியோகம் அவசியமாக உள்ளது.

(4) **சேனைப்பயிர்ச் செய்கை:-** வடமத்திய, வடமேற்கு, கிழக்கு, மகாணங்களில் மேற்கொள்ளப் படுகின்றது.

**55.** தாழ்நாட்டு ஈரவலய நெற்பயிர்ச் செய்கை

(1) **நெற்பயிர்ச் செய்கை நடைபெறும் பகுதிகள்:-**

* ஜின்கங்கை, பெருந்தோட்ட ஆற்றுப்பள்ளத்தாக்குகளில்.
* கொழும்பு, குருணாகல், மாவட்டத் தாழ் சம நிலங்களில்

(2) **மழைநீரில் நெற்பயிர்ச் செய்கை தங்கியுள்ளது.:-** அதிகளவு மழை வீழ்ச்சியினால் நெற்பயிர்ச் செய்கை அழிவுறும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

(3) **சிறுபோகம், பெரும்போகம்** இரண்டிலும் நெற்பயிர்ச் செய்கை நடை பெறுகின்றது.

**56.** மலைப்பிரதேசத்தில் நெற்பயிர்ச் செய்கை

* இப்பிரதேசத்தில் 300-900 மீற்றருக்கு இடைப்பட்ட உயரமுள்ள பிரதேசங்களில் இடம்பெறுகின்றது.
* கண்டி, பதுளை, மாவட்டங்கள் நெற்பயிர்ச் செய்கைக்கு முக்கியமான வையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மலைப் பிரதேசத்தில் படிவரிசையில் ஒடுங்கிய வயல்களில் நெற்பயிர்ச் செய்கை இடம் பெறுகின்றது.
* இலங்கையின் நெல் உற்பத்தியில் 10% மட்டுமே இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

**57. நெற்பயிர்ச் செய்கைக்கு அவசியமான காரணிகள்.**

(1) வெப்பநிலை:- 21-32 சென்ரிகிரேட் வரை


(2) மழைவீழ்ச்சி: 1900 மில்லி மீற்றர் வரை

(3) மண்அமைப்பு:- நீரைப் பற்றி வைத்திருக்கக் கூடிய அளவுக்கு 30-40% களிமண்

(4) நெற்பயிர் வளரும் காலம்:- குறிப்பிட்டளவு நீர் அவசியம்.

(5) அறுவடைக் காலம்:- நீர் அதிகமாகக் காணப்பட்டால் விளைச்சல் கெட்டுவிடும். நெல்மணிகள் பழுதடையும்.

**58. நெற்பயிர்ச் செய்கையில் பின்பற்றப்படும் முறைகள்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூற்றுதல்





கொண்டுசெல்லல்





நெல் குற்றல்



| மரபு முறை | நவீன முறை |
|---|---|
| (1) உழுவதற்கு மரக்கலப்பையைப் பயன்படுத்தல். | உழுவதற்கு உழுவு இயந்திரம் பயன்படுத்தல் |
| (2) மனித உழைப்பு மூலம்நாற்று நடுதல், பயிரிடுதல்,விதை நெல்லை வீசி விதைத்தல் | விதைகளை வரிசையாக விதைத்தல், நாற்றுக்களை வரிசையாக நடுதல். |
| (3) பூச்சிகளை கொல்ல புகையை பாவித்தல் வேம்பு விதைகளைப் பயன்படுத்தல் | களைகொல்லிகள், பூச்சி கொல்லிகள், போன்ற இரசாயனப் பொருட்களை உபயோகித்தல். |
| (4) எரு போன்ற இயற்கைப் பசளையிடுதல் | இரசாயனப் பசளையிடுதல் |
| (5) சூடுமிதித்தல், நெல்தூற்றுதல் கொண்டு செல்தல் ஆகியவற்றிற்கு மனித உழைப்பையும். கால் நடைகளையும் பயன்படுத்துதல். | உழவு இயந்திரம், சூடடிக்கும் இயந்திரம் பயன்படுத்துதல். |

**59.** நெற்பயிர்ச் செய்கை தொடர்பான பிரச்சனைகள்.

(1) நெற்செய்கையும் அதனோடு இணைந்த மனப்பாங்குகளும்.

(2) நிலம் துண்டாடப்படல்.

(3) நீர்பற்றாக்குறை, கோடை வரட்சி

(4) மிதமிஞ்சிய நீர் – வெள்ளப்பெருக்கு.

(5) கிருமிகளால் ஆபத்து – பூச்சிகளின் தொல்லை.

(6) பசளைகள் பாவித்தல் குறைவு – விலை அதிகரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) வறுமையும் கடன் தொல்லைகளும்.
(8) விளைச்சல் கூடிய நெல்லினங்களைப் பாவிக்காமை.
(9) நெற்பயிர்ச் செய்கையில் இலாபம் குறைவடைதல்.
(10) நவீன தொழில் நுட்பங்களை அறியாதிருத்தல்.
(11) இரசாயனப் பொருட்களின் உபகரணங்களின் விலை அதிகரிப்பு.
(12) விவசாயத்தில் ஆர்வமில்லை. இதனைத் தாழ்ந்த தொழிலாகக் கருதல்.

60.

| நெற்பயிர்ச்செய்கை தொடர்பான பிரச்சனைகள் | தீர்வுகள் / நடவடிக்கைகள் |
|---|---|
| (1) நீர்ப் பற்றாக்குறை | நீர்பாசன முறைகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. உ+ம்: கல்லோயா, உடவளவை, துரித மகாவலி பலநோக்கு அபிவிருத்தித் திட்டங்கள். |
| (2) அதிக விளைச்சலைத் தரும் நெல்லினங்கள் குறைவு. | ஹிங்குராங்கொட, மகா இலுப்பல்லம, பத்தலகொட ஆகிய நெல் ஆராய்ச்சி நிலையங்கள் வெற்றிகரமாகப் புதிய நெல்லினங்களை அறிமுகம் செய்துள்ளன. |
| (3) வறுமையும் கடன்களும் | கிராமிய வங்கிகள் மூலம், குறைந்த வட்டிக் கடனுதவிகள் வழங்கப்படுகின்றது. |
| (4) பசளை பாவித்தல் குறைவு, கிருமிகளால் ஆபத்து | விவசாயத் திணைக்களம் ஆலோசனைகளை வழங்குகின்றது. |
| (5) இலாபம் குறைதல், வறுமை | உத்தரவாத விலைத்திட்டம், இயற்கை அழிவுக்கு நட்டஈடு, ஓய்வூதியத் திட்டம், நெற்காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தபடுகின்றன |

61. வேறு உணவு தானியங்கள்

**குரக்கன்:-** (1) சேனைப் பயிர்ச் செய்கையினால் பயிரிடப்படுகின்றது. (2) அம்பாறை, மாத்தளை, அம்பாந்தோட்டை, வவுனியா, மொனராகலைப் பிரதேசங்களில் பயிரிடப்படுகின்றது. (3) குரக்கன் வரட்சியைத் தாங்கும் பயிர். குறைந்த மழைவீழ்ச்சிப் பிரதேசங்களில் (1000 மி. மீற்றர்) பயிரிடக் கூடியது. (4) விதைத்து நான்கு மாதங்களில் அறுவடை செய்யலாம். (5) குரக்கன் போசணை மிக்க தானியம்.

**சோளம்:-** (1) அதிகளவில் பயிரிடப்படும் மாவட்டங்கள், பதுளை, அம்பாறை, மொனறாகலை (2) தேவையாக மழைவீழ்ச்சி 625-1000 மில்லி மீற்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) விதைத்து மூன்று மாதங்களின் பின் விளைச்சல் கிடைக்கின்றது.

**பருப்புவகைகள்:-** பயறு, கௌப்பி, கடலை, உழுந்து, சோயா. சோயாவிலிருந்து சோயா மா, சோயா ஐஸ்கிறீம், சோயா இடியப்பம், சோயா சோஸ் எனப் பல வகைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**கிழங்கு வகைகள்:-** வத்தாளைக்கிழங்கு, மரவள்ளி, உருளைக் கிழங்கு, கருணைக்கிழங்கு, இராசவள்ளி, பால்வள்ளிக்கிழங்கு. **உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்படும் பிரதான மாவட்டங்கள்:** யாழ்ப்பாணம், நுவரேலியா.

**உணவைச் சுவையூட்டும் வாசனைத் திரவியங்கள்:-** மிளகாய், மஞ்சள், கொத்தமல்லி, கடுகு, மிளகு, வெந்தயம், வெங்காயம், கறுவா, கருவேப்பிலை, சீரகம், ஏலம், கராம்பு

**62.** வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைத் துறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவும் அறுவடையும் (1996).

| வகை | காணியின் அளவு | அறுவடை மெ. தொன்கள் |
|---|---|---|
| நெல் | 249814 | 2061540 |
| குரக்கன் | 6132 | 3.9 |
| சோளம் | 31016 | 32.9 |
| உழுந்து | 9063 | 7.4 |
| பயறு | 18241 | 16.6 |
| மிளகாய் | 260 88 | 18.4 |
| உருளைக்கிழங்கு | 6103 | 100.8 |
| ஈரவெங்காயம் | 6564 | 43.7 |

**63.** இலங்கையில் காய்கறிகள் பயிரிடப்படும் பிரதேசங்கள்.

(1) உலர்வலயக் காய்கறிகள் உற்பத்தியில் யாழ்ப்பாணக் குடாநாடு முக்கியமானது.

(2) மலைநாட்டு உலர்வலயக் காய்கறி உற்பத்தியில் நுவரேலியா, பதுளை, வெலிமட, பண்டாரவளை, முக்கிய பிரதேசங்களாகும்.


மலைநாட்டு உலர்வலயக் காய்கறிகள்


ஈரவலயக் காய்கறிகள்


உலர்வலயக் காய்கறிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை

**64.** வர்த்தக விவசாயத்தின் பிரதான அம்சங்கள் (பண்புகள்)

* வர்த்தக விவசாயத்திலுள்ள பயிர்கள் பெருந்தோட்டப் பயிர்கள்.

(1) நுகர்வை விட பணமீட்டும் நோக்குடைய பயிர்ச் செய்கை.

(2) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அன்னியச் செலவாணியைப் பெற்றுத் தருகின்றது. (ஏறக்குறைய 37% பெறப்படுகின்றது)


(3) ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுகின்றது. (தேயிலையிலும் இறப்பரிலும் 90% ஏற்றுமதி செய்யப்படுகின்றது)

(4) பெருந்தோட்டங்களில் பயிரிடப்படுகின்றது. (50% தேயிலைத் தோட்டங்கள் 200 ஹெக்ரேயருக்கும் அதிகமானவை.

(5) பெருந்தொகையானோருக்கு வேலை வாய்ப்பளிக்கின்றது.

(6) முன்னேற்றமான தொழில்நுட்ப முறைகள் கையாளப்படுகின்றன.

பிரதான பெருந்தோட்ட உற்பத்திகள்



தேயிலை

இறப்பர்

தென்னை

**65.** பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை வரலாறு.

(1) **பிரித்தானியர்** பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்து விருத்தி செய்தனர்.

(2) ஆளுநர் எட்வேர்ட் பாண்ஸின் ஊக்குவிப்பினால் **1823ல் முதலாவது கோப்பித் தோட்டம் கம்பளையில் ஆரம்பிக்கப்பட்டது.**

(3) 1870ல் கோப்பித் தோட்டங்கள் பங்கசு நோயினால் பாதிக்கப்பட்டு 1880ல் முழு அளவில் பரவி அழிவுற்றது.

(4) **தேயிலைச் செடி 1839ல் அறிமுகம் செய்யப்பட்டது.** பேராதனைத் தாவரப் பூங்கா தோட்டத்திலும், நுவரேலியா அரச மாளிகைத் தோட்டத்திலும், ஹக்கலைத் தாவரப் பூங்காத் தோட்டத்திலும் தேயிலைச் செடி முதலில் நாட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) பொருளாதார ரீதியாகத் தேயிலையைப் பயிரிடத் தொடக்கியவர் பிரித்தானியரான ஜேம்ஸ் ரெயிலர் (1867ல்)

(6) ஜேம்ஸ் ரெயிலர் தேயிலைத் தோட்டத்தை ஆரம்பித்த இடம்: கண்டியிலுள்ள ஹேவா ஹெற்ற லூல்கந்த தோட்டத்தில் 7.5 ஹெக்டயரில் (18 ஏக்கரில்) பயிரிடப்பட்டது.


ஜேம்ஸ் ரெயிலர்

**66.** இலங்கையில் தேயிலை பயரிடப்படும் மாவட்டங்கள்

(மாவட்டங்கள் தேயிலை பயிரிடப்படும் மொத்த நிலப்பரப்பின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது.)

நுவரேலியா, பதுளை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, கண்டி, மாத்தளை, கேகாலை

**67.** தேயிலை உற்பத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பு தேயிலை உற்பத்தி ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களைக் காட்டும் அட்டவணை:

| | தேயிலை உற்பத்தி நிலப்பரப்பு (ஹெக்டேயர்) | | தேயிலை உற்பத்தி (கி. கி. மில்லியனில்) | |
|---|---|---|---|---|
| **பிரதேசம்** | *1983* | *1994* | *1983* | *1994* |
| **உயர்நிலம்** | *97563* | *82312* | *67.7* | *76.7* |
| **மத்தியநிலம்** | *42188* | *27416* | *48.4* | *47.4* |
| **தாழ்நிலம்** | *67396* | *79239* | *63.1* | *118.1* |

* 1983 - 1994 பத்து ஆண்டுகளில் முழுத் தேயிலை உற்பத்தி 35 சத வீதத்தாலும் தாழ்நிலத் தேயிலை உற்பத்தி 87 சதவீதத்தாலும் அதிகரித்திருப்பதைக் காணலாம். மத்திய உயர்நிலத் தேயிலை அதிகரிக்கவில்லை.

**68.**

| தேயிலை வகை | பயிரிடப்படும் நில உயரம் |
|---|---|
| உயர்நிலத் தேயிலை | *1200 மீற்றருக்கு மேல்* |
| மத்திய நிலத் தேயிலை | *600 - 1200 மீற்றருக்கு இடைப்பட்ட நீலம்* |
| தாழ்நிலத் தேயிலை | *600 மீற்றருக்குக் குறைவான உயர் நிலம்* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. தேயிலைப் பயிர்ச்செய்கையில் மேற்கொள்ளும் தொழிற்பாடுகளும் தொழிலாளர் நவீனத்துவமும்

(1) பயிர்ச்செய்கை நிலத்தை ஆயத்தப்படுத்தல்.
(2) கல் அணைகளையும் கான்களையும் வெட்டுதல்.
(3) நிழல் தரும் மரங்களை நடல்.
(4) நாற்றுமேடை பராமரித்தல்.
(5) பசளை இடுதல்
(6) செடிகளை வெட்டி அளவாக்குதல்.
(7) கொழுந்து பிடுங்குதல்.
(8) கப்பாத்துச் செய்தல்.
(9) நாற்று நடுதல்.
(10) நோய்கிருமிகளை அழித்தல்.

## இலங்கையில் இறப்பர் உற்பத்திகளும் சந்தைப்படுத்தலும்

70. இறப்பர் உற்பத்திவகைகள்:-

* சீற் இறப்பர், கிரேப் இறப்பர், துண்டாக்கப்பட்ட இறப்பர் (மூலப்பொருளாக 65% ஏற்றுமதி செய்யப்படுகின்றது)

71. இறப்பர் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள்:-

சீனா, (பிரதான நாடு) பங்களாதேஷ், ஐக்கிய இராச்சியம், ஈராக், யாப்பான், கொரியா, பாகிஸ்தான், சிங்கப்பூர், மெக்ஸிக்கோ, ஜேர்மனி

72. இறப்பரை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்கள்:-

| மூலப்பொருள் | தயாரிக்கப்படும் பொருள்கள் |
|---|---|
| இறப்பர் விதை | எண்ணெய், மிருகஉணவு |
| இறப்பர் பால் | பலூன்கள், கையுறைகள், இறப்பர் பட்டி, மெத்தைகள் |
| சீற் இறப்பர், கிரேப் இறப்பர் | டயர், இறப்பர் பந்து, கால்துடைப்பு, இறப்பர் சப்பாத்து, குழாய், படுக்கைவிரிப்பு |
| இறப்பர் பலகை | தளபாடங்கள், விளையாட்டுப் பொருட்கள், தேயிலைப் பெட்டி, விறகு |

73. இறப்பர்ச் செய்கையின் பிரச்சனைகளும் தீர்வுகளும்

| பிரச்சனைகள் | தீர்வுகள் |
|---|---|
| *(1) நவீன உற்பத்தி முறைகளைக் கடைப்பிடிக்காமை.*<br>*(2) உற்பத்திச் செலவு அதிகரித்தல்* | * *சிறந்த இறப்பர் இனங்களை விருத்தி செய்தல்.*<br>* *இறப்பர்மர நோய்களைக் கட்டுப்படுத்தல்.*<br>* *சிறு தோட்டங்கள் புனரமைப்பு மானியம் வழங்கப்படல்.* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (3) அதிகரித்துச் செல்லும் செலவுகள் | * உற்பத்திச் செலவுகளைக் குறைத்தல். |
| (4) உழைப்புச் சம்மந்தமான பிரச்சனைகள் | * மீள் நடுகைக்கு மாண்யம் வழங்கப்படல். |
| (5) சந்தைப் படுத்தும் பிரச்சனைகள் (இறப்பருக்கான விலைத்தளம்பல்) | * இறப்பர் கட்டுப்பாட்டுச் சபை பசளைகளை வழங்கல் |
| (6) செயற்கை இறப்பர் உற்பத்தி | * இறப்பர் விலையை உறுதியாக வைத்திருக்க உங்ராட் மூலம் ஒப்பந்தம் செய்தல். |
| (7) உலக ஏற்றுமதியில் 5%லும் குறைந்த பகுதியை உற்பத்தி செய்தல் | * திட்டமிட்ட விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ள |
| (8) சீரற்ற காலநிலை (அதிகரித்த மழையால் இறப்பர்பால் உற்பத்தி பாதிப்படைதல்) | * உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்களை அமைத்தல். |
| | * நவீன உற்பத்தி முறைகளைக் கடைப்பிடித்தல். |

## தென்னைப்பயிர்ச் செய்கை

**74.** தென்னைப்பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய வரலாறு

(1) விஜயன் இளநீர் பருகியதாகப் புராணக் கதைகள் கூறும்.

(2) துட்டகைமுனுவின் காலத்தில் மிக உயர்ந்த தென்னை மரங்கள் காணப்பட்டுள்ளது.

(3) அனுராதபுரக் காலத்தில் துவாரகபாலகர் உருவங்களில் தென்னைச் செல்வத்தை பற்றிக் குறிப்புகள் உள்ளது.

(4) இரண்டாம் அக்போ காலத்தில் தென்னைச் செய்கைக்கு அரச ஆதரவு வழங்கப்பட்டது.

(5) ஒல்லாந்தர் ஆட்சியில் கரையோரப் பிரதேசங்களில் தென்னைச் பயிர்ச் செய்கைக்கு ஆதரவு வழங்கப்பட்டது.

(6) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தென்னைப்பயிர்ச் செய்கை நிலம் அதிகரிக்கப்பட்டது. பெருந் தோட்டப்பயிராகியது.

**75.** தென்னைப்பயிர்ச் செய்கைக்கான பௌதீக காணிகள்

**வெப்பநிலை** : 20°C - 21°C வெப்பநிலை

**மழைவீழ்ச்சி** : 2000 - 2800 மில்லி மீற்றர் வருடாந்த மழைவீழ்ச்சி

**நிலம்** : 300 மீ மீற்றருக்கு குறைந்த உயரமுடைய பிரதேசங்கள்

**மண்** : மணல்மண் (நன்றாக நீர் வழிந்தோடக் கூடிய எந்த மண்ணிலும் வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 76. தென்னைப்பயிர் பரம்பல் பிரதேசங்கள்

* இலங்கையில தென்னை தென்மேல் தாழ நிலங்களில் அடர்த்தியாக உள்ளது
  கொழும்ப. சிலாபம். குருணாகல் ஆகிய நகரஙகளை இணைககும முக்கோணப பிரதேசத்தில அதிகளவில காணப்படுகின்றது
* கொழும்பு தொடக்கம தங்காலை வரையுள்ள கரையோரப்பகுதியிலும
* மட்டக்களப்பு யாழப்பாணப் பகுதிகளிலும் தென்னை பயிரிடப்படுகினறது

## 77 தென்னை தொடர்பான உற்பத்திகள்

அ) **தேங்காய் தொடர்பான உற்பத்திகள்:-**
தேங்காய் துருவல். தேஙகாய் எண்ணெய. கொப்பரா. பிண்ணாக்கு. இளநீர். சாயவகை. ஐஸ்கிறீம். மாஜரின். சவாககாரம். பிஸ்கட். சம்பு. கேக். பதப்படுத்திய தேங்காய். வினாகிரி

ஆ) **சிரட்டையுடன் கூடிய உற்பத்திகள்:-**
கரண்டி. நுளம்புச்சுருள். இடுப்புப்பட்டி. பொத்தான்

இ) **நாருடன் கூடிய உற்பத்திகள்:-**
கயிறுகள். தூரிகைகள். காற்துடைப்பம். அலங்காரப் பொருட்கள். மெத்தைகள

ஈ) **தென்னோலையுடன் கூடிய உற்பத்திகள்:-**
வீடு வேய்தல். பாய். விளக்குமாறு. பெட்டி. காசுப்பை. தொப்பி

உ) **தென்னைமரம் தொடர்பான உற்பத்திகள்:-**
மரத்தளபாடம். மரக்குற்றிகள். தளபாடங்கள்

## 78. தென்னைப்பயிர்ச் செய்கை தொடர்பான பிரச்சனைகள். தீர்வுகள்

| பிரச்சனைகள் | தீர்வுகள் |
|---|---|
| (1) ஹெக்ரோயரக்கிடைக்கும் வருமானம் குறைவடைதல்<br>(2) தென்னைப்பயிர்ச் செய்கைக்கு நிலம் குறைவடைதல்:-<br>(3) பசளை பாவித்தல் குறைவடைதல்<br>(4) விளைச்சல் குறைதல் (சிறு தென்னந்தோப்புகளில் விளைச்சல் குறைவாக காணப்படுதல்) | *அரசின் மான்ய உதவியுடன் புதிய தென்னம்பிள்ளைகளை நடுதல்.<br>*மீள்நடுகை மேற்கொள்ளுதல்.<br>*மான்ய முறையின் கீழ் பசளை வழங்கல். மேலதிக வருமானம் பெறல்.<br>*வாழை. அன்னாசி. மிளகு. கோப்பி போன்ற சிறுபயிர்கள் அல்லது கால்நடைகளை வளர்த்தல்.<br>*வீட்டுத் தோட்டங்களைப் பராமரிக்க மான்யம் வழங்கல். |
| (5) நோய்கள். கிருமிகளால் தீங்கேற்படுதல்<br>(6) வெளிநாட்டுச் சந்தை | *தென்னை ஆராய்ச்சி நிறுவனம் ஊடாக நோய்களைக் கட்டுப்படுத்த ஆலாசனை வழங்கல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வாய்ப்பு குறைவடைதல்<br>(7) தெங்குப் பொருட்கள் குறைந்த அளவில் ஏற்றுமதி செய்யப்படல்<br>(8) மாற்றீட்டுப் பொருள்கள் காணப்படல்.<br>(9) தொழிற்சாலைகள் உற்பத்தித் திறனற்றுக்காணப்படல் | *ஏற்றுமதி பொருட்களின் தரத்தை உயர்த்துதல்.<br>*தெங்குத் தொழிற்சாலைகளை நவீன மயமாக்குதல்.<br>*பதனிடப்படுத்தப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தல். |

**79.** உலகில் தென்னை பயிரிடப்படும் பிரதேசங்கள்

**ஆசியா** : இந்தியா. இலங்கை. மியன்மார். தாய்லாந்து. பிலிப்பீன்ஸ். மலேசியா. இந்தோனேசியா. சுமாத்திரா. யாவா. கம்பூட்ச்சியா

**ஆபிரிக்கா** : சோமாலியா. தன்ஸானியா. மொசாம்பிக். நைஜீரியா. லைபீரியா. சியாராலியோன். கம்பியா. மடகாஸ்கர்

**அமெரிக்கா** : பிாத்தானியா. கயானா. ரினிடாட். கிரெனடா. ஹொன்டுராஸ்

**80.** சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

கோப்பி,
கொக்கோ,
கராம்பு, கறுவா.
மிளகு, ஏலக்காய்,
சாதிக்காய்,
மிளகாய், மஞ்சள்,
அன்னாசிப்பழம்,
வெற்றிலை,
சணல், மலர்கள்,
பாம்எண்ணெய்,
மரமுந்திரிகை




**81.** சிறு ஏற்றுமதிப் பயிர்கள் சாதகமான பௌதீகக் காரணிகள்

| பயிர்கள் | வளரும் பிரதேசங்கள் | பௌதீகக் காரணிகள் |
|---|---|---|
| கறுவா | நீர்கொழும்பு மாத்தறை வரையுள்ள கடற்கரைப் பிரதேசங்கள் இரத்தினபுரி. அம்பாந்தோட்டை | ஈர உலர் சமவெளிகள் |
| கோப்பி | களுத்துறை. இரத்தினபுரி. கேகாலை | 1700-200 மி.மீ மழைவீழ்ச்சி. உலர் காலநிலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கொக்கோ | மாத்தளை. கண்டி | *1250 மி.மீ மழைவீழ்ச்சி. 300-600 மீ. இடைப்பட்ட சரிவான நிலப்பகுதி.* |
| ஏலக்காய். கராம்பு | கண்டி. கேகாலை. இரத்தினபுரி. மாத்தளை | *1500 மி.மீ மழைவீழ்ச்சி* |
| மிளகு | கண்டி. மாத்தளை. கேகாலை | அதிக மழை. அதிக வெப்பம் |
| சாதிக்காய் | மாத்தளை. கண்டி. இரத்தினபுரி | அதிக மழை. உலர் காலநிலை |

* எதிர்காலத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ள சிறு ஏற்றுமதிப்பயிர்கள்: கோர்கின். சோளம். அந்தூரியம். ஓர்கிட்டு. கஜு. மரக்கறிவகைகள்.


கோப்பி

கொக்கோ

ஏலக்காய்

கராம்பு

சாதிக்காய்



# 07. மீன் பிடித் தொழில்

82. இலங்கையில் மீன் பிடித் தொழில் அபிவிருத்திக்குச் சாதகமான பௌதீகக் காரணிகள்

(1) இலங்கையில் 1770 கிலோமீற்றர் நீளமுள்ள நீண்ட கரையோரம் காணப்படுகின்றமை.

(2) அகன்ற கண்ட மேடை ஏறக்குறைய 2600 சதுரக்கிலோ மீற்றர் பரப்பில் பரந்து காணப்படுகின்றமை.

(3) இலங்கையில் பல்லுருவமான கரையோரத்தில் கடனீரேரிகள் குடாக்கள் காணப்படுகின்றமை.

(4) ஆறுகள். குளங்கள். குட்டைகள் போன்றன உள்நாட்டு நீர் நிலைகள் (1420 சதுர கிலோ மீற்றர் பரப்பில் உள்ளன).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**83.** கண்டமேடைகளில் மீனினங்களின் செறிவு கூடுதலாக இருப்பதற்குக் காரணம்

(1) கண்டமேடைகள் ஆழமற்ற கடற் பகுதிகளாக உள்ளதால் சூரிய வெப்பத்தை அதிகளவு பெறுகின்றது. மீன்களின் உணவுக்குரிய தாவரப் பிளாந்தன். விலங்குப் பிளாந்தன் துரிதமாக வளர்கின்றன.

(2) நதிகளின் மூலம் உள்நாட்டிலிருநது கொண்டு வரப்படும் காபனேற்றுப் பொருட்கள் (தாவரத் துணிக்கைகள்) மீன்களுக்கு உணவாகின்றன.

(3) நீரோட்டங்களின் செயற்பாடுகள் மூலம் கடலின் அடித்தளத்தில் உள்ள மீன் உணவுகள் மேற்பரப்புக்கு கொண்டு வரப்படுதல் மீன் வளப் பெருக்கத்திற்கு உதவுகின்றது.

மீன்பிடித் துறைமுகங்கள்




**84.** மீன்பிடித் தொழில் வகைகள்

| மீன்பிடித் தொழில் வகைகள் | மீன்பிடிக்கும் பகுதிகள் | மீனினங்கள் |
|---|---|---|
| ஆழ்கடல் மீன்பிடித்தொழில் | கடற்கரையிலிருந்து 320 கி. மீ தூரம் | மோரா. பாரைமீன். சூரைமீன். தளபத் கொப்ரா |
| நன்னீர் மீன்பிடித் தொழில் | ஆறுகள். குளங்கள். நீர்நிலைகள் குளம். குட்டைகள் | லூலா. கணவாய். திலாம்பியா. குறாமியா வரால். சேற்றுக்கொண்டை. கோழிக்கொண்டை. சுங்கன். நன்னீர்சுறா. கெளுத்தி |
| கரையோர மீன் பிடித்தொழில் | 2600 சதுரக் கி. மீ கண்டமேடை 22கி.மீ. அகலம் | நெத்தலிமீன். சாளைமீன். சிங்க இறால். நண்டு. சூரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 85. மீன்பிடி முறைகள் உபகரணங்கள்

| | மரபுரீதியானவை | நவீனமுறை |
|---|---|---|
| வலைகள் | கரைவலை. கைவலை. வீச்சுவலை. இறகுவலை | கெவுஸ்வலை. நைலோன்வலை |
| நாண்கள் | கயிறுகள். உபகரணம். கைத்தூண்டில். நூல்வலை | பல்கொழுக்கித் தூண்டில். மிதப்புவலை |
| கலங்கள் | தோணி. வள்ளம். தெப்பம். படகு. கட்டுமரம். பாய்ப்படகு | இழுவைக்கப்பல்கள் இயந்திரப் படகுகள். பைபர் கண்ணாடிப் படகுகள குளிர்சாதன வசதிக் கூடங்கள். எக்கோசவுண்டர |
| வேறு | சூரிய ஆயுதம். பொறிகள் | மீன்பிடிக்கணணிகள |

## 86. மீனவத் தொழில் பிரச்சனைகள். தீர்வுகள்

| பிரச்சனைகள் | தீர்வுகள் |
|---|---|
| மீனவர் கடன்பழு | *1964ல் கடற்தொழில் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டமை. |
| சந்தைப்படுத்தும் வசதிகள் குறைவாக உள்ளமை. | *மீன்களை நியாய விலையில் கொள்வனவு செய்ய உதவகின்றது. மீன்பிடிக் கூட்டுறவுச சங்கம் அமைக்கப்பட்டமை |
| உபகரணப் பற்றாக்குறை | *கடற்றொழில் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் ஏறபடுத்தப்பட்டமை. |
| மீனவ இளைஞர்கள் மீனவர் கைத்தொழிலை விட்டு வேறு தொழில்களுக்குச் செல்லுதல். | *அரசாங்க உதவிப் பணம் வழங்குதல் |
| | *மீன்பிடிப்பயிற்சி நிலையங்கள் அமைக்கப் பட்டமை. (மட்டக்குளி. நீர்கொழும்பு. தங்காலை) |
| நவீன தொழில் நுட்ப முறைகளை பின்பற்றாமை. | *அன்னிய நாட்டு நிபுணர்களை வரவழைத்து மீனவக் கைத்தொழிலை மேம்படுத்தல். |
| மீனவர் வருமானம் குறைவு | *கடற்றொழில் ஏற்றுமதிகளை அதிகரித்தல். (இறால். கடல்அட்டை. அழகிய மீன்கள். காளான் எண்ணெய்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87. நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில்

| | |
|---|---|
| (1) நன்னீர் மீன் வளர்ப்பு முறைகள் | (1) தூள் செய்து பரப்புதல்.<br>(2) சிறிய அணைகள் கட்டிப் பரப்புதல். |
| (2) நன்னீர் மீன்பிடி உபகரணங்கள் | வீச்சு வலை. தூண்டில். முள்வலை |
| (3) இனப்பெருக்கமும் ஆய்வுகளும் நடைபெறும் இடங்கள் | உடவளவை. தம்புள்ள. பதவியா.<br>இங்கினியாகலை. பொலநறுவை. நுவரெலியா |
| (4) அபிவிருத்தி செய்வதால் நன்மைகள் | * உடன் மீனைப் பெறலாம்.<br>* குறைந்த விலையில் பெறலாம்.<br>* உள்ளூர் உபகரணங்களைப் பயன்படுத்தலாம்.<br>* அன்னியச் செலவாணி அவசியமில்லை.<br>* வேலை வாய்ப்பு பெருகும். |

**நன்னீர் மீன்பிடி நிலையங்கள்:** பதவியா. தம்புள்ள. உடவளவை. இங்கினியாகலை. நுவரெலியா. பம்பரக்கலை

# 08. இலங்கையில் கால்நடை வளர்ப்பு

88. கால்நடை வளர்ப்பு என்றால் என்ன?

தனக்கு அவசியமான சேவைகளையும் உணவுகளையும் பெற்றுக் கொள்வதற்காக மனிதனுக்கு அவற்றை வழங்கக் கூடிய மிருகங்களைப் பிடித்து பாதுகாத்து வரும் தொழில் முறை கால்நடை வளர்ப்பு எனப்படும்.

89. மந்தை வளர்ப்பினால் ஏற்படும் பலன்கள்

(அ) விவசாய வேலைகளுக்கு சேவை வழங்கல்.

(ஆ) சூடு மிதித்தல். உழுதல். சேறாக்கல்.

(இ) பாற் பொருட்களை உற்பத்தி செய்தல்.

(ஈ) காய்ந்த சாணம். எலும்புப் பசளைகளை உற்பத்தி செய்தல்.

(உ) பாரம் இழுத்தல்.

(ஊ) இறைச்சி வழங்கல்.

(எ) உப பொருள் உற்பத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. தென்னை முக்கோணப் பிரதேசம் மந்தை வளர்ப்பதற்கான காரணங்கள் யாவை?

(அ) தென்னைப் பிரதேசத்தைச் செழிப்படையச் செய்வதற்கு.

(ஆ) தென்னைப் பயிரின் கீழ் புல் வளர்க்கக் கூடிய வாய்ப்புள்ளமை.

(இ) பால் சேகரிக்க, பதப்படுத்தச் சங்கங்கள் காணப்படுகின்றமை.

(ஈ) போதிய மக்கட் தொகையினர் அங்கு வாழுதல்.

(உ) மந்தைகளுக்கு போதிய மேய்ச்சல் நிலம் காணப்படுதல்.

91. இலங்கையில் மிருக வளர்ப்பு அடிப்படையில் வளர்க்கப்படும் மிருகங்கள் நான்கு தருக?

(1) மாடுகள் (2) கோழிகள் (3) ஆடுகள் (4) பன்றிகள்

92. இலங்கையில் மிருக வளர்ப்பிற்கான சூழற் காரணிகள்

(1) இயற்கையான புல்லினங்கள் காணப்படுதல்.

(2) ஆழமில்லாத நீர்நிலைகள், சுத்தமான நீர் காணப்படுதல்.

(3) வெப்பம் குறைவான வளமான காலநிலை காணப்படுதல்.

(4) அரச முயற்சிகள் அரச ஆராய்ச்சி விவசாயப் பண்ணைகள் அமைந்துள்ளமை.

(5) விவசாய உற்பத்திகளின் பக்கவிளைவுகளை உணவாகப் பயன்படுத்த முடிகின்றமை. உ+ம்:- அரிசித்தவிடு, பிண்ணாக்கு, மொலாஸ், கரும்புச்சக்கை.

(6) சந்தை வசதிகள் காணப்படல், விலங்கு உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் காணப்படல்.

93. மந்தை வளர்ப்பிற்கு அரசாங்கம் அளிக்கும் உதவிகள்

(1) மிருக வளர்ப்பு ஆராய்ச்சி நிலையங்களை அரசாங்கம் நிறுவியுள்ளமை.

(2) மிருக வளர்ப்பில் ஆய்வுகளை மேற்கொள்ளப் பயிற்சிகளை விருத்தி செய்தல.

(3) தனியார் துறையினருக்கு ஊக்குவிப்பளித்தல்.

(4) புதிய தொழில் நுட்ப முறைகளை வழங்குதல்.

(5) விவசாயப் பண்ணைகளை அமைத்துள்ளமை. உ+ம் தெங்கு முக்கோணப் பிரதேசம்

94. விலங்கு வளர்ப்புப் பிரதேசங்கள்

| | | |
|---|---|---|
| மலைநாட்டின் பசுமையான விலங்கு வளர்ப்புப் பிரதேசங்கள் | கரையோர வரண்ட பிரதேச விலங்கு வளர்ப்பு பிரதேசம் | மகாவலிப் பகுதி விலங்கு வளர்ப்புப் பிரதேசம் |
| அம்பவேவ, போபத்தலாவ | ஆண்டிகம், மகாஇலுப்பலம | கலங்குட்டிய, கிராற்துருகோட்டை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. [illegible]

| பிரச்சனைகள் | தீர்வுகள் |
| --- | --- |
| (1) மந்தைகள் சிறிய அளவினதாக இருத்தல். சிறந்த வர்க்கங்கள் இல்லாமை | மந்தைகளை பெருக்க இறக்குமதி செய்தல். இனப்பெருக்க ஆயவுகளை மிருக ஆய்வு நிறுவனம் மேற் கொள்ளுதல். நாட்டிலுள்ள மிருக பரம்பரையை விருத்தி செய்தல். பால் மந்தைக் கூட்டங்களை விருத்திசெய்ய அதிகாரிகளை நியமித்தல். |
| (2) சிறந்த வர்க்கங்கள் இல்லாமை | பாற் பொருட்கள் இறக்குமதியைக் குறைத்தல். |
| (3) புதிய தொழிநுட்பமுறைகள் பின்பற்றப்படாமை | பாற் பொருட்கள் நுகர்வை அதிகரித்தல். மிருக வளர்ப்புத் தொடர்பான முன்னோடி செயமலர்வுகள். மிருகவைத்திய சேவை விஸ்தரிப்பும் விரிவாக்கலும். |
| (4) அதிகரித்த செலவுகள் | விஞ்ஞான அறிவுப் பரம்பல்களை மேற்கொள்ளுதல். |
| (5) சந்தைப்படுத்தலில் பிரச்சனைகள் | திட்டமிடுதல். சந்தைபபடுத்துதல். தனியார். துறைக்கு உதவி வழங்குதல். |

96. [illegible] பிரதேசங்கள்

| | வளர்க்கப்படும் நோக்கங்கள் | பிரதேசங்கள் | இனங்கள் | உணவுகள் |
| --- | --- | --- | --- | --- |
| ஆடு | இறைச்சி பால் | ஈரவலயம் வரண்ட வலயம் ரனனார். சிலாபம். அம்பாந்தோட்டை | செம்மறியாடு வெள்ளாடு | கிளிறிசியா. பலாமர இலைகள் |
| பன்றி | இறைச்சி | மேற்குபபகுதி கரையோரங்கள் களுத்துறை | காட்டுப்பன்றி உள்நாட்டுப் பன்றி உயர் இனப்பன்றி | கிழங்குகள் வோகள் [illegible] கழிவுகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97 இலங்கையில் கோழி வளர்ப்புத் தொழில் பொருத்தமாக இருப்பதற்குரிய காரணங்கள்

(1) இலங்கையில் விவசாயப் பொருளாதார அடிப்படை கொண்ட நாடாக உள்ளமை

(2) உளச்சார்புள்ள. போட்டியுடைய திறந்த சந்தைச் சூழல் காணப்படுதல்.

(3) குறுகிய மூலதனத்துடன் ஆரம்பிக்கப்படக்கூடிய தொழிலாக உள்ளமை.

(4) குறுகிய காலத்தில் விரைவாக பலனைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருத்தல்.

(5) குறைந்தளவு. நிலப்பரப்பில் மேற்கொள்ள முடிகின்றமை.

(6) சுய தொழிலாக அமைவதால் இலகுவாகச் செயற்படுத்த முடியும்.

(7) கிராம அபிவிருத்திக்குப் பொருத்தமான தொழிலாகயிருத்தல்.

(8) தேவையான மூலதனத்தை இலகுவாக வங்கியில் பெற்றுக்கொள்ள முடிகின்றமை.

(9) உற்பத்தியைப் பொறுத்துச் சந்தை விரிவடைந்து செல்லல்

# 09. இலங்கையின் இயற்கை வளங்கள்

98. இயற்கை வளம் என்றால் என்ன?

மனிதனதும் ஏனைய உயிரினங்களினதும் வாழ்க்கைக்கு இயற்கைச் சுழலிலிருந்து கிடைக்கும் இன்றிமையாத பொருட்கள் இயற்கை வளம் எனப்படும்.

உ+ம்:- நிலம். காற்று. நீர் சூரிய நக்தி. இயற்கைத் தாவரம் விலங்குகள் கனிப்பொருட்கள்

*99. இயற்கை வளத்தின் வகைகள்*

*(1) உயிருளள வளங்கள்* *(2) உயிரற்ற வளங்கள்*

***உயிருள்ள வளங்கள்:-***

*உயா உள்ள இவற்றை மீண்டும் உற்பத்தி செய்ய முடியும். இவை இயறகையாகவே புதுபிப்பிக்கக் கூடியவை.*

*உ+ம்:- பணவிலங்குகள். காடுகள. பவளக்கற்பாறை. நீரில் வாழும் உயிரினங்கள்*

***உயிரற்ற வளங்கள்:-***

*இவை மீண்டும் உற்பத்தி செய்யவோ புதுப்பிக்கவோ முடியாதவை.*

*உ+ம் சூரியசக்தி. நிலம். மண். வளி. நீர். மாணிக்கம். கனியமணற் சுண்ணாம்புக்கல். பொய்பேற்*

100. இலங்கையில் காணப்படும் உயிருள்ள வளங்கள்

(1) காடுகள் (2) புல்லினங்கள். (3) கண்டல்கள் (4) முருங்கைகற்பாறைகள்.

(5) காட்டு உயிரினங்கள் (6) நீர் வாழ் உயிரினங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**101. காடுகள்**

(1) எமது நாட்டின் சிறப்பான சூழல தொகுதியாக விளங்குகின்றது. விலைமதிக்க முடியாத பொருளாதார வளமாக உள்ளது.

(2) **சிங்கராஜ வனம் இன்று எஞ்சியுள்ள பெறுமதி மிக்க இயற்கைத் தாவரமாகும்.**

(3) நமது நாட்டின் சனத் தொகை அதிகரிப்பதற்கு ஏற்ப அத்தியாவசிய தேவைகளுக்காகவும். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் காடழிப்பு வேகமாக நடைபெறுகின்றது.

**காடழிப்பினால் ஏற்படும் பாதிப்புகள்:-**

(1) மண் சரிவு ஏற்படும்.

(2) மண்ணரிப்பு நிகழும்.

(3) நதிகளின் ஆழம் குறைந்து வெள்ளப் பெருக்கு ஏற்படும்.

(4) நீர் ஊற்றுக்கள் வற்றிப் போகும்.

(5) நீர்பற்றாக்குறை ஏற்படும்.

(6) நீர் மின் சக்தி குறைவடையும்.

(7) மூலிகைகள் மருந்துச் செடி. கொடிகள் அருகி வரும்.

(8) அரிய உயிரினங்களின் புகலிடம் இல்லாதமல் போய்விடும்

(9) காற்றுத் தடையாகச் செயற்பட்டு மழை பொழிவிக்கும் தன்மையில்லாது போய்விடும.

(10) மண்வளம் குன்றும்.

**102. புன்னிலங்கள் (பத்தனை. தலாவர புன்னிலங்கள் என இருவகைப்படும்)**

**பத்தனைப் புன்னிலம்:-**

(1) **உலர்பத்தனைப் புன்னிலம்;** ஊவா மேட்டுநிலத்தில் காணப்படுகின்றது.

(2) **ஈரப்பத்தனைப் புன்னிலம்:-** ஹோட்டன் சமவெளியில் உள்ளது.

(3) **தலாவைப் புன்னிலம்:-** அம்பாறை. பிபிலை. லுனுகலைப் பிரதேசங்களில் காணப்படுகின்றது.

(4) **வில்லுப்புன்னிலங்கள்:-** மகாவலி வெள்ளச் சமவெளியிலும். உலர் வலயத்தில் வெள்ளப்பாதிப்புக்குள்ளாகும். பிரதேசங்களிலும் காணப்படும். உ+ம் தம்பன் கடவைப் பிரதேசம்

**புன்னிலங்கள் முக்கியம் பெறக் காரணிகள்:-**

மந்தை வளர்ப்பிற்கு அடிப்படையாக அமைதல் இடம் பெயர்ந்து வரும் உள்ளூர் பறவைகளுக்கு வாசஸ்தலமாக விளங்குதல்.

இயற்கை வனப்பை ஏற்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 103. கண்டல்கள்

**காணப்படும் இடங்கள்:-**

(1) ஆற்றுக்கழிமுகங்கள் (2) களப்புகள் (3) ஆழமாக அமைந்த கரையோரப் பிரதேசங்கள். **அதிகம் காணப்படுவது புத்தளம் கழிமுகப் பிரதேசம்.**

**கண்டல் தாவரங்கள் மூலம் ஏற்படும் நன்மைகள்:-**

(1) இறால் நண்டுகள் போன்றவற்றை பிடிக்க உதவும். (2) விறகாகப் பாவிக்கலாம். (3) வீடுகளுக்கு வளைகள். தூண்கள் அமைக்க உதவும் (4) மருந்துத் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். (5) சாயம் தாயாரிக்க உதவும். (6) களப்புகள் கழிமுகங்களின் கரையோரங்கள் அரிக்காமல் பாதுகாக்கின்றது. (7) உயிரியல் பாடத்தைக் கற்பிப்பவர்களுக்கு சிறந்த விஞ்ஞான ஆய்வு கூடமாக விளங்குகின்றது.

## 104. முருகைக் கற்பாறைகள்

**காணப்படும் இடங்கள்:**

1) அம்பாந்தோட்டையிலிருந்து மாததளை வரையிலுள்ள கடற்பகுதியிலும்.
2) பெரிய இராவணன் பாறை. சிறிய இராவணன பாறை கடற்பகுதியிலும்
3) மட்டக்களப்பு. பாசிக்குடா. திருகோணமலை குச்சவெளி கடற் பகுதியிலும்
4) யாழ்ப்பாணம். பருத்தித்துறை உள்ளடங்கிய கடற் பிரதேசங்களிலும் காணப்படுகின்றது.

**முருகைக் கற்பாறைகள் மூலம் ஏற்படும் நன்மைகள்:**

1) பொருளாதாரப் பெறுமதி வாய்ந்த வளமாக விளங்குதல்
2) உல்லாசப் பயணிகளை கவர்வதாக அமைதல்
3) மீன்களின் சிறந்த வசிப்பிடமாக விளங்குதல்
4) கட்டடங்கள் அமைக்கத் தேவையான சுண்ணாம்பைப் பெற்றுக் கொள்ளல
5) புறறு நோய போனற நோய்களுக்கு மருநதுகளின உற்பத்திக்குப பயனபடல
6) கடல் அரிப்பைக்கட்டுபபடுததல்
7) கல்வி ஆய்வுகளுக்கு உதவுதல்

## 105. இரத்தினக்கற்கள்

**இரத்தினக் கைத்தொழில் காணப்படும் பிரதேசங்கள்:** இரத்தினபுரி. எகலியகொட. குருவிறற. நிவித்திகலை. இறக்குவான. ஏக்கம்பிட்டி. எலகர. மாணிக்க கங்கையை சூழவுள்ள பிரதேசங்கள். (இரத்தினக்கல் வளமுள்ள பிரதேசமாக சபரகமுவ மாகாணம் முதலிடம் பெற்றுள்ளது)

**இரத்தினக் கற்களைக் கொள்வனவு செய்யும் நாடுகள்:** யப்பான். ஹொங்ஹொங். சுவிர்ஸலாந்து. குவைத். டுபாய். சவூதிஅரேபியா.சிங்கப்பூர். ஐக்கிய அமெரிக்கநாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| **இரத்தினக் கற்கள் தோண்டப்படுவதனால் சூழல் மாசுறும் முறைகள்** |
|---|
| 1) திட்டமிடப்படாமல் தோண்டப்படுவதனால் சூழல் மாசுறுகின்றது. |
| 2) கற்கள் அகழ்விற்காக அதிகளவில் மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. |
| 3) குழாய்களில் கற்கள் கழுவும் போது சேறும்சகதியும் ஆறுகள். வாய்க்கால்களை அண்மித்து நிற்பதால் நீர் மாசடைகின்றது. |
| 4) கற்கள தோணடப்படும் போது குழிகள் அமைவதால் மண்ணரிப்பு ஏற்படுகின்றது. |

**106. சுண்ணாம்புக்கற்கள்** (3வகையான சுண்ணாம்புக் கற்கள் உள்ளன)

1) **அடைக்கள் சுண்ணாம்புக்கல்** (மயோசின்) **காணப்படும் பிரதேசம்:** புத்தளம் தொடக்கம் முல்லைத்தீவு வரை ஒரு கோடு வரைந்தால் அக்கோட்டிற்கு வடக்கேயுள்ள பிரதேசம் இதற்குள் அடங்கும்.

2) **டொலமையிற் சுண்ணாம்புக்கல்** (பளிங்குச் சுண்ணாம்புக்கல்) **காணப்படும் பிரதேசம்:** மலைநாட்டின் பதுளை. வெளிமடை. கண்டி. நாலந்த. பலாங்கொடை ஆகிய பிரதேசங்களில் ஏனைய பாறைகளுடன் கலந்து காணப்படுகின்றது.

3) **முருகைச் சுண்ணக்கல் காணப்படும் பிரதேசம்:** அம்பலாங்கொடையிலிருந்து தெவிநுவர வரைமுள்ள வலயம். கல்குடாவிலிருந்து மகாவலிகங்கை குடாப்பகுதி வரையுமுள்ள பிரதேசம்.

**சுண்ணாம்புக் கற்களின் பயன்கள்:** சீமெந்துக் கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்படுகின்றது. கண்ணாடிக் கைத்தொழில். உரக்கைத்தொழில். புடவைக்கைத்தொழில். மட்பாண்டக் கைத்தொழில் போன்றவற்றிற்கு சுண்ணாமபுக்கல் தேவைப்படுகின்றது.

**107.** **கனிய மணல்** (சிலிக்கா. இல்மனைற்று. மொனசைற்று. தோரியனைற்று ஆகிய முக்கிய கனிய மணல்வகைகளாகும்)

| **கனிய மணல்** | **காணப்படும் பிரதேசம்** | **பயன்பாடு** |
|---|---|---|
| சிலிக்கா | மாரவில.நாத்தாண்டிய. ஏக்கல. வல்லிபுரம் | கண்ணாடி உற்பத்தி |
| இல்மனைற்று | புல்மோட்டை | ஆகாய விமானம். விண்கலங்களுக்கு பயன்படுத்துதல் |
| மொனசைற்று தோரியனைற்று | பொல் கொட்டுவை கைக்காவலை | ஏற்றுமதிக்காகப் பயன்படுத்தல் |

**108.** இயற்கை வளங்கள் வரையறையின்றி நுகரப்படுவதால் ஏற்படும் பாதிப்புக்கள்.

1) குடிநீர் பற்றாக்குறை ஏற்படுதல்    2) மண்ணரிப்பு உண்டாதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) கரையோரங்கள் அரிக்கப்படுதல். 4) ஆற்று நீரில் உவர் நீர் கலத்தல்
5) வளிமாசடைதல் 6) உயிரினங்களின் பல்லினத் தன்மை குறைவடைதல்
7) வளிமண்டலம் வெப்பமடைதல் 8) மரங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுதல்.

**109.** உயிரியல் வகைகள் (பிரிவுகள்)

1) நிரந்தரமான உயிரியல் வளங்கள்: சூரியசக்தி, காற்று
2) புதுப்பிக்கக் கூடிய வளங்கள்: மண், நீர்
3) புதுப்பிக்க முடியாத வளங்கள்: எரிபொருள், உலோகக் கனியம், உலோகம் அல்லாத கனியம்.

**110.** இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்குரிய வழிகள்.

1) சிக்கனமாகப் பயன்படுத்தல் 2) திட்டமிட்டுப் பயன்படுத்தல்
3) உற்ச்சபயன் பெற முயற்சித்தல் 4) புதிய ஆய்வுகளை மேற் கொள்ளல்

**இயற்கை வளங்களை ஏன் பாதுகாக்க வேண்டும்:**

1) சூழலின் சமநிலை பாதிப்படையாமல் இருப்பதற்காக
2) நாட்டின் அபிவிருத்தி பாதிப்படையாமல் இருப்பதற்காக
3) எதிர் கால சந்ததியினரை கருத்திற் கொண்டு பாதுகாத்தல்
4) வளங்கள் வரையறைக்குட்பட்டதால் பாவனை அதிகரிக்க அளவு குறைவடையும்.
5) நீரேந்து பரப்புகளின் நீர்வளத்தைப் பாதுகாத்தல்.
6) வரட்சி, வெள்ளப்பெருக்கு ஆகியவற்றிலிருந்து பாதுகாத்தல்.

# 10. இலங்கையின் சனத்தொகை

**111.** ஒரு நாட்டின் சனத்தொகை தொடர்பாகச் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

1) பிறப்பு 2) இறப்பு 3) குடிவரவு

| | | |
|---|---|---|
| **சனத்தொகை இயற்கை அதிகரிப்பு** | = | பிறப்பு - இறப்பு |
| **தேறிய குடிபெயர்வு** | = | குடிவரவு - குடியகல்வு |
| **சனத்தொகை வளர்ச்சி வேகம்** | = | பிறப்பு - இறப்பு + தேறிய குடிபெயர்வு |
| | = | இயற்கை அதிகரிப்பு, தேறிய குடிபெயர்வு |

* 1871 - 1946 வரை இலங்கையின் சனத்தொகை வளர்ச்சிக்கு பிரதான காரணம் தேறிய குடிபெயர்வாகும்.
* 1946ன் பின்னர் ஏற்பட்ட சனத்தொகை அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் இயற்கை அதிகரிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**112.** சனத்தொகை என்றால் என்ன?

நிச்சயிக்கப்பட்ட ஒரு புவியியல் பிரதேசத்தில் நிச்சயிக்கப்பட்ட ஒரு கால எல்லைக்குள் வாழும் நபர்களின் எண்ணிக்கை சனத்தொகை எனப்படும்.

**113.** சனத்தொகை கணக்கெடுப் என்றால் என்ன?

ஏதாவது ஒரு நாடு தொடர்பாகக் குறிப்பிட்ட ஒரு தினத்தில் அல்லது காலப பரப்பொன்றுக்குள் சனத்தொகை தொடர்பான கணக்கெடுப்பும் அதுபற்றிய சேகரிப்பும் அதனை வெளியிடுதலும் சனத்தொகைக் கணக்கெடுப்பில் அடங்கும்.

* இலங்கையின் முதலாவது சனத்தொகை கணக்கெடுப்பு 1871ல் நடைபெற்றது.
* இலங்கையில் கடைசியாக நடைபெற்ற கணக்கெடுப்பு 1981ல் ஆகும்.

**114.**

| வருடம் | சனத் தொகை மில்லியன | வருடாந்த வளர்ச்சி வேகம் | சராசரி பிறப்பு வீதம் 1000 பேருக்கு | சராசரி இறப்பு வீதம் 1000 பேருக்கு | ஆயுள் எதிர்பார்ப்பு வருடத்தில் |
|---|---|---|---|---|---|
| 1871 | 2.4 | 0.9 | 28.5 | 19.4 | 40 |
| 1931 | 5.3 | 1.7 | 37.5 | 22.1 | 41.1 |
| 1953 | 8.0 | 2.8 | 48.0 | 10.4 | 58.2 |
| 1963 | 10.6 | 2.7 | 34.1 | 0.5 | 61.7 |
| 1981 | 14.8 | 1.7 | 28.2 | 5.9 | 69.9 |
| 1996 | 18.3 | 1.2 | 18.6 | 6.5 | 72.5 |

* 1971லிருந்து சனத்தொகை இரண்டு மடங்காக எடுத்த காலம் 50 வருடங்களாகும்
* 1931 லிருந்து சனத்தொகை மீண்டும் இரண்டு மடங்காக எடுத்த காலம் 32 வருடங்கள் மாத்திரமேயாகும்.
* சனத்தொகை வளர்ச்சி வேகம் 1953ல் 2.8 லிருந்து(அதிகூடியது) 1996ல் 1.1 ஆகக் குறைந்துள்ளது.

**115.** இன அடிப்படையில் இலங்கையின் சனத்தொகை **1981**

| இனம் | 1981 (மில்லியன்) | 1991 (சதவீதம்) |
|---|---|---|
| சிங்களவர் | 11.0 | 74.0 |
| இலங்கைத் தமிழர் | 1.8 | 12.7 |
| இந்தியத் தமிழர் | 0.8 | 5.5 |
| இலங்கைச் சோனகர் | 1.1 | 7.0 |
| பறங்கியர். மலாயர் ஏனையோர் | 0.1 | 0.8 |
| மொத்தம் | 14.8 | 100.0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**116. 1971, 1981 ஆண்டுகளில் சனத்தொகை சமய அடிப்படையில்**

| சமயம் | 1971 சனத்தொகை (மில்லியன்) | 1971 வீதம் | 1981 சனத்தொகை (மில்லியன்) | 1981 வீதம் |
|---|---|---|---|---|
| பௌத்தமதம் | 8.5 | 67.3 | 10.3 | 69.3 |
| இந்து மதம் | 2.2 | 17.6 | 2.3 | 15.5 |
| இஸ்லாம்மதம் | 0.9 | 7.1 | 1.1 | 7.5 |
| ரோமன் கத்தோலிக்கமும் ஏனைய கிறிஸ்தவ மதங்களும் | 1.0 | 7.9 | 1.1 | 7.6 |
| பிறமதங்கள் | 0.1 | 0.1 | 0.02 | 0.1 |

**117. இலங்கைச்சனத்தொகை (பால் அடிப்படையில்) குடிப்பரம்பல் அடர்த்தி**

| ஆண்டு | சனத்தொகை (ஆயிரத்தில்) | ஆண் (ஆயிரத்தில்) | பெண் (ஆயிரத்தில்) | சதுரக்கிலோ மீற்றருக்கு குடிப்பரம்பல் |
|---|---|---|---|---|
| 1871 | 2400 | 1280 | 1120 | 37 |
| 1931 | 5307 | 2811 | 2495 | 82 |
| 1963 | 10582 | 5499 | 5083 | 165 |
| 1981 | 14847 | 7278 | 7568 | 232 |
| 1991 | 17247 | 8792 | 8455 | 267 |

* சனத்தொகை வளர்ச்சியில் ஒவ்வொரு 100 ஆண்களுக்கும் 100 பெண்கள் காணப்படுவதைக் காணலாம். சமூக அபிவிருத்தியில் ஆண். பெண் வேறுபாடின்றி தங்கியிருப்போரைக் கவனிக்கும் தன்மைக் காண முடிகிறது.

* 1871ல் ஒரு சதுரகிலோ மீற்றருக்கு 37 பேர் இருக்கின்றனர். இன்று 267 பேர் உள்ளனர். எனினும் இக்குடியடர்த்தி மாவட்டங்களுக்கு இடையே சமனற்றுப் பரம்பியுள்ளது.

**118. சனத்தொகை மதிப்பீடு சில சுலபமான சூத்திரங்கள்**

$$\text{பிறப்பு வீதம்} = \frac{\text{குறிப்பிட்ட வருடத்தின் பிறப்பு எண்ணிக்கை}}{\text{குறிப்பிட்ட நடுஆண்டுச் சனத்தொகை}} \times 1000$$

$$\text{இறப்பு வீதம்} = \frac{\text{குறிப்பிட்ட வருடத்தின் மரண எண்ணிக்கை}}{\text{குறிப்பிட்ட நடுஆண்டுச் சனத்தொகை}} \times 1000$$

$$\text{இயற்கை அதிகரிப்பு வீதம்} = \frac{\text{பிறப்பு வீதம் - இறப்புவீதம்}}{10}$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$\text{சனத்தொகை வளர்சசி வீதம்} = \frac{\text{மொத்தப் பிறப்புவீதம் - மொதத இறபபு வீதம}}{\text{நடு ஆண்டுச்சனத்தொகை}} \times 100$$

$$\text{சனத்தொகை இரட்டிப்படையும் காலம்} = \frac{70}{\text{சனத்தொகை வளாச்சி வீதம்}}$$

**121. 1981 சனத்தொகை கணக்கெடுப்பின்படி தங்கியிருப்போர் விதாசாரம்**

| வயது | 1981 | 1991 | 2001 |
|---|---|---|---|
| 14வயதுக்கு குறைந்தோர் | 35.2 | 31.2 | 25.7 |
| 14 வயதுக்கும் 64 வயதுக்கும் இடைப்பட்டோர் | 60.5 | 63.4 | 67.6 |
| 65 வயதுக்கு மேற்பட்டோர் | 4.3 | 5.4 | 6.7 |
| தங்கியிருப்போர் வீதாசாரம் | 65.2 | 57.7 | 47.9 |

மேலே உள்ள அட்டவணையிலிருந்து பெறும் தகவல்கள்

* தங்கிவாழும் இளம் வயதினர் வீதாசாரம் குறைந்து செல்கிறது.
* உழைப்போர் தொகை படிப்படியாக அதிகரித்து வருகிறது.
* தங்கியிருக்கும் வயது வந்தோர் தொகையும் கூடிச்செல்கிறது.

**122. சனத்தொகையும் வாழ்க்கைப் பண்பும்**

* ஆரோக்கியமான செயற்திறன் மிக்க பண்பு ரீதியிலான சனத்தொகுதி நாட்டின் வளமாகக் கருதப்படும்.
* வாழ்க்கைப் பண்பின் பிரதானமாகச் செல்வாக்குச் செலுத்துபவை உணவு. உடை. வசிப்பிடம். கல்வி. சுகாதாரவசதிகள். தொழில் வாய்ப்புக்கள் என்பனவாகும்.
* இவற்றுடன் உளவியல். அழகியல். ஆன்மிகம். பாதுகாப்பு. உளத்திருப்தி. சூழல் இயல்புகள் முறையான வற்றில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**சனத் தொகை அடர்த்தி:**

*இலங்கை உலகின் சனத் தொகை அடர்த்தி கூடிய நாடுகளில் ஒன்றாகும். 2005ல் சனத்தொகை அடர்த்தி311 ஆக அதிகரிக்குமெனக் கணிப்பீடுகள் காட்டுகின்றன.*

* *இலங்கையில் சனத் தொகை அடர்த்தி கூடிய மாவட்டங்கள் கொழும்பு. காலி. யாழ்ப்பாணம். களுத்துறை. கண்டி. மாத்தறை என்பனவையாகும்.*
* *சனத் தொகை அடர்த்தி குறைந்தவை: மன்னார். மொனராகலை. முல்லைத்தீவு. வவுனியா என்பனவையாகும்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. இலங்கையின் கைத்தொழில்

**123. கைத்தொழில் என்றால் என்ன?**

ஏதேனும் ஒரு மூலப்பொருளைப் பயன்படுத்தி மனித உழைப்பு, இயந்திர சக்தி ஆகியவற்றின் மூலம் பொருட்களை உற்பத்தி செய்தல் கைத்தொழில் எனப்படும்




**124. கைத்தொழில் ஒன்று இடஅமைவு பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.**

(1) **மூலப்பொருள்:** மூலப்பொருள் காணப்படும் இடத்தில் கைத்தொழில நிறுவப்படும். உ+ம்:- 1) சுண்ணக்கல் காணப்படும் காங்கேசன் துறையில் சீமெந்து தொழிற்சாலை

(2) **மூலதனம்:** தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும். இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்யவும் மூலதனம் தேவை. அபிவிருத்தியடைந்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் மூலதனம் குறைவாக யிருப்பதால் சுதந்திர வர்த்தக வலயங்களை நிறுவி வெளிநாட்டவர்களின் முதலீட்டை ஊக்குவிக்கின்றன.

(3) **உழைப்பு:** (மனிதவளம்) தொழிலாளர்களை எளிதாகப் பெறக் கூடிய இடங்களில் தொழிற்சாலைகள் அமைத்தல் உ+ம்:- கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள்.

(4) **சந்தை:** உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் சந்தை வசதிகள் உள்ள இடங்களில் கைத்தொழிற் சாலைகள் நிறுவுதல். உ+ம்:- சீமெந்து தொழிற் சாலை (காலி)

(5) **போக்கு வரத்து:** தொழிற் சாலைகளுக்கு மூலப் பொருட்களைக் கொண்டுவரவும், பொருட்களைச் சந்தைப்படுத்தவும் மலிவான போக்குவரத்துச் சாதனங்கள் தேவையாகும். புகையிரதப் பாதைகளும், பெருந்தெருக்களும் தொழிற் சாலை அமைவிடத்தை நிர்ணயிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளாகும். உ+ம்:- கட்டுநாயக்க, பியகம, சுதந்திரவர்த்தக வலயங்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கு அவை சர்வதேச விமான நிலையத்திற்கும், துறைமுகத்திற்கும் அண்மையில் அமைந்திருப்பது காரணமாகும்.

**125.** பாரிய கைத்தொழில் என்றால் என்ன?

அதிகளவு மூலப்பொருட்களையும் மூலதனத்தையும் பயன்படுத்தி இயந்திர சாதனங்கள் மூலம் பெருந்தொகையான பொருட்களை உற்பத்தி செய்தல் பாரிய கைத்தொழில் எனப்படும்.

உ+ம்:- 1) சீமெந்து தொழிற்சாலை - காங்கேசன்துறை, புத்தளம்
2) ரயர், ரியூப்தொழிற்சாலை - களனி
3) கடதாசித் தொழிற்சாலை -வாழைச்சேனை

**126.** நடுத்தர சிற்றளவுக் கைத்தொழில்கள் என்றால் என்ன?

பாரிய அளவுக் கைத்தொழில்களுக்குப் பயன்படுத்துவது போல் அதிகளவு மூலதனமின்றிச் சிறிய அளவிலான இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி அதிகளவு உற்பத்தியினை மேற்கொள்ளுதல் நடுத்தர, சிற்றளவுக் கைத்தொழில் எனப்படும்.

உ+ம்:- மின் உபகரணங்கள், உலோகப் பொருட்கள், பிளாஸ்டிக் வகைகள், பிஸ்கட்வகைகள், குளிர் பானம் என்பன சிற்றளவுக் கைத்தொழில்களாகும்.

நடுத்தரவுக் கைத்தொழில்களில் ஈடுபடும் 60% மேல் கம்பஹா, கொழும்பு மாவட்டங்களில் உள்ளன.

நடுத்தரக் கைத்தொழில் 88% தொழிலாளர்கள் கொழும்பு, கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

**127.** குடிசைக் கைத்தொழில் என்றால் என்ன?

குடிசைக் கைத்தொழில் என்பது மிகக் குறைந்த அளவில் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழிலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய தொழில் கூடங்களில் அல்லது வீடுகளில் மனித உழைப்பையே அதிகளவு பயன்படுத்தி நடைபெறும் தொழில்களாகும்.

சிறிய கைஇயந்திரங்களும், மின்சக்தியால் இயங்கும் இலகுவான இயந்திரங்களும் பயன்படுத்தப்படும் தொழிலாகும்.

**குடிசைக் கைத்தொழிலை பாரம்பரியமாகச் செய்யும் பிரதேசங்கள்**

1) ரேந்தை பின்னல் - மாத்தறைப் பிரதேசம்

2) கைத்தறி நெசவு - கிராமப்புற வீடுகளில்

3) முகமூடி செய்தல் - அம்பலாங்கொட பிரேதசம்

4) கருங்காலி செதுக்கல் - காலிப் பிரதேசம்

5) பன்னவேலை - களுத்துறை பிரதேசம்

**128.** முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள்.

1) தொழில்நுட்ப அறிவினையும், அன்னிய மூலதனத்தையும் பெற்றுக் கொள்ளல்.

2) நாட்டின் புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.

3) வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளல்.

**129.** முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தினால் ஏற்படக் கூடிய நன்மைகள்.

1) வேலையற்ற இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்தல்.

2) உள்நாட்டு வளங்களிலிருந்து உச்சப்பயன் பெற்றுக் கொள்ளல்.

3) முதலீட்டுக்காக வெளிநாட்டு வளங்களை இலகுவாகப் பெறல்.

4) வெளிநாட்டவர்களுடன் கூட்டாகக் கைத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதால் குறுகிய காலத்தில் தொழில்நுட்ப அறிவையும், அனுபவத்தையும் பெற்றுக் கொள்ளல் 5) வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஏற்ற வகையில் பொருட்களை உற்பத்தி செய்யும் அறிவினைப் பெறுதல்.

6) இவ்வலய சூழவுள்ள பிரதேசங்கள் அடிப்படை வசதிகளில் முன்னேற்றம் அடைதல்; நிலம், ஊழியம், மூலதனம் போன்ற உற்பத்தி சாதனங்கள் சிறப்புப்பாவனைக்கு உட்படுதல்.

**130.** முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தினால் ஏற்படும் தீமைகள்.

1) வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் எமது நாட்டுத் தொழிலாளர்கள் உழைப்புச் சுரண்டலுக்கு உட்படுகின்றனர்.

2) உள்நாட்டு கைத்தொழில்கள் வீழ்ச்சியடைதல்.

3) சூழல் மாசடைதல்.

4) இவ்வலயத்தை அண்மிய பகுதிகள் சமூகப்பிரச்சினைகள் தோன்றுதல்.

5) கலாசாரம் பாதிக்கப்படல், 16 - 25 வயதுக்குட்பட்ட பெண்களே கூடுதலான வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர்.

6) உற்பத்திகள் பகுதி உற்பத்திகளாக உள்ளமையால் தொழில் நுட்பவியல் இடமாற்றம் அதிகளவில் ஏற்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**131.** கைத்தொழிலாக்கம் காரணமாக தோன்றியுள்ள பிரச்சினைகள்.

1) **மூலதனப்பற்றாக்குறை:** இலங்கையில் கைத்தொழில்களை விரைவாக அபிவிருத்தி செய்வதற்கு மூலதனப்பற்றாக்குறை முக்கிய தடையாக உள்ளது.

2) **எரிபொருட்கள் வழங்குவதிலுள்ள பிரச்சினைகள்:** நீர் மின்வலு கைத்தொழில்களுக்குத் தேவையான எண்ணை விலையேற்றம், பொருளாதாரப் பிரச்சினை ஏற்படுத்தியுள்ளது.

3) **கைத்தொழில்சாலைகளுக்குத் தேவையான பயிற்சி பெற்ற தொழிலாளர்களைப் பெறுவதில் பிரச்சினைகள்:** தேர்ச்சியுள்ள தொழிலாளர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் போவது இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. சுதந்திர வர்த்தக வலயங்கள் தேர்ச்சியுள்ள தொழிலாளர்களை உருவாக்கும் என நம்பப்படுகின்றது.

4) **சூழல் மாசடைதல்:** தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் பல்வேறு வகையான எண்ணைகளினாலும், புகையினாலும் பிற அழுக்குப் பொருட்களினாலும் சூழலும், நீரும், மண்ணும் மாசடைகிறது.

5) **வெளிநாட்டுப் பொருட்களில் காட்டப்படும் மோகம்:** இறக்குமதிப் பொருட்கள் ஏராளமாக நமது நாட்டில் வந்து குவிந்தமையால் வினைத்திறன் குறைந்த இந்நாட்டுக் கைத்தொழில்கள் பாதிப்படைகின்றன.

**133.** உல்லாசப் பயணத்தொழில்

(1) இலங்கையில் உல்லாசப் பயணிகளைக் கவரும் அம்சங்கள்

(அ) இலங்கையின் இயற்கை அழகு, நீர்வீழ்ச்சிகள் போன்றவை

(ஆ) சிறந்த கடற்கரை வசதிகள்

(இ) வனம் வாழ் உயிரினங்கள்

(ஈ) வரலாற்றுச் செல்வங்கள், கலாசார மரபுகள்.

(2) உல்லாசப் பயணத் தொழில் அபிவிருத்தியால் ஏற்படும் நன்மைகள்.

(அ) 1965 ம் ஆண்டிற்கு பின்னர் உல்லாசப் பயணத் தொழில் விரைவாக வளர்ச்சியடைந்தது.

(ஆ) அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தரும் பிரதானமான மார்க்கமாக முக்கியம் பெற்றுள்ளது.

(இ) தொழில் வாய்ப்புக்கள் பெருகியுள்ளன, உல்லாசப் பயணத் துறையில் ஏறக் குறைய 48000 பேர் தொழில் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

(ஈ) குடிசைக் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு உதவுகின்றது உல்லாசப் பயணிகளைக் குடிசைக்கைத்தொழில் உற்பத்திகள் பெரிதும் கவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. தம்பதெனியா வீழ்ச்சியடைந்த பின்



யாப்பகூவா அரண்மனை

**134.** யாப்பகூவா தலைநகராக்கப் பட்டமைக்குரிய காரணங்கள்

(1) இயற்கைப் பாதுகாப்புடையதாக விளங்கியமை: இயற்கையான கற்பாறைகளுடைய மலைக் குன்றாகக் காணப்பட்டமை.

(2) மாகனுடைய ஆக்கிரமிப்புக்குப் பின் பாதுகாப்பான இடங்களைத் தேடிய இராசரட்டைச் சிங்கள மக்களுக்கு யாப்பகூவா பாதுகாப்பான இடமாக விளங்கியமை.

(3) சுப என்ற சேனாதிபதியால் யாப்பகூவா மலைக்குன்றின் உச்சியில் "சுப்பவ்வத்" என்ற கோட்டை அமைக்கப்பட்டமை.

(4) வன்னித் தலைவர்களின் கிளர்ச்சிக்கும், வடபகுதி ஆட்சியாளர்களின் அச்சுறுத்தல்களுக்கும் யாப்பகூவா பாதுகாப்பாக விளங்கியமை.

(5) முதலாம் புவனேகபாகு மன்னன் யாப்பகூவாவை இராசதானியாக அமைத்தான்.

**135.** முதலாம் புவனேகபாகுவின் ஆட்சியின் முக்கியத்துவமும் சேவைகளும் (1272-1284)

(1) இயற்கைப் பாதுகாப்புடைய யாப்பகூவாவை இராசதானியாக்கினான்.

(2) யாப்பகூவாவின் உச்சியில் அரச மாளிகையும் தலதா மாளிகையும் அமைத்தான்.

(3) வன்னித் தலைவர்கள் போன்ற உள் நாட்டவர்களின் கலகத்தை அடக்கினான்.

(4) வருடாந்தம் "உபசம்பதா" விழாவினை மேற்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) யாப்பகூவாவிலிருந்து ஆட்சி செய்த ஒரே ஒரு மன்னன் முதலாம் புவனேகபாகு ஆகும்

(6) 1284ல் குலசேகர பாண்டியன் இலங்கைக்குப் படையெடுத்து வந்து புவனேகபாகுவையும் தோற்கடித்து புனிதத் தந்ததாதுவைக் கைப்பற்றிச் சென்றான்.

**135.** குருநாகல் இராஜதானி மன்னர்கள்

| | | |
|---|---|---|
| மூன்றாம் பாரக்கிரமபாகு | (பொலநறுவையிலிருந்து ஆட்சி) | கி. பி 1287-1293 |
| இரண்டாம் புவனேகபாகு | (குருநாகல் இராஜதானி) | கி. பி. 1293-1302 |
| நான்காம் பாராக்கிரமபாகு | (பண்டிதபாராக்கிரமபாகு) | கி. பி. 1302-1326 |

**136.** நான்காம் பாராக்கிரமபாகுவின் சேவைகள்.

(1) குருநாகல் இராஜதானியை ஒளிமயமாக்கிய சிறந்த மன்னன் எனப் போற்றப்படுகின்றான்.

(2) தந்ததாது கோயில் அமைத்துப் புனித தந்தத்தினைப் பிரதிட்டை செய்தான்.

(3) தந்ததாதுவைப் பாராமரிக்க நிலங்களை நன்கொடையாக வழங்கினான்.

(4) புகழ் பெற்ற பிரிவெனாக்களுக்கு அரச ஆதரவை நல்கினான். உ+ம் தொரசமுவ விஜியபா, பிரிவெனா, மகா நுவர அஸ்கிரி, செனாசனய, விதாகம சிறி, கனாந்ந்த பிரிவெனா

(5) பௌத்த பாளி நூல்களை சிங்களத்தில் மொழி பெயர்த்தான். உ+ம் ஐந்நூற்றி ஐம்பது ஜாதகக் கதைகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

(6) தலாத சிறித, சிங்கள போதிவங்சய, அநாகதவங்சய ஆகிய இலக்கிய நூல்கள் இவன் காலத்தில் எழுதப்பட்டன.

(7) ஸ்ரீ பாராக்கிரமபாகு வில்கமுவ சங்கராஜ தேரர் சமயத்துக்கு ஆற்றிய சேவைக்காக அரச உதவி வழங்கினான்.

(8) இவனது இறுதிக்காலத்தில் ஏற்பட்ட போதி மாபாவின் கலகத்தைத் தொடர்ந்து இராஜதானி கம்பளைக்கு மாற்றப்பட்டது.

*137. கம்பளை இராசதானியாக்கப்பட்டமைக்குரிய காரணங்கள்*

*(1) குருநாகலை விட கம்பளை மத்திய மலைநாட்டில் பாதுகாப்பான இடத்தில் (சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பாதையில்) அமைந்திருந்தமை. பல மலைகளால் சூழப்பட்டிருந்த சமவெளியில் இருந்தமை.*

*(2) வடபகுதி ஆரியச் சக்கரவர்த்திகள் தெற்கு நோக்கி விஸ்தரிப்புக்களை மேற்கொண்டமை.*

*(3) கம்பளை ஒரு உபநகரமாக பழைய காலத்திலிருந்து பிரசித்தி பெற்றிருந்தமை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 138. கம்பளை அரசர்கள் எதிர் நோக்கிய பிரச்சனைகள்

(1) கம்பளையின் முதலாவது மன்னன் நான்காம் புவனேகபாகு "திரிசிங்கள ஆதிஸ்வர" என அழைக்கப்பட்டான். ஆனால் இலங்கை முழுவதையும் இவன் ஆட்சி செய்யவில்லை.

(2) வடபகுதி ஆரியச் சக்கரவர்த்தி சிலாபம் வரை காணப்பட்ட முத்துத் தளங்களைக் கைப்பற்ற முயன்றமை.

(3) சிங்களப் பகுதிகளில் காலத்துக்குக் காலம் அத்துமீறி ஆரியச் சக்கரவர்த்தியின் சேனைகள் வரிகள் வசூலித்தமை.

(4) கம்பளை இராஜதானி காலத்தில் சேனாதிபதிக் குடும்பங்கள் (அழகக் கோனார் குடும்பங்கள்) அரசனை விட ஆதிக்கம் பெற்றிருந்தமை.

(5) சீன மிங்வமசத்தவனான செங்கோவின் படையெடுப்பு நடைபெற்றமை.

(6) **கம்பளை அரசுகள் :** நான்காம் புவனேகபாகு: *1341-1351* ஐந்தாம் பராக்கிரமபாகு : *1344-1359.* மூன்றாம் விக்கிரமபாகு *1357-1374*

## 139. கம்பளை இராசதானி காலத்தின் முக்கிய அம்சங்கள்

(1) **சமய வளர்ச்சி ஏற்பட்டமை:**
பிக்குமாருக்கான அமைப்புகள் இரண்டு சீர்திருத்தங்களுக்கு உட்பட்டதுடன் ஒழுங்கமைக்கப்பட்டது.

(2) **சமயக் கட்டடங்கள் கட்டப்பட்டமை:**
கடலா தெனிய விகாரை, இலங்க திலகவிகாரை, அம்பக்க தேவாலயம் என்பன கட்டப்பட்டன.

(3) **நான்கு சங்காரச தேரர்கள் புகழ் பெற்றிருந்தமை:**
வில்கம்முலதேரர், தெவனகல வனரத்ன தேரர், சீலவங்ச தர்மகீர்த்தி தேரர், ஜயபாகு தேவரக்கிரதேரர் ஆகியவர்கள் புகழ் பெற்றிருந்தனர்.

(4) **முக்கிய சிங்கள நூல்கள் எழுதப்பட்டமை.**
மயூரசந்தேசய, விமுக்தி சங்கராய, திஸரதேசய, நிக்காய சங்கிறகய, போன்ற நூல்கள் எழுதப்பட்டன..

## 140. கோட்டே இராசதானியாக்கப்பட்டமைக்குரிய காரணங்கள்:

(1) வடபகுதி ஆரியச் சக்கரவர்த்தியின் படையெடுப்புகளிலிருந்து பாதுகாக்கவும், கறுவாப் பிரதேசங்களையும், முத்துக் குளிப்பையும் பாதுகாக்கவும் கோட்டே தலைநகராக்கப்பட்டது

(2) மலையரண் பகுதிகள் எதிரிகளின் படையெடுப்புக்கு உட்பட்டதால் கரையோரப் பகுதியை நாடியமை.

(3) கோட்டேயில் 5ம் புவனேகபாகு பாதுகாப்பு அரணை ஏற்கனவே அமைத்திருந்தமை.

(4) கோட்டையை ஜயவர்த்தனபுரம் என்ற பெயருடன் தலை நகராக்கி முதலில் ஆண்டவன் 6ம் பாரக்கிரமபாகு ஆகும்.

* கோட்டே அரண் "தாறுகம்" என்ற இடத்தில் தியவண்ண ஓயாவை அண்டிய சதுப்பு நிலத்தில் புராதன பாதுகாப்பு உத்திகளைக் கொண்டு அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சாதனைகள்

112 இல் கோட்டேயை ஜெயவாததனபுரம என்ற பெயரில் தலைநகராக்கி 167 வரை 55 வருடங்கள் ஆட்சி புரிந்தான்.

இரண்டாம் பராக்கிரமபாகுவின் பின் இலங்கை முழுவதையும் ஆட்சி செய்த மன்னன் 6ம் பாரக்கிரமபாகுவாகும்.

வன்னிப் பிரதேசத்தை தனது 12 வது ஆட்சியில் வெற்றி கொண்டு அதன் அதிகாரிகளைத் தன் ஆணைக்குக் கீழ் கொண்டு வந்தான்.

(4) சபபுமால் குமரையாவின் தலைமையில் யாழ்ப்பாணத்திற்கு படை அனுப்பி 1450ல் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான்.

(5) மலையகத்தில் ஜோதிய என்பவன் தலைமையில் ஏற்பட்ட கலகத்தை அம்புலகுல குமாரயாவின் தலைமையில் படையை அனுப்பி அடக்கினான்.

(6) இலங்கையின் கப்பலைக் கைப்பற்றிய விஜயநகர அரசின் துறைமுகம் ஒன்றைக் கைப்பற்றி கப்பம் பெற்றான்.

## 142. இலக்கியம்: சமய சேவைகள்

(1) **கோட்டே கால இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய அறிஞர்கள்**

(1) தொட்டகமுவே ஸ்ரீ ராகுல தேரர் (2) காரகலை வனரத்த தேரர் (3) வீதாகம மைத்திரிய தேரர்

(2) சிங்கள இலக்கியத்தில் பொற்காலமாக விளங்கியது மூலாவட சங்கறாவ. புதுகுண அலங்காரய. குத்திலகாமவிய. காவிய சேகர. பரகும்பாசிறித. சத்தர்மரத்னா கறய. கோகிலசந்தேச. பரவிசந்தேச. சலவிஹினிசந்தேச. கிராசந்தேச போன்ற நூல்கள் எழுத்தப்பட்டன.

(3) புகழ் பெற்ற கல்வி நிலையங்கள் தோன்றின.

1) குருநாக்கல் காரஹெல பத்மாவதி பிரிவெனா.

2) தொட்டகமுவ விஜயபாகு பிரிவெனா 3) தேவிநுவரவிஜய பிரிவெனா

4) பபலியான சுனேத்ரா தேவிபிரிவெனா போன்ற கல்வி நிலையங்கள் தோன்றின.

(4) வைத்தியநூல்கள் எழுதப்பட்டன. வைத்திய சிந்தாமணி யோகரத்ன கரய

(1) **சமயசேவைகள்**

(1) கோட்டையில் தலதா மாளிகை அமைத்தான்.

(2) களனிவிகாரையைக் கட்டுவித்தான்.

3) பௌத்த சங்கத்தக்குரிய சீர் திருத்தங்கள் இவனது கல் வெட்டில் உள்ளது

(2) **இந்துமதமும் வளர்ச்சி பெற்றது:**

கோட்டே தலைநகருக்கு அருகில் சிவன் கோயிலையும் காகாமத்தில் ஒரு கோயிலையும் அமைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*143. யாழ்ப்பாண இராச்சியத்தின் முக்கியத்துவத்தைத் தருக.*

(அ) 13ம் நூற்றாண்டில் உருவான யாழ்ப்பாண இராசச்சியம் 17ம் நூற்றாண்டின் முற் பகுதி வரை நிலை பெற்றது.

ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலத்தில் இவ்விராட்சியம் பிரபல்யம் பெற்றது.

(ஆ) மன்னார் கடலிலுள்ள முத்துக்குளிப்பின் பயனாக ஆரியச் சக்கரவர்த்திகள் அதிக வருமானம் பெற்றனர். தூரதேச கடல் வழி வாணிபத்திலும் ஈடுபட்டனர்.

(இ) தென்னிலங்கை இராட்சியங்கள் மீது படை எடுத்த ஆரியச் சக்கரவர்த்திகள் கப்பமும் பெற்றனர். வரோதய சிங்கையாரியன் மகன் மார்த்தாண்ட சிங்கையாரியனின் தென்னிலங்கைப் படையெடுப்பு முக்கியமானது.

(ஈ) யாழ்ப்பாண மன்னர்கள் மதப்பற்றுமிக்கவர்களாக விளங்கினர். பரராசசேகரன் மன்னன் நல்லூரில் பல இந்துக் கோவில்கள் அமைத்தான். நந்தியின் வடிவத்தை அரச சின்னமாகவும் முத்திரையாகவும் கொண்டிருந்தனர்.

## தென்மேற்கில் அமைந்த முதலாவது இராசதானி தம்பதெனியா

**144.** தம்பதெனியா இராசதானி மன்னர்கள்

**3ம் விஜயபாகு 1232-1236:-**

(1) வன்னி விஜயபாகு அல்லது வக்மி விக்கிரமபாகு என அழைக்கப்பட்டவன்.

(2) தம்பதெனியாவை இராசதானியாக்கியவன்.

(3) பெலிகலவில் தந்ததாதுவிற்கு தலதா மாளிகை அமைத்து வைப்பித்தவன்.

(4) முதிர்ந்த வயதில் அரசனாகப் பதவியேற்றதால் 4 ஆண்டுகள் மாத்திரமே ஆட்சி செய்தான்.

**2ம் பாராக்கிரமபாகு 1236-1270:-**

(1) 1255ல் மாகானை நாட்டிலிருந்து விரட்டினான்.

(2) இலங்கை மீது படையெடுத்த சந்திர பாறுவைத் தோற்கடித்தான்.

(3) "கலிகால சாகித்யசர்வக்ஞ பண்டித" என்ற பட்டத்தினால் போற்றப்பட்டவன். கவிசிலுமின என்ற காவியத்தை எழுதினான்.

(4) புத்தகுருமார்களுக்கான தம்பதெனிய "கதிகாவா" என்ற ஒழுக்க நெறிகளைக் கொண்ட நூலை வெளியீட்டான்.

**4ம் விஜயபாகு 1271-1272:-**

(1) சூழ்ச்சியினால் விரைவில் மரணமடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. இலங்கை 1500ம் ஆண்டிற்குப் பின்

145. இராஜவலிய என்ற நூலில் போர்த்துக்கேயரின் வருகை பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. (கொழும்புக் கோட்டைக்கு வந்த போர்த்துக்கேயர் பற்றிக் கொழும்பிலிருந்த சிங்களவர் பின்வருமாறு கோட்டை அரசனுக்கு அறிவித்தனர்.)

> *"அரசனே சிறிய கற்களைச் சாப்பிட்டும் இரத்தத்தைக் குடித்தும் (ரொட்டியும் வைனும்) அங்குமிங்கும் திரியும் அபூர்வ மனிதர் குழு கொழும்பிற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு தொகுதி இறைச்சிக்கும் ஒரு எலுமிச்சைக் காய்க்கும் தரமான வெள்ளிக் காசுகளைக் கொடுக்கிறார்கள். அவர்கள் இரும்பினாலான சட்டையையும் தொப்பியையும் அணிந்துள்ளனர். அவர்களின் பீரங்கிகளிலிருந்து வெளியேறும் சத்தம் பாறைகளில் மோதும் இடியின் முழக்கம் போல் உள்ளது."*

146. போர்த்துக்கேயரின் வருகையை ஊக்குவித்த காரணிகள்.

(1) **1453ல் கொன்ஸ்தாந்தி நோபிளைத் துருக்கியர்கள் கைப்பற்றியமை. இதனால் தரைமார்க்க வியாபாரம் தடைப்பட்டமை.** வாசனைப் பொருட்களைப் பெறப் புதிய கடற்பாதைகளைக் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டது.

(2) **கடல் மார்க்கத்தைக் கண்டுபிடிப்பதில் போர்த்துக்கலும், ஸ்பானியாவும் ஆர்வம் காட்டியமை.** போர்த்துக்கல், ஸ்பானியாவின் பூகோள அமைப்பும், தேசப்பற்றும் அடிப்படையாக அமைந்தது.

(3) **போர்த்துக்கல் அரசன் கடலோடி ஹென்றியின் ஆதரவு.** நாடுகாண் பயணிகளின் செயற்பாடுகளுக்கென போர்த்துக்கல் மாலுமிகளுக்கு விசேட பாடசாலை அமைத்து ஊக்குவித்தான்.

(4) **கிறிஸ்தவ மதத்தைப் பரப்பவும், வாசனைத் திரவியங்களைப் பெறவும் விரும்பியமை.** வாஸ்கொடகாம 1498ல் இந்தியாவின் மேற்கு மலாபார் துறைமுகத்தை வந்தடைந்ததும் "நாங்கள் வாசனைத் திரவியங்களுக்கும், கிறிஸ்தவ மதத்திற்கும் வந்துள்ளோம்" என அறிவித்தார்.

147. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது ஆட்சிநிலை.

16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு முதலில் வந்தபோது (1505) மூன்று அரசியல் பிரிவுகள் காணப்பட்டன.

(1) கோட்டை இராட்சியம் - எட்டாம் வீரபராக்கிரமபாகு

(2) யாழ்ப்பாண இராட்சியம் - பரராஜசேகரன்

(3) கண்டி இராட்சியம் - விக்கிரமபாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*148. "பறங்கியர் கோட்டைக்குச் சென்றது போல்".*

இப்பழமொழி போர்த்துக்கேயர் சிலரை கோட்டை அரசரிடம் அழைத்துச் சென்றவர்கள் கொழும்பிலிருந்து கோட்டை இருக்கும் இடம் மிகத் தொலைவில் இருப்பதாகக் காட்டவேண்டும் என்பதற்காகச் சுற்றுப்பாதை வழியே கோட்டை அரசரின் மாளிகைக்கு அழைத்துச் சென்றமையைக் குறிக்கத் தோன்றியது.

**149.** கோட்டை இராட்சியத்தைப் போர்த்துக்கேயர் கைப்பற்ற உதவிய காரணங்கள்.

(1) **விஜயபாகு கொள்ளை:** 1521ல் கோட்டை அரசன் 7வது விஜயபாகுவினைக் கொலைசெய்து கோட்டை இராசதானியை மூன்று பிரிவுகளாக அவனது பிள்ளைகள் பிரித்துக்கொண்டமையால் அவ்விராட்சியத்தின் பலம் குன்றியது. **போர்த்துக்கேயரிடம் இவ்விராட்சியம் கைமாற இச்சம்பவம் அடிப்படையாக விளங்கியது.**

(2) **கோட்டை இராசதானி மன்னன் புவனேகபாகு, மாயாதுன்னைக்கு எதிராகப் போர்த்துக்கேயரின் உதவியை நாடியமை:** போர்த்துக்கேயர் கோட்டை இராட்சியத்தில் **தமது செல்வாக்கைப் பலப்படுத்த இச்சந்தர்ப்பம் உதவியது.**

(3) **புவனேகபாகு, தர்மபாலனை அரசனாக்கும் பொறுப்பைப் போர்த்துக்கேயரிடம் ஒப்படைத்தமை.** தர்மபாலன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியமை **போர்த்துக்கேயர் கோட்டை இராட்சியத்தின் அரசியல் விடயங்களில் தலையிடவும், 1597ல் தர்மபாலன் இறந்தபின் கோட்டை இராட்சியத்தின் ஆட்சியாளராக மாறவும் முடிந்தது.**

(4) **கோட்டை இராட்சிய மக்களினதும், பிக்குகளினதும் ஆதரவை தர்மபாலன் இழந்தமை.** தர்மபாலன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியதால் மக்களின் கௌரவமும் அன்பும் இல்லாதொழிந்தது. பௌத்தர் அல்லாத ஒருவர் ஆட்சி செய்வதை மக்கள் விரும்பவில்லை.

(5) **1597 மல்வானை ஒப்பந்தம்:** 1587ல் தர்மபாலன் கோட்டை இராசதானி உரிமையத் தனக்குப் பின் போர்த்துக்கேயருக்கு வழங்கினான். இதன் பிரகாரம் தர்மபாலன் 1597ல் இறந்ததும் மல்வானை ஒப்பந்தத்தின்படி போர்த்துக்கல் அரசன் இலங்கை மன்னனாகப் பிரகடனப்படுத்தப்பட்டான்.

**150.** விஜயபாகு கொள்ளை - 1521

(1) "விஜயபாகு கொள்ளை" இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. (2) கோட்டை இராட்சிய மன்னன் ஏழாவது விஜயபாகு முதல் மனைவியின் மூன்று மகன்களுக்குரிய அரசுரிமையை, இரண்டாவது மனைவி சிறிவல்லே இராணியின் மகனான தேவராஜ் சிங்காவிற்கு அளிக்க விரும்பினான். (3) விஜயபாகுவின் மூன்று புதல்வர்களும் அந்நியன் ஒருவனுக்குப் பணம் கொடுத்து விஜயபாகுவைக் கொலைசெய்வித்தனர். (4) மூத்தவன் புவனேகபாகு கோட்டையையும், இரயிகம பண்டார இரயிகமையையும், இளையவனான மாயாதுன்னை சீதாவாக்கையையும் தம்மிடையே பகிர்ந்து கொண்டனர். (5) விஜயபாகு கொள்ளை நடந்திருக்காவிடின் கோட்டை இராட்சியம் பிரிபடாதிருந்திருக்கும். இராட்சியம் பிரிவுபட்டமையும், சகோதரர்களிடம் தோன்றிய பகைமையும் கோட்டை இராட்சியத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**151.** சீதாவாக்கை இராட்சியத்தின் செல்வாக்கு அதிகரித்தமை (எழுச்சியடைந்தமை) க்குரிய காரணங்கள்.

(1) கோட்டை இராட்சியத்தில் போர்த்துக்கேயரின் செல்வாக்கும், மதம் மாற்றங்களும். சீதாவாக்கையின் செல்வாக்கு அதிகரிக்க உதவியது. பௌத்த பிக்குகளும், பிரதானிகளும் சீதாவாக்கைக்குச் சென்று குடியேறினர்.

(2) 1538ல் இரயிகம பண்டாரன் இறந்ததும் சிங்கள மரபின் பிரகாரம் இரயிகம சீதாவாக்கையுடன் இணைக்கப்பட்டமை.

(3) மாயாதுன்னையும், அவனது மகன் 1ம் இராஜசிங்கனும் கோட்டே இராஜதானியுடன் நீண்டகாலம் யுத்தம் செய்தமையால் அதிகளவு நிலப்பரப்புகள் சீதாவாக்கையுடன் இணைக்கப்பட்டமை.

(4) 1562ல் முல்லேரியா யுத்தத்தில் 1ம் இராஜசிங்கனின் போர்த்திறமையால் போர்த்துக்கேயர் தோற்கடிக்கப்பட்டமை.

(5) 1582ல் முதலாம் இராஜசிங்கன் கண்டி இராட்சியத்தின் மீது படையெடுத்து கண்டி மன்னன் கரலியட்ட பண்டாரவைத் தோற்கடித்து சீதாவாக்கை இராட்சியத்துடன் இணைத்தமை.

**152.** சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னையின் திறமைகள்:

(1) 1521ல் சிறிய இராட்சியமான சீதாவாக்கை அரசனாகியவன் இவன் 1580ல் இறக்கும்போது சீதாவாக்கையைப் பலம் பொருந்திய இராட்சியமாக மாற்றினான்.

(2) போர்த்துக்கேயரை 50 வருடமாக இடையறாப் போரில் ஈடுபடவைத்தான்.

(3) பௌத்தமதம், நாட்டின் பாதுகாப்பிற்காக உழைத்தான். கோட்டை இராட்சிய மன்னர்கள் கத்தோலிக் மதத்தைத் தழுவியதும், பௌத்த குருமார்கள், பிரதானிகளுக்குச் சீதாவாக்கையில் ஆதரவு அளித்தான்.

(4) போர்த்துக்கேயரின் கடலாதிக்கத்திற்கு எதிராகக் கள்ளிக் கோட்டை சமோரனின் உதவியைப் பெற்றான்.

**153.** சீதாவாக்கையின் விழ்ச்சிக்குரிய காரணங்கள்:

(1) **முதலாம் இராஜசிங்கன் மலைநாட்டின் மீது அடக்குமுறையைப் பயன்படுத்தியமை.** மலையகத்தைக் கைப்பற்ற உதவிய வீரசந்தர பண்டார என்ற பிரதானியைக் கொலை செய்தமை. இவற்றால் மலைநாட்டு மக்கள் அவனது ஆட்சிக்கு விரோதமாக மாறினர்.

(2) **இந்து மதத்தைத் தழுவியமை. பௌத்தர்களின் விரோதியாக மாறியமை.** முதலாம் இராஜசிங்கன் தனது தந்தையைக் கொலைசெய்யக் காரணமாயிருந்த மனத்தாக்கத்திலிருந்து விடுதலைபெற இந்துமதத்தைத் தழுவினான். பௌத்த குருமாருக்குத் துன்பம் விளைவித்தான்.

(3) **சீதாவாக்கை இராஜதானியின் பொருளாதாரம் நலிவடைந்தமை.** இடையறாத யுத்தத்தில் ஈடுபட்டத்தில் சீதாவாக்கையின் பொருளாதாரம் சீர்குலைந்தது. முதலாம் இராஜசிங்கன் கறுவாயின் விலையை உயர்த்திவைத்திருக்க, மேலதிக கறுவாயை எரித்தான்.

(4) **முதலாம் இராஜசிங்கன் வாரிசின்றித் திடீரென இறந்தமை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலதர்மசூரியனால் தோற்கடிக்கப்பட்டுத் திரும்பும் வழியில் மூங்கில் குத்திய விஷத்தினால் இறந்தான். அத்துடன் ஆளுமை மிக்க அரசகுமாரர்களையும் இவன் கொலை செய்தமையால் எதிர்கால தலைமைத்துவத்திற்கு அரசர்கள் இருக்கவில்லை.

*(1) **முதலாம் விமலதர்மசூரியனின் தலைமையில் மலையகயிராட்சியம் எழுச்சி** பெற்றமை. (2) சீதாவாக்கை இராட்சியத்திடம் கடற்படை இல்லாமை. (3) மலையக இராட்சியத்திற்கு மகாவலிகங்கை இருந்தது போல் சீதாவாக்கை இராட்சியத்திற்கு களனி கங்கை அமையவில்லை. மாறாகக் களனிகங்கை மூலம் படைகளைப் போத்துக்கேயர் கொண்டு செல்ல முடிந்தது.*

**154.** போத்துக்கேயர் கண்டி இராட்சியத்தின் மீது படை எடுத்தமைக்குரிய காரணங்கள்.

(1) **கண்டிய மன்னன் 1ம் விமலதர்ம சூரியன் கத்தோலிக்க மதத்தை விட்டு மறுபடியும் பௌத்த மதத்தைத் தழுவியமை.**

(2) **கண்டி இராட்சியத்திற்கு உரிமையுடைய டொனகதரீனாவை மணந்து கொண்டமை.** கண்டியில் கிறிஸ்தவம். வாசனைத் திரவியங்களுக்குத் தடையாக இருந்தமை. போத்துக்கேயருக்குக் கோபத்தை ஏற்படுத்தியது.

(3) **கோட்டை யாழ்ப்பாண இராட்சியங்களை இலகுவாகச் கைப்பற்றியதில் கண்டியையும் கைப்பற்ற எண்ணியமை.** கண்டி மன்னன் ஒல்லாந்தருடன் தொடர்பு கொண்டமை. ஆகிய காரணங்களால் கண்டி மீது படை எடுத்தனர்.

**155.** போத்துக்கேயர் கண்டியைக் கைப்பற்ற முடியாமைக்குரிய காரணங்கள்

(1) **கண்டி ராட்சியத்தின் இயற்கை அரண்கள்** (2) **கண்டி மக்களின் அரச விசுவாசம்** (3) **போத்துக்கேயரிடம் போதிய படைவீரர்கள் இல்லாமை. கூலிப்படைகளை நம்பியமை முக்கிய காரணங்களாக அமைந்தன.**

**156.** சிங்கள அரசர்கள் போத்துக்கேயர் யுத்தங்கள்

| வருடம் | தலைமைதாங்கிய போத்துக்கேயத் தளபதி | யுத்தம் நடைபெற்ற இடம் | விளைவு | யுத்தத்துக்குத் தலமைவகித்த அரசர்கள் |
|---|---|---|---|---|
| 1562 | அபொன்ஸோ பெரேரா லசர்த்தா | முல்லேரியா | போத்துக்கேயர் தோல்வி | மாயாதுன்னை 1ம் இராஜசிங்கன் |
| 1594 | பெரரோ லோப்ஸ டி சொய்ஸா | தந்துரை | ,, | 1ம் விமல தர்மசூரியன் |
| 1602 | தொன்யெரனியோ டி அசவேது | பலனை | ,, | 1ம் விமல தர்மசூரியன் |
| 1630 | கொன்ஸ்ரன் டி சா | இரந்தெனிவல | ,, | 2ம் இராஜசிங்கன் |
| 1638 | டயகோ டி மெலோ கஸ்த்ரோ | கன்னொறுவா | ,, | 2ம் இராஜசிங்கன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

157. போத்துக்கேயர் ஆட்சியின் செல்வாக்கு

**அ) உரோமன் கத்தோலிக்க மதத்தை அறிமுகம் செய்தமை:-**

(1) கடற்கரையோர மக்களிடம் அதிகம் பரவியது. இச்சமயத்தைத் தழுவியவர்களுக்கு மானியங்கள், நன்கொடைகள், வரிச்சலுகைகள் வழங்கப்பட்டன.

(2) பிரான்ஸிகன் குருமார்கள் மதபிரசார வேலையில் ஈடுபட்டனர்.

**ஆ) திருமணம் சட்டபூர்வ நிலைக்குக் கொண்டு வரப்பட்டது:-**

றொபர்ட் நொக்ஸ் தனது நூலில் மலைநாட்டில் திருமண உறவுகளை எந்த நேரத்திலும் விட்டு விடலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தார். இந்நிலை திருமணத்தைச் சட்டபூர்வமாக்கியதில் மாற்றமடைந்தது.

**இ) கல்வி மூலம் மதம் பரப்பினர்:-**

தேவாலயங்களுக்கு அருகில் பரிஷ் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. வாசித்தல், எழுதல், கணிதம், இலத்தீன், சங்கீதம் ஆகியன கற்பிக்கப்பட்டன.

ஈ) **உரோமானிய கட்டிட நிர்மாணமுறை, ஓவியம், சிற்பக்கலை,** ஆகியவற்றைப் புகுத்தினர்.

உ) **பைலா, கபிரிஞ்ஞா போன்ற சங்கீத** முறைகளை அறிமுகம் செய்தனர்.

ஊ) **மேடை நாடகங்களைப்** புகுத்தினர், கிறிஸ்து நடைமுறையில் வருகின்ற நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன.

**எ) போத்துக்கேயச் சொற்கள் சுதேச மொழியில் கலந்துள்ளன:-**

* சப்பாத்து, பொத்தான், அலுமாரி, மேசை, வாங்கு, பனாப்பு, கடதாசி, வங்கி, பீங்கான், யன்னல், விறாந்தை, தவறணை, துப்பாக்கி

* **குடும்பப் பெயர்கள்**; சில்வா, பெரரோ, பொன்சேகா, அல்போன்சோ, பெர்ணாடோ, சல்காது, பொதேஜ், சீடன், யுவான், செபஸ்ரியான்

**போத்துக்கேயச் சொற்கள் உணவுகளில்:-**

பாண், பிஸ்கற், அச்சாறு, ஊறுகாய், சாராயம், சம்பல், மிளகாய்

* பெயர்களுக்கு முன்னால் "தொன் தொனா", பின்னால் "சிங்கோ" என வழங்கும் முறை

**ஏ) மாட்டிறச்சி சாப்பிட, மதுபானங்களைக் குடிக்க சுதேச மக்கள் பழகியமை.**

ஐ) போத்துக்கேயர் பரம்பரையினர் புத்தளம், மட்டக்களப்பு பகுதிகளில் இன்று வாழுகின்றனர்.

## இலங்கையின் ஒல்லாந்தர் ஆட்சி

**158. ஒல்லாந்தர் கீழைத்தேசத்திற்கு வருகை தந்தமையின் நோக்கங்கள்.**



1) கீழைத் தேசத்தில் போர்த்துக் கேயர் ஈட்டிவந்த பெரும் (வர்த்தக இலாபத்தினை) இலாபத்தினைப்) பெறுவதற்கு.

2) கீழைத் தேசத்தில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்புதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) ஒல்லாந்தர் கீழைத்தேச வாசனைத் திரவியங்களைப் போர்த்துக்கேயர் பெற்று வந்ததை ஸ்பானிய மன்னன் இரண்டாம் பிலிப் தடை செய்தமை.

4) ஒல்லாந்தர் வர்த்தகச் சங்கத்தை 1601 இல் இதன்மூலம் கீழைத் தேசத்திற்கு வர்த்தக நோக்கில் தமது கப்பல்களை அனுப்பிவந்தனர்.

5) கடற் பயணங்களுக்கு ஏற்ற அம்ஸரடாம், பிளான்டர்ஸ் நகரங்கள் ஒல்லாந்தில் காணப்பட்டமை.

**159.** 1638 ஆண்டு இரண்டாம் இராஜசிங்கன் வெஸ்ரவோல்ட் உடன்படிக்கை - முக்கிய அம்சங்கள்

1) போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து துரத்துவதற்கு மேற் கொள்ளப்படும் **போர்ச் செலவை இராஜசிங்கன் செலுத்த வேண்டும்.**

2) போர்ச் செலவுகள் மன்னன் செலுத்தியதும் **கைப்பற்றிய கோட்டைகளை மன்னனுக்கு கையளிக்க வேண்டும்.**

3) போர்த்துக் கேயரின் கைகளிலிருந்து **வெளிநாட்டு வர்த்தகத்தின் ஏகபோக உரிமை ஒல்லாந்தருக்கு வழங்கப்படவேண்டும்.**

4) கோட்டைகளிலிருந்து போர்த்துக் கேயரை துரத்திய பின்னர் **மன்னன் விரும்பினால் மாத்திரமே** ஒல்லாந்தரின் போர் வீரர்கள் அங்கு இருக்கலாம் என கூறப்பட்டது.

**160.** 1638 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் காணப்பட்ட கருத்து வேறுபாடுகள்.




(அ) **ஒப்பந்தம் ஒல்லாந்து மொழியில் எழுதப் பட்டிருந்தமை** மன்னனுடைய விருப்பத்துடன் மாத்திரம் என்ற பகுதி ஒல்லாந்தரின் மொழியில் காணப்படாமை.

(ஆ) ஒப்பந்தம் செய்யப்பட்ட பின் 1639 கைப்பற்றப்பட்ட திருகோணமலையையும், மட்டக்களப்பையும் ஒப்பந்தத்தின் படி மன்னனிடம் ஒப்படைத்தாலும் **1664ல் கைப்பற்றிய நீர்கொழும்பு, காலி, கோட்டைகளை மன்னனிடம் ஒப்படைக்காமை** (இவை கறுவா பகுதிகளை கட்டுப்படுத்தி யமையால் ஒல்லாந்தர் திரும்ப கையளிக்க விரும்பவில்லை)

(இ) **கோட்டையிலிருந்த ஊழியரின் சம்பளத்தைக் கொடுக்கும் பொறுப்பு** தனக்குரியது அல்ல என மன்னன் கூறியது.

**161.** கண்டி இராச்சியத்திற்கும் ஒல்லாந்தருக்கு மிடையிலான தொடர்புகள்.

1) முதலாவது ஒல்லாந்த தூதுவர் **ஸ்பில் பேகன்** 1602ல் கண்டி மன்னன் முதலாம் விமலதர்ம சூரியனை சந்தித்தான்.

2) இரண்டாம் இராஜசிங்கன் ஒல்லாந்தருடைய கடற்படையின் உதவியைப் பெற்று போர்த்துக் கேயரை இலங்கையை விட்டு விரட்டுவதற்காக **1638ல் உடன்படிக்கை செய்தான்.**

3) இலங்கைத் தீவின் வர்த்தகம் முழுவதையும் ஒல்லாந்தர் நீடித்து வைத்திருப்பதற்கு மலையக இராச்சியத்தின் தொடர்புகள் அவசியமாகியது.

4) ஒல்லாந்தருக்கு தேவையான கறுவாவின் ஒருபகுதி. பாக்கு வர்த்தகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பகுதி. இரத்தினக் கற்கள். சாயவேர்கள். முத்து. மாணிக்கம் கண்டியில் பெறவேண்டியிருந்தது

5) ஒல்லாந்தர் உடன் படிக்கையை மீறிய சந்தேகம் மலையக இராச்சியத்துடனான ஒல்லாந்தர் தொடப்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியன.

6) 1658ல் ஒல்லாந்தருக்கும் மலையக இராச்சியத்திற்கும் இடையே நிலவிய உறவுகள் மிகச் சிக்கலானதாக காணப்பட்டது.
ஒல்லாந்தர் ஒருபோது ஆக்கிரமிப்பாளர்களாகவும் இன்னொரு போது நண்பர்களாகவும் காணப்பட்டனர்.

7) 1762 ல் ஜோன் பைபஸ் என்ற ஆங்கிலத் தூதுவன் கண்டி மன்னனைச் சந்தித்தமை ஒல்லாந்தரின் நடவடிக்கையை தீவிரப்படுத்தியது.

8) 1766ல் வான்எக் மலையக இராச்சியத்தினைக் கைப்பற்றினான். இவனுக்குப் பின் பதவியேற்ற விலென் பால்க 9) 1766ல் கண்டி மன்னனுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டான்.

**162.** 1766ம் ஆண்டு கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் - ஒல்லாந்தர் ஒப்பந்தம்.

1) இவ்வுடன்படிக்கை ஹங்குராங்கத்தையில் கையொப்பமிட்டமையால் ஹங்குராங்கெத்தை உடன் படிக்கை எனப்பட்டது.

2) ஒல்லாந்தரின் ஆதிக்கத்திற் குரிய பிரதேசங்களாக யாழ்ப்பாணம். கொழும்பு ஆகிய திசாவனிக. கற்பிட்டி. மன்னார். திருகோணமலை. மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

3) மகாஓய முகத்துவாரப் பகுதியிலுள்ள கம்மலவிலிருந்து யாழ்ப்பாணம் வரையும் கம்மலவிலிருந்து வளவகங்கை வரை ஆட்சிக்குட்பட்ட பிரதேசம் ஒல்லாந்தரின் ஆதிக்கத்திற்கு உற்பட்டது.

4) மலைநாட்டிலும், தாழ்பிரதேசத்திலும் சுதந்திரமாக வர்த்தகம் செய்யும் உரிமை ஒல்லாந்தருக்கு வளங்கப்பட்டமை.

5) கண்டிமக்கள் தீவின் கிழக்கு. மேற்கு கரையோரங்களில் உப்பு பெறும் உரிமை (லவா என்றும் உப்பும் பெறும் உரிமை) ஒல்லாந்தரினால் வழங்கப்பட்டது.

**163.** **"இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போன்றது"** இரண்டாம் இராஜசிங்கனின் செயல் இப்பழமொழியின் கருத்தை ஏற்றது என்ற கருத்து பொதுமக்கள் மத்தியில் உண்டானது. போர்த்துக்கேயரை இலங்கை யிலிருந்து துரத்துவதற்காக ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் செய்தான் ஒல்லாந்தர் ஒப்பந்தத்தை மீறியபோது இரண்டாம் இராஜசிங்கனால் எதிர்க்க முடியவில்லை இதனால் இஞ்சி(போர்த்துக் கேயர்) கொடுத்து மிளகாய் (ஒல்லாந்தரை) வாங்கியது போல் எனக் கருதப்பட்டது.

**164.** ஒல்லாந்தரின் ஆட்சிக்கொள்கை

**I. அரசியற் கொள்கைகள்**



(அ) **அமைதியைப் பேணும் கொள்கைகள்:** ஒல்லாந்தர் தமது பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதற்கு மலையக மன்னனுடன் சமாதான அரசியல் கொள்கை களைக் கடைப்பிடித்தான்.

(ஆ) யுத்தத்தை தவிர்க்கமுடியாதவிடத்து மட்டும் உரியது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1765ல் பன் எக் என்ற ஒல்லாந்த தேசாதிபதியன் தலைமையில் மலையக இராச்சியத்தை ஆக்கிரமித்து 1766ம் ஆண்டு ஒப்பந்தம் மூலம் தமது அரசியல் கொள்கைகளை நிறைவேற்றினர்.

### II. பொருளாதாரக் கொள்கைகள்

(அ) வர்த்தகம் மூலம் முடியுமானவரை கூடிய இலாபத்தைப் பெற்றுக் கொள்ளல்.

(ஆ) கறுவா வர்த்தகத்தில் ஏகபோக உரிமை கொண்டிருந்தனர்.

(இ) நெல் உற்பத்தியை விருத்தி செய்தனர் (நீர்கொழும்பு கால்வாயை புனரமைத்து முத்துராஜவெலப் பகுதியில் பயிர் செய்வதை முக்கிய விவசாய நோக்கமாக கொண்டிருந்தனர்)

(ஈ) மரக்கைத் தொழில், நெசவுக் கைத்தொழில், சீனி உற்பத்தி செய்தல், துணிக்கு சாயமடித்தல் போன்ற கைத்தொழிலில்களில் ஈடுபட்டனர்.

### III. சமயக் கொள்கைகள்

(அ) **புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தினை பரப்புவதில் அதிக உற்சாகம் காட்டினர்.** விரைவான மதமாற்றுக் கொள்கையைப் பின் பற்றினாலும் போர்த்துக் கேயரைப் போல் வெற்றி பெறவில்லை.

(ஆ) **மிசனிமாரின் சேவையினூடாகக் கல்வி வழங்கப்பட்டது.** மதத்தைப் பரப்புவதற்குரிய வழிகளாக கல்வி கற்பித்தல், பதவிகளை வழங்குதல் பொருளாதார சலுகைகளை வழங்குதலைப் பின்பற்றினர்

(இ) **கத்தோலிக்க சமயத்திற்கு எதிரான மதக் கொள்கைகள் கடைப்பிடித்தனர்.** ஒல்லாந்தரின் பிரதேசங்களுக்குள் கத்தோலிக் குருமாரின் வருகை தடுக்கப்பட்டது.

**165.** ஒல்லாந்தரின் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகள்

1) **புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தினைப் பரப்பினர்.**
2) **உரோமன் டச்சுச்சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.**
3) **தேச வழமை** என்னும் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களிடம் செல்வாக்குச் செலுத்திய சட்டங்களின் தொகுப்பை வெளியிட்டனர்.
4) லாந்ராட்(மாவட்ட நீதி மன்றம்)சிவில் றாட்டு(பொதுத் துறை நீதி மன்றம்) எனப்பட்ட நீதி மன்றங்களுக்கும் றாட்வான் ஜஸ்ரிஸ் எனப்படும் பிரதம நீதியரசர் தலைமையிலான நீதிமன்றமும் அமைக்கப்பட்டது.
5) **ஒல்லாந்தரின் கட்டிட முறை இந் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.** உயர்ந்த கூரை, பரந்த விறாந்தை, யன்னல் அம்சங்கள் கொண்ட வீடுகள் அமைக்கப்பட்டன. கொழும்பு, காலி, யாழப்பாணம், திருகோணமலை, மன்னாரில் கோட்டைகள் அமைத்தனர்.
6) **நவீன அச்சுக் கலையை அறிமுகப்படுத்தினர்.** முதலில் அறிமுகம் செய்யப்பட்டது தமிழ், சிங்கள மொழியில் கிறிஸ்தவ இலக்கியங்கள் அச்சிடப்பட்டன.
7) **தமிழில் ஒல்லாந்த சொற்கள் கலந்துள்ளன.**
   கந்தோர், நொத்தாரிசு,சக்கடத்தார்,தோம்பு, கோர்க்கியம்
8) கோப்பி வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையாக ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின் தென் மேற்கு பகுதியில் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைக்கு அத்திவாரமிடப்பட்டது.
9) **நகர் நிர்மாணத்தில் கவனம் செலுத்தினர்** கோட்டை, புறக்கோட்டை என அமைந்தமை. குஷ்ரரோக வைதிய சாலை அமைந்தமை.
10) ஒல்லாந்தர் ஆட்சியால் இலங்கையில் பறங்கியர் என ஒரு இனம் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. இலங்கையும் பிரித்தானியரும்

**166.** பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்ற அடிப்படையாக விளங்கிய காரணங்கள்.

1) கீழைத் தேசத்தில் இந்தியாவின் தமது ஆதிக்கத்தினைப் பரப்பவும் பாதுகாக்கவும் இலங்கையைக் கைப்பற்ற விரும்பினர்.

2) கீழைத் தேசவர்த்தக நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கு இலங்கையைக் கைப்பற்ற விரும்பினர்.

3) வடகீழ்ப் பருவக்காற்றறுக் காலத்திலும் வங்காள விரி குடாவில் ஏற்படும் புயல் காலத்திலும் கடற்படையைப் பாதுகாக்கத் திருகோணமலை துறைமுகம் அவசியமாகியது.

4) ஒல்லாந்தரின் பிரேதசங்களைப் பிரான்ஸ் கைப்பற்றாது தடுக்கவும் இந்தியாவில் பிரான்ஸ். பிரித்தானியப் போட்டி நிலவியமையும் பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்ற அவசியமாகியது.

**திருகோணமலை துறைமுகத்தின் அமைவிடம்: முக்கியத்துமும்** பிரித்தானியப் பிரதமர் "பிற்" என்பவர் பிரித்தானிய பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது "பிரித்தானியாவில் கிழக்கிந்திய உடைமைகளைப் பாதுகாக்க இலங்கை. திருகோணமலை துறைமுகத்தினால் முக்கியமடைகிறது" எனக் குறிப்பிட்டார். பிரித்தானிய கடற்படையைப் பாதுகாக்க தண்ணீர் பெற. பழுதுபார்க்க. தரித்து நிற்க. திருகோணமலை அவசியமாகியது.

**167.** இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனி கைப்பற்றியமை.

*1) **ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைப் பிரித்தானியர் கைப்பற்ற ஆறு மாதங்கள்** ( 1795 யூலை 2 முதல் 1796 பெப்ரவரி 15 வரை) **எடுத்தன.** கியு கடிதத்தின் அடிப்படையிலேயே கைப்பற்றல்களைப் பிரித்தானியர் மேற்கொண்டனர்.*

*2) 1795 ஆவணி மாதம் 26ல் **திருகோணமலை.** புரட்டாதி 17ல் **மட்டக்களப்பு.** புரட்டாதி 27 **யாழ்ப்பாணம்.** ஐப்பசியில் **மன்னார்.** நவம்பரில் 24ல் **புத்தளமும். கற்பிட்டியும்** 1795ம் ஆண்டு முடிவில் **நீர்கொழும்பு. காலி. கொழும்பை விட** எல்லா ஒல்லாந்தப் பிரதேசங்களையும் கைப்பற்றினர்.. 1796 பெப்ரவரி 15ல் **கொழும்பை** கைப்பற்றியதுடன் பிரித்தானியர் அட்சி ஆரம்பமானது.*

**168.** பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சி 1796 - 1798

1) கரையோரப் பிரதேசங்களை வருவாய் சேகரிக்கும் பொருட்டு **மூன்று பிரதான பிரிவுகளாகப் பிரித்தனர்.** ஒவ்வொரு பிரிவுகளுக்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இவ்வதிகாரிகளின் காரியாலயம் கச்சேரி எனப்படும்.

*(அ) திருகோணமலையுடன் மட்டக்களப்பு. முல்லைத்தீவும்.*
*(ஆ) யாழ்ப்பாணத்துடன் மன்னார், கற்பிட்டியும்.*
*(இ) கொழும்புப் பிரிவு சிலாபம் தொடக்கம் மாத்தளை வரையும் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) **அவுமில்தாரர்கள்** எனப்படும் வருமானம் சேர்க்கும் அதிகாரிகள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர்.

3) **1797ல் வர்த்தக சங்கத்திற்கு எதிராக எழுந்தகிளர்ச்சியைத் தொடர்ந்து இரட்டை ஆட்சி ஏற்பட்டது.**

**169.** இரட்டை ஆட்சி 1798 - 1802

**நிலவிய காலம்:** பிரட்ரிக் நோத் தேசாதிபதியாக பதவி ஏற்ற காலம் முதல் (1796 ஒக்டோபர் 12) இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாகும் வரை (1802 யூன் 1) இரட்டை ஆட்சி முறை நிலவியது.

**அமைப்பு:** இலங்கையின் **நிர்வாகம், நீதி பரிபாலனம் பிரித்தானிய ஆள்பதியிடமும் வர்த்தகமும் இறைவரியும் பிரித்தானிய வர்த்தக சங்கத்திடமும் விடப்பட்டது.**

வர்த்தக சங்கங்க உத்தியோகத்தர்களுக்கும், தேசாதிபதியின் உத்தியோகத்தர்களுக்குமிடையில் நல்லுறவுகள் காணப்படாமையாலும் வர்த்தக சங்க உத்தியோகத்தர்களிடம் ஊழல், இலாபமீட்டல் காரணமாகவும் இரட்டை ஆட்சி முறை தோல்வியுற்றது.

**170.** பிரித்தானிய ஆள்பதிகள்

| | |
|---|---|
| 1) **பிரட்ரிக் நோத் (1798 - 1805)** | *புதிய திணைக்கழகங்கள் நிறுவினார்.*<br>*நீதித்துறை சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.*<br>*1803 கண்டி மீது படையெடுத்தார்.* |
| 2) **சேர் தேமஸ்மெயிட்லாந்து (1805 - 1811)** | *நிருவாகச் சீர்திருத்தங்கள் மேற் கொண்டார்.*<br>*நீதிபாலன சீர்திருத்தங்கள் மேற் கொண்டார்.*<br>*யூரிசபையை அமைத்தார்.* |
| 3) **சேர் றொபர்ட் பிரவுன்றி (1812 - 1820)** | *கண்டியைக் கைப்பற்றினார் (1815)*<br>*கண்டி உடன்படிக்கையை மேற் கொண்டார் (1815)*<br>*1818 சுதந்திரப் போராட்டத்தை அடக்கினார்* |

**171.** கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு ஏதுவான காரணிகள்.

கண்டி இராச்சிய **மன்னனுக்கும் எகலப்பொல மற்றும் பிரதானிகளுககுமிடையே நிலவிய பகைமை. சப்பிரகமுவ பிரதேசத்தில் ஏற்பட்ட கிளர்ச்சி.**

2) கிளர்ச்சியை **கொடூரமாக அடக்கியமையும்** கிளர்ச்சிக்கு காரணமாயிருந்த பிரதானிகளின் குடும்பங்களை அழித்தமை.

3) மொரதொகுடா உன்னான்சே போன்ற **பிக்குகளுக்கு மரணதண்டனை அளித்தமை.** பிக்குகளை எதிர்த்தமை.

4) **மனிதாபிமானமற்ற தண்டனைகளை சமய முக்கியத்துவம் வாய்ந்த தேவ சங்கிந்தையில் நிறைவேற்றியமை** ஆகிய வற்றால் சாதாரண மக்கள் கோபம் கொண்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) **தேசாதிபதி பிரவுன்றிக் திட்டமிட்டு** படையெடுத்தமை பிக்குகளினதும். பிரதானிகளினதும். மக்களினதும் எதிர்ப்புக் குள்ளாகியிருந்த கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை 45 நாட்களில் தோற்கடித்து கண்டியைக் கைப்பற்றியமை.

## 172. கண்டி உடன்படிக்கை - 1815

1) 1815 மார்ச் 2ம் திகதி **பிரித்தானிய** மன்னன் **சார்பில் தேசாதிபதி பிரவுன்றிக்கும் கண்டியரசன் சார்பில் எகலப்பொலவன்** தலைமையிலான பிரதானிக்கும் **கண்டி மகுல்மடு மண்டலத்தில்** இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

யோன்டொய்லி வரைந்த இவ் உடன்படிக்கை 11 பிரிவுகளாகக் கொண்டிருந்தது ஆங்கில. சிங்கள மொழி மூலம் வாசிக்கப்பட்டது.

உடன்படிக்கையில் கைச்சாத்திடமுன் ஏற்பட்ட ஆங்கிலேயரின் கொடியை வாரியப்பொல பிக்கு கீழே இறக்கிவிட்டு சிங்களவரின் கொடியை ஏற்றிப்பறக்க விட்டார்கள்.

2) **கண்டி உடன்படிக்கையில் முக்கிய அம்சங்கள்.**

(அ) கண்டி இராச்சியம் பிரித்தானியரிடம் கையளிக்கப்பட்டது.

(ஆ) கண்டியரசன் உரிமை இழந்துள்ளான்.

(இ) பிரதானிகளின் அதிகாரங்கள். உரிமைகள் தொடர்ந்து பேணப்படும்.

(ஈ) பௌத்தமதம் (5 வது பிரிவில் கூறப்பட்டது) சிடங்குகள். பரிபாலனங்கள். வழிபாட்டு இடங்கள் பாதுகாக்கப்படும்.

(உ) மனிதாபிமானமற்ற தண்டனைகள் நீக்கப்படும்.

## 173. 1818 சுதந்திரப் போராட்டத்திற்குரிய காரணிகள்

(அ) **1815 கண்டி உடன்படிக்கை நிபந்தனைகளைச் செயற்படுத்தாமை.**

(ஆ) பிரதானிகள் செல்வாக்குச் சலுகைகளை இழந்தமை புதிய வரிமுறைகளால் எல்லைவரிகள் மூலம் பெற்ற வருமானத்தைப் பிரதானிகள் இழந்தமை.

(இ) **பௌத்தமத குருமார்கள் புறக்கணிக்கப்பட்டமை.**

(ஈ) **உடனடிக்காரணம் : வெல்லஸவில்** முஸ்லீம் மக்களுக்கென புறம்பான **முஸ்லீம்முகாந்திரம் நியமிக்கப்பட்டமை.** இன்றிய மனம் சிங்களதிசாவையின் அதிகாரங்களை அலட்சியம் செய்வதாகக் கருதப்பட்டது. **ஊவாப் பகுதியில்** மலையக சிம்மாசன உரிமை கோருபவனைக் பிடிக்கச் சென்ற பதுளை உதவி அரசாங்க அதிபர் சில்வெஸ்ரர் வில்சனும் முஸ்லீம் முகாந்திரம் ஹஹ்கி மரைக்காரும் கொலை செய்யப்பட்டமை. **கிளர்ச்சியை அடக்கச் சென்ற கொப்பற்றிப் பொல கலகக்காரர் பக்கம் சார்ந்தமை.**

## 174. 1818 சுதந்திர போராட்டம் தோல்வி அடைந்தமைக் குரிய காரணங்கள்.

(அ) **போராட்டத்தை கொடூரமாக அடக்கியமை. வெல்லஸ் பகுதியின்** செலிப்பான வயல் நிலங்களை அழித்தனர். உணவுத் தட்டுப்பாடை ஏற்படுத்தினர். மக்களைப் பயமுறுத்தினர்.

(ஆ) **போராட்டம் கட்டுக்கோப்பு உடையதாக இருக்கவில்லை. பிரதானிகளிடம் ஒற்றுமை இருக்கவில்லை** கொப்பிற்றிப்பொல மடுவல்ல திசாவைகள் சிரச்சேதம் செய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**175.** 1848 சுதந்திரப் போராட்டத்திற்குரிய காரணங்கள்

(அ) **சுதேச வாசிகளான விவசாயிகளின் நலன்கள் கவனிக்கப்படாமை. விவசாயம் நீர்ப்பாசனம் புறக்கனிக்கப்பட்டமை.**

(ஆ) **தேசாதிபதி வைகவுண்ட் ரொறிங்டனின் தன்னிச்சையான ஆட்சிமுறை.**

(இ) **நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக** (கோப்பிச் செய்கை மந்தநிலை அடைந்தமை காரணமாக) **தாங்கிக் கொள்ள முடியாத அளவில் புதிய வரிகளை தேசாதிபதி ரொறிங்டன் புகுத்தியமை.**

உ+ம்:- நாய்வரி. தோணிவரி. துவக்கு வரி. விறாந்தைவரி.

(ஈ) **தேசிய தொழில்கள் பாதிப்படைந்தமை** இங்கிலாந்திலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் இந்நிலை தோன்றியது.

(உ) **விவசாயிகள் செழிப்பான பயிர்ச்செய்கை நிலங்களை இழந்தமை** தோட்டப்பயிர்செய்கை காரணமாக 1840 ஆண்டு பாழ்நிலச்சட்டத்தினால் காணிகளை இழந்தனர். இப்போராட்டம் பரந்த அளவில் **மாத்தளை, குருணாகலிலும்** சிறிய அளவில் **கொழும்பிலும்** நடைபெற்றது.

**கொங்கல கொட பண்டார, புறன் அப்பு, குடாபொல** (மதகுரு) ஆகியோர் இப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

போராட்டத்தைக் கொடூரமாக அடக்கியதாலும், தலைவர்கள் விவசாயிகளிடமிருந்தே தோன்றியதாலும் விரைவாகக் கலகம் தோல்வியடைந்தது.

**176.** 1833 கோல்புறூக்விதந்துரைப் படி ஆட்சி முறை மறுசீரமைக்கப்பட்ட முறைகள்.

1) இலங்கையின் பழையஆட்சிப்பிரிவுகள் நீக்கப்பட்டு முழு **இலங்கையையும் 5 பிரிவுகளாகப் பிரித்து** ஒரேவகையிலான ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது.

2) **அரசாங்கத்தின் வியாபார ஏகபோக உரிமை நீக்கப்பட்டது.** சுதந்திர வர்த்தகத்திற்கு வாய்ப்பளிக்கக் கூடிய புதிய பொருளாதாரப்பாணி உருவாக்கப்பட்டது.

3) சட்டநிரூபண, சட்டநிர்வாகசபை கொண்ட **சட்டவாக்கக் கழகம்** அமைக்கப்பட்டது.

4) **இராஜகாரிய முறை நீக்கப்பட்டது.**

5) சட்டத்துறை நடவடிக்கைகளுக்காக **உயர் நீதிமன்றம் அமைக்கப்பட்டது.**

6) நிரந்தர உரிமை பெறாத அரசாங்க நிலங்கள் பெருந் தோட்டப்பயிர்ச் செய்கைக்காக இலகுவான நிபந்தனைகளில் விற்கப்பட்டது.

**177. கோல்புறூக் மறுசீரமைப்பினைத் தொடர்ந்து சட்டவாக்கக் கழக அங்கத்துவ முறை மாற்றமடைதல்.**

| சட்டவாக்கக் கழகம் (1833-1931) | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | யாப்புமுறை | முழு அங்கத்தவர் தொகை | உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் | உத்தியோகப் பற்றுள்ள அங்கத்தவர்கள் |
| 1833 | கோல்புறூக் | 15 | 6 | 9 |
| 1889 | கோல்புறூக் | 17 | 8 | 9 |
| 1910 | மக்கலம் | 21 | 10 | 11 |
| 1920 | மனிங் | 37 | 23 | 14 |
| 1924 | மனிங்டிவன்சயர் | 49 | 37 | 12 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**178.** 1931 டொனமூர் ஆட்சி முறையின் விசேட அம்சங்கள்
1) **சர்வசனவாக் குரிமை வழங்கப்பட்டமை.**
2) **அரசுக்கழகம் 61 அங்கத்தவர்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டமை.**
3) **நிருவாகக் குழு முறை ஆரம்பிக்கப்பட்டமை.** 7 நிருவாகக் குழுக்கள் அமைக்கப்பட்டது.
4) **10 பேரைக் கொண்ட அமைச்சரவை அமைக்கப்பட்டமை** நிருவாகக் குழு தலைவர்கள் ஏழுபெரும் அரசாங்க அலுவலர் மூவரும் அதில் இடம் பெற்றனர்.

**179.** 1947 சோல்வரி ஆட்சி முறையின் பிரதான அம்சங்கள்.
1) **மகாதேசாதிபதி நியமிக்கப்பட்டமை.**
2) **இருசபை கொண்ட பாராளுமன்றம் நிறுவப்பட்டமை.**
செனட்சபை 30 அங்கத்தவர்கள் பிரதிநிதிகள் சபை 101 அங்கத்தவர்கள்
3) **பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை உருவாக்கப்பட்மை.**
4) அரசாங்க சேவை ஆணைக்குழு. நீதிச் சேவை ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை.
5) கட்சிகளின் அடிப்படையில் கூடுதலான ஆசனங்களைக் கொண்ட கட்சித்தலைவர் பிரதமராதல்.
6) பிரதமரின் ஆலோசனைப்படி அமைச்சரவை அங்கத்தவர்களை மகாதேசாதிபதி நியமித்தார்.

**180.** பிரித்தானியரின் ஆட்சியினால் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள்.
1) **பயிர்ச் செய்கை வளர்ச்சியடைந்தமை. (உணவு ப் பயிர்ச்செய்கை வர்த்தகப் பயிர்ச் செய்கை.**
2) **போக்குவரத்துச் செய்திப் பரிமாற்றம் விஸ்தரிக்கப்பட்டமை.**
3) **சுகாதாரம். கல்வி வளர்ச்சியடைந்தமை.**

**181.** நீர்ப் பாசனம் புனரமைக்கப்பட்டமை.

> கோல்புறூக் சீர்திருத்தங்களினால் இராஜகாரிய முறை நீக்கப்பட்டது. விவசாயம். நீர்ப்பாசனம் சீர் குலைந்தது. 1848ல் விவசாயிகள் கலகம் ஏற்பட்டது. இவற்றின் அடிப்படையில் உணவுப்பயிர்ச் செய்கை நீர்ப்பாசன புனரமைப்பில் ஆங்கிலேயர் அக்கறை கொண்டனர்.

**நீர்ப்பாசன புனரமைப்பில் - ஆள்பதிகளின் பணிகள்**

(அ) **சேர் ஹென்றிவாட் (1855 - 1860)** மேற் கொண்ட நீர்ப்பாசன பணிகள்.
கிழக்குப் பகுதியில்: இறக்காமக் குளம். அம்பாறைக் குளம்
தென் பகுதியில்: கிராம. ஊருபொக்கைக் குளங்கள்
ஆகியவற்றையும் மாத்தளை. ஊவாப்பகுதியில். சிறு குளங்கள் கால்வாய்களையும் புனரமைப்புச் செய்தார்.

(ஆ) **வில்லியம்கிரஹறி (1872 - 1877)** பசவக்குளம். கந்தளாய்க் குளம். கல்கமுவக் குளம் ஆகியவற்றைப் புனரமைத்தார். 2) கன்சபாக்களின் உதவியுடன் கிராமக் குளங்கள். கால்வாய்கள் திருத்தப்பட்டன. ஜய கங்கை கால்வாய் புனரமைப்பு திட்டத்தை ஆரம்பித்தார்.

(இ) **ஆதர் கோடன் (1883 - 1890)** ஜய கங்கை கால்வாயை புனரமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தைப் பூர்த்தி செய்தார். 2) ஊவா. சப்பிரகமுவா மாகாணங்களில் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டார். 3) 42 குளங்கள் பழுது பார்க்கப்பட்டன. 164 மதகுகள் கட்டப்பட்டன.

(ஈ) **வெஸ்ற் றிஜ்வே (1896 - 1803)** 1) 1900 ல் நீர்ப்பாசன திணைக்களம் நிறுவப்பட்டது. 2) வரண்ட பிரதேசங்களில் விவசாயக் குடியேற்றம் நிறுவுதல் கிராமங்களை அமைத்தல். போன்ற அபிவிருத்திகளை மேற் கொண்டார். 3) வட மாகாணத்தில் நீர்ப்பாசனத் திருத்தங்களை இவரே முதலில் ஆரம்பித்தார்.

**போக்குவரத்து வளர்ச்சி. நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டமை**

1) மலைநாட்டின் இயற்கைப் பாதுகாப்பை மாற்றியமைக்கும் நோக்குடன் தெருக்கள் அமைக்கப்பட்டன.
(அ) **எட்வேர்ட் பாண்ஸ்** 1) கொழும்பு-கண்டி நெடுஞ்சாலை. 2) குருணாகல்-கண்டி நெடுஞ்சாலை 3) தம்புள்ள-கண்டி. அம்பேபுஸ்ஸ தம்புள்ள நெடுஞ்சாலைகளை அமைத்தார்.
(ஆ) **வில்மட் ஹோட்டன்** 1) கண்டி-மாத்தளை நெடுஞ்சாலை அமைத்து அதனைத் தம்புள்ள வரை விஸ்தரித்தார்.

2) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை விருத்திக்காகவும் நிருவாக நடவடிக்கைகளுக்காகவும் வீதிகள் அமைக்கப்பட்டன.

**182.** புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டமை.

**தூண்டுதலாக விளங்கிய காரணங்கள்**

*1) கோப்பி ஏற்றுமதிச் செலவைக் குறைப்பதற்காக.*
*2) அக்காலத்திலிருந்த வண்டிகள் பொருட்களை ஏற்றியிறக்கப் போதுமானதாக இருக்கவில்லை.*
*3) பிரித்தானிய முதலீட்டை அதிகரிக்கச் செய்வதற்காகவும் புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டன.*

**புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்ட ஆண்டுகள்.**

| ஆண்டு | புகையிரதப் பாதை |
|---|---|
| 1863 | கொழும்பு - கண்டி |
| 1871 | பேராதனை - நாவலப்பிட்டி |
| 1899 | நாவலப்பிட்டி - பண்டாரவளை |
| 1899 | கண்டி - மாத்தளை |
| 1877 | கொழும்பு - பாணந்துறை |
| 1905 | பொல்காவெல - யாழ்ப்பாணம் |
| 1905 | மதவாச்சி - தலைமன்னார் - மாகோ - மட்டக்களப்பு - திருகோணமலை |
| 1912 | களனி வெளிப்பாதை - இரத்தினபுரி |

**183.** 1931க்குப் பின் மேற் கொள்ளப்பட்ட சமூக நலசேவைகள். சுகாதார சேவை வளர்ச்சி

1) கிராமப்புறங்களில் புதியவைத்தியசாலைகள் அமைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) மலேரியா போன்ற கொள்ளை நோய்கள் பரவாது தடுக்கப்பட்டது.
3) நாட்டில் பரவலாக நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
4) சிசுக்கள், கர்ப்பிணித் தாய்மார்களின் மரணவீதம் குறைந்தது.
5) சனத்தொகை அதிகரிப்பு விரைவாகக் கூடிச்சென்றது.

**184.** கல்விச் சேவை வளர்ச்சி

1) **1945ம் ஆண்டு இலவசக் கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டது.** பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை **இலவசக் கல்வி வழங்கப்பட்டது.**
2) **1944ம் ஆண்டு ஆங்கில மொழிமூலம் இடைநிலைக் கல்வியை விரிவாக்க மத்திய மகாவித்தியாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன.** நாட்டின் எல்லாப் பாகங்களிலும் சிரேஸ்ட, கனிஸ்ட மத்திய பாடசாலைகள் தோன்றின.
3) **1942ல் இலங்கை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.**
4) பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவச மதியபோசனம், சுகாதார சேவை வசதிகள் வழங்கப்பட்டன.

**185.** இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரசியல் சீர்திருத்தங்கள் கோரிக்கைகளை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்த சங்கங்கள்.

1) இலங்கைத் தேசியசங்கம்
2) சிலாபச் சங்கம்
3) யாழ்ப்பாணச் சங்கம்
4) தாழ்நிலப் பிரதேச பயிர்ச் செய்கையாளர் சங்கம்

**186.** தேசியமட்டத்தில் அரசியற் சீர்திருத்தம்கோரிக் கிளர்ச்சி செய்தவர்கள்.

1) சேர் ஜேம்ஸ் பீரிஸ்
2) சேர் பொன்னம்பலம் இராமநாதன்
3) திரு. பொன்னம்பலம் அருணாசலம்
4) திரு.எவ்.ஆர். சேனாநாயக்கா
5) திரு.எஸ்.டபில்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா
6) திரு. ஏ.ஈ. குணசிங்க
7) திரு.டி.எஸ். சேனாநாயக்க
8) திரு.ஈ.டபிள்யூ. பெரேரா
9) திரு.சீ.ஏ. ஹேவா விதாரன
10) சேர் டி.பி. ஜயதிலக

**187.** சமய கலாசார மறுமலர்ச்சி என்றால் என்ன?

ஆங்கிலேயரின் கல்வி முறையின் காரணமாகத் தேசியகலாசாரங்கள் கைவிடப்பட்டதனால் அவற்றைப் பாதுகாக்கவும் கட்டியெழுப்பவும் ஆரம்பித்த இயக்கங்கள் மூலம் சமய கலாசார துறையில் ஏற்பட்ட எழுச்சியே சமய கலாசார மறுமலர்ச்சி எனப்படும்.

**188.** பௌத்தசமய மறுமலர்ச்சி

பௌத்தசமயப் பற்றை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் எனக் கருதி சேவையாற்றிய பெரியோர்கள்.

1) வெலிவிற்ற சிறீசரணங்கர சங்கராம பிக்கு 2) வலபனை சித்தார்த்த பிக்கு
3) ஹிக்கடுவ சிறீ சுமங்களபிக்கு 4) அநகாரிக தர்மபால 5) ஹென்றி ஒல்கொட்
6) இரத்மலானை தர்மபால பிக்கு 7) டி. பி. ஜெயதிலக 8) பியதாச சிறிசேன

**ஹென்றி ஒல்கொட்:** 1) ஆனந்தாக் கல்லூரியின் ஸ்தாபகர்
2) பௌத்த பரமார்த்த விஞ்ஞான சங்கத்தை அமைத்தவர்
3) பௌத்த கொடி உருவாகக் காரணமானவர்.
4) வெசாக் போயாதின விடுமுறையாக்ககாரணமானவர்

**அநகாரிக தர்மபால:** 1) புத்தகயாவைப் பௌத்தர்களுக்கு மீண்டும் பெற்றுக்கொடுத்தார். 2) மகா போதி சங்கத்தை நிறுவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**189.** இந்துசமய மறுமலர்ச்சி





இலங்கையில் சுதேச சமய மறுமலர்ச்சிக்கு வடக்கிலிருந்து ஒலித்த குரல் **ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலராகும்.**

1) வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாசவித்தியாசாலை ஆரம்பித்தார்.

2) சைவப்பிரசங்கங்கள் மூலம் நிந்தித்த கண்டனங்களை எதிர்த்தார்.

3) சைவப் பிரகாசசபை அமைத்து, அச்சுக்கூடம் நிறுவிபணியாற்றினார்.

**சேர் பொன் இராமநாதன்:** பகவத் கீதை விரிவுரை. செந்தமிழ் இலக்கணம் ஆகிய நூல்களை எழுதினார். பெண்களுக்காக மகளிர் கல்லூரியையும், ஆண்களுக்காக பரமேஸ்வராக் கல்லூரியையும் நிறுவினார்.

**190.** இஸ்லாமியசமய மறுமலர்ச்சி





முஸ்லிம்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காக ஆரம்ப பாடசாலை (மக்தப்) களையும், இடைநிலைப் பாடசாலை (மத்ரஸாக்) களையும் நிறுவினார். அந்நியப் பண்பாடு இஸ்லாமில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் மிசனரிப் பாடசாலைகளுக்கு முஸ்லிம்கள் செல்லவில்லை.

**எம்.எஸ். சித்திலெப்பை** நவீன ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை முஸ்லிம்களை உணரச் செய்தார். கொழும்பில் முஸ்லிம் சங்கத்தை ஸ்தாபித்தார். தமிழ் முஸ்லிம் நேசன் என்ற செய்தித் தாள் வெளிவரக் காரணமானார். கொழும்பு முஸ்லிம் சங்கத்தின் தலைமையிலேயே கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

**191.** பிரித்தானியரது ஆட்சியினால் ஏற்பட்ட நன்மைகள்.

1) போக்குவரத்து, செய்திப்பரிமாற்றம் வளர்ச்சியடைந்தமை.

2) சர்வதேச மொழியான ஆங்கிலம் கற்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டமை.

3) வர்த்தகப் பயிர்செய்கை முக்கியமடைந்தமை.

4) நீர்ப்பாசன புனரமைப்பு, விவசாயக் குடியேற்றங்கள் தோன்றியமை.

5) மலேரியா ஒழிப்புத்திடங்களினால் சிசு, கர்ப்பிணிகள் மரண வீதம் குறைந்தமை

6) கொழும்புத் துறைமுகம் விருத்தியடைந்தமை, புதிய நகரங்கள் உருவாகியமை.

7) மத்திய வகுப்பினரின் தோற்றம். 8) ஆங்கிலேயச் சட்டமுறை அறிமுகமானமை.

9) மேலை நாட்டு ஆடை அணிகள், உணவுகள் பழக்கவழக்கங்கள் எமது கலாசாரத்தில் சேர்ந்தமை. 10) புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகியமை.

**192.** பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட தீமைகள்.

1) வாழாதாரப் பயிர்ச் செய்கை புறக்கணிக்கப்பட்டமை.

2) அரிசி இறக்குமதி செய்ய ஆரம்பிக்கப்பட்டமை.

3) ஆங்கிலக் கல்வியினால் சுயமொழி பாடசாலை மாணவர்கள் அசாதாரண நிலைக்கு உள்ளாகியமை.

4) நமது நாடு மேலைநாட்டுக் கலாசாரங்களில் ஊறிப்போனமை.

5) இந்திய தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை.

6) மலைநாட்டில் விவசாய நிலங்கள் இழந்த கூட்டத்தினர் உருவாகியமை.

7) சம்பளத்திற்கு வேலை செய்யும் கூட்டத்தினர் உருவாகியமை.

8) காரியாலயங்களில் மட்டும் வேலைசெய்ய விரும்பும் கூட்டம் உருவாகியமை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. இலங்கையின் ஆட்சிமுறை


**193.** இலங்கையின் ஆட்சிமுறையுடன் தொடர்பான பிரதான கட்டடங்கள்.



இலங்கை மக்களுக்கான சட்டங்களை ஆக்கும் பாராளுமன்றம்.



சட்டங்களை நடைமுறைப் படுத்தும் நிர்வாகக் கூட்டங்கள் நடைபெறும் ஜனாதிபதி செயலகம்.



நியாயம் வழங்கும் உயர் நீதிமன்றம்.

**194.** இலங்கை ஆட்சிமுறையில் மக்களின் இறைமை அதிகாரம் செயற்படுத்தப்படும் முறைகள்.

1) மக்கள் இறைமை அதிகாரத்தை வெளிப்படுத்தும் வழிமுறைகள்.
   * வாக்குரிமை
   * அடிப்படை உரிமைகள்
   * ஆட்சி அதிகாரம்

2) மக்களின் இறைமை அதிகாரம்.
   * மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படும்

3) மக்களின் நிர்வாக அதிகாரம்
   * மக்களின் வாக்குப் பலத்தினால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்படும்.

4) மக்களது நீதித்துறை அதிகாரம்
   * உயர் நீதிமன்றத்தைப் பிரதானமாகக் கொண்ட நீதித்துறை மூலம் செயல்படுத்தப்படும்.

5) மக்களின் அதிகாரம்
   * வாக்களிப்பு மூலம் செயற்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

195.

| வாக்காளராக இருப்பதற்கு வேண்டிய தகுதிகள். | பொருத்தமற்ற தகுதிகள் |
| --- | --- |
| 1) இலங்கை வாசியாக இருக்க வேண்டும். | 1) சித்த சுவாதீனமற்றவராயிருத்தல் |
| 2) 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். | 2) 7 வருடங்களுக்குக் கூடச் சிறைக் கைதியாக இருத்தல். |
| 3) தேர்தலுக்கு 18 மாதங்களுக்கு முன்னர் 6 மாதம் தொடர்ச்சியாக அப்பிரதேசத்தில் வசித்தவராயிருத்தல். | 3) தேர்தல் குற்றச் சாட்டுகளால் வாக்குரிமை இழத்தல். |
| 4) வாக்காளர் பதிவுப்படிவத்தில் பெயர் இருத்தல். | |

1978ஆம் ஆண்டு யாப்பின் மூன்றாம் அத்தியாயம் அடிப்படை உரிமை பற்றியது. அதில் அடங்கியுள்ள 10 முதல் 17 வரையான உறுப்புரைகள் மனித உரிமைகள் பற்றியபிரகடனத்தையும், பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதையும் கூறுகின்றது.


சிந்தனைச் சுதந்திரம்


பேச்சுச் சுதந்திரம்


முறைப் படியான வேலையொன்றில் ஈடுபடும் சுதந்திரம்.


இலங்கையினுள் எங்கும் சென்று வரக்கூடிய சுதந்திரம.


வெளிநாட்டுக்குச் சென்று மீண்டும் இலங்கைக்கு வரக்கூடிய சுதந்திரம்.


சிறைப்படுத்துவதிலிருந்து தடுக்கும் சுதந்திரம்.


சங்கங்களை அமைப்பதற்கான சுதந்திரம்.

**196.** 1978 ஆம் ஆண்டு யாப்பில் அடிப்படை உரிமைகள்: பாதுகாப்புக்கள்

1) யாப்பின் 126ஆம் உறுப்புரையில் ஆட்சித்துறை அல்லது நிருவாக நடவடிக்கையால் அடிப்படை உரிமை மீறப்பட்டால் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

2) உயர் நீதி மன்றத்திடம் அடிப்படை உரிமை தொடர்பான நீதிமுறை அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) இலங்கையில் எந்தவொரு பிரஜையும் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டால் நீதிமன்றத்திற்கு முறையிட்டு உரிமையை மீளவும் பெற்று அனுபவிக்க முடியும்.

4) ஒம்புட்ஸ் மன் என்ற பாராளுமன்ற ஆணையாளர் பதவியும், மனித உரிமை களைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**197.** பிரஜை ஒருவரின் பொறுப்புகளும் கடமைகளும்

| பொறுப்புகள்: | கடமைகள்: |
|---|---|
| 1) நீதிக்கு மதிப்பளித்தல் | 1) நேர்மையுடையவராக இருத்தல். |
| 2) தனது வாக்குரிமையைச் சரியான முறையில் பாவித்தல். | 2) மற்றவர் கருத்துக்கு மதிப்பளித்தல். |
| 3) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல். | 3) மற்றவர்களுக்கு மதிப்பளித்தல். |
| 4) ஏற்றுக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 4) கலந்துரையாடல் மூலம் தீர்வு காணல். |
| 5) மற்றவர்களின் சுதந்திரத்தை மதித்தல். | 5) முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்படுதல். |
| 6) ஆட்சிமுறை தொடர்பாக விழிப்பாக இருத்தல். | 6) வளங்களை உரிய முறையில் கையாளுதல். |
| 7) உற்பத்திப் பொருட்களுக்கு மதிப்பளித்தல். | 7) ஆட்சிக்கு உதவும் வகையில் குண இயல்புகளை வளர்த்தல். |
| 8) எதிர்கால சந்ததியினருக்காக வளங்களைப் பாதுகாத்தல். | |

**198.** நாடாளுமன்றத்தின் கடமைகள்

1) சட்டங்களை இயற்றுதல்.
2) நீதிநிர்வாகக் கடமைகளை மேற்கொள்ளல்.
3) செயற்பாட்டு நிர்வாகத்தினை மேற்கொள்ளல்.
4) பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றல்.
5) கலந்துரையாடல் கூடமாதல்.

தற்போதைய பாராளுமன்றத்தில் 225 அங்கத்தவர்கள் உள்ளனர்.

- 196 பேர் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்கள்.
- 29 பேர் தேசிய பெயர்ப் பட்டியல் மூலம் தெரியப்பட்டவர்கள்.

**199.** விகிதாசார பிரதிநிதித்துவ முறை என்றால் என்ன? இலட்சணங்களைத் தருக?

விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் அரசியற் கட்சிகளாலும் சுயேச்சைக் குழுக்களாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற வேட்பாளர்கள் பட்டியல்களிலிருந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களிப்பு மூலம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

1) பெரிய தேர்தல் தொகுதியாக அமைதல் உ+ம்:- மாவட்டம்
2) தேர்தலில் அபேட்சகர்கள் குழுக்களாகப் போட்டியிடுதல்.
3) தேர்தல் தொகுதியொன்றிற்காகச் சிலபேர் தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெறுதல்.
4) தேர்தலில் அபேட்சகர்ளை விட அரசியல் கட்சிகள் முக்கியம் பெறல்.
5) தேர்தலில் அரசியல் கட்சிகள் பெற்ற வாக்கு விகிதாசாரத்திற் ஏற்ப அங்கத்தவர் தெரிவு செய்யப்படல்.
6) சிறுகட்சிகளும் பிரதிநிதித்துவம் பெறல்.
7) கூடியளவு வாக்குகளைப் பெற்ற கட்சிக்கு கூடிய அங்கத்துவம் கிடைத்தல்

**200.** நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி

**ஜனாதிபதி நியமனம் பெறும்முறை**

1) ஆறு ஆண்டுகளுக்கொரு முறை நடாத்தப்படும் ஜனாதிபதி தேர்தல் மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்.
2) நாடு முழுவதும் ஒரு தொகுதியாகக் கருதப்பட்டு வாக்கெடுப்பு நடைபெறும்.
3) ஜனாதிபதி தேர்தலில் மூன்று பேருக்க கூடுதலானோர் போட்டியிட்டால் வாக்காளர் மூன்று விருப்புக்களை வாக்குச் சீட்டில் அடையாளமிட முடியும்.
4) தேர்தலுக்காக வழங்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைவாசி (50%) க்கும் கூடுதலான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.
5) தெரிவு செய்யப்பட்டவர் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசரின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியை ஏற்பார்.

**201.** நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்களும் கடமைகளும்.

| | |
|---|---|
| பாராளுமன்றம் தொடர்பானவை. | * பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்தல்.<br>* கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தல்.<br>* தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத்திற்கு வருகை தருதல், செய்தி அனுப்புதல். |
| அமைச்சரவை தொடர்பானவை. | * பிரதமர் உட்பட அமைச்சர்களை நியமித்தல்<br>* அமைச்சுக்களைக் கையளித்தல்<br>* அமைச்சரவையை மாற்றியமைத்தல்<br>* பிரதியமைச்சர்களை நியமித்தல்<br>* தனக்குத் தேவையான அமைச்சுகளை தானே பொறுப்பேற்றல் |
| நீதித்துறை கடமைகள். | * முறைப்பாட்டு நீதிமன்றங்களுக்குரிய நீதிபதிகளை நியமித்தல்<br>* நீதிச்சேவை ஆணைக்குழுவை நியமித்தல்.<br>* நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தண்டனைகளைக் குறைத்தலும். மன்னிப்பளித்தலும்.<br>* கௌரவப் பட்டங்களை வழங்குதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கௌரவத் திற்குரியவை**

* கௌரவ அரசாங்க வைபவங்களுக்கு தலைமை வகித்தல்
* வெளிநாட்டு விருந்தினரை வரவேற்றல்
* சர்வதேசக் கூட்டங்களுக்கு அரசாங்க சார்பில் சமூகமளித்தல்.

**வேறு**

* வெளிநா' டுத்தூதுவர் ஆணையாளர்களை நியமித்தல்.
* அமைச்சுகளின் செயலாளர்களை நியமித்தல்.
* யுத்தம். சமாதானம் பிரகடனப் படுத்தல்
* சட்ட அமைப்பு முறைகளிலான சபைகளுக்கு மேல் மட்ட அதிகாரிகளை நியமித்தல்

**202.** அமைச்சரவையின் கடமைகள்

* அரசாங்கக் கட்சியிலிருந்து அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

(1) அமைச்சர்களுக்குப் பொறுப்பாகயிருத்தல் அரசின் கருமங்களைப் பகிர்ந்தளித்தல், நடைமுறைப்படுத்தல்.
(2) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை அமுல் நடாத்துதல்.
(3) அமைச்சர்களின் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல்.
(4) குறை நிரப்பு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.
(5) பல்வேறு அமைச்சுக்களின் செயற்பாடுகளை ஒன்றிணைத்தல்.
(6) கூட்டுப் பொறுப்புடன் செயற்படுதல்.

**203.** அரசாங்கத்தின் கடமைகள்

(1) பொதுமக்களின் சுக சீவியத்திற்கு பொருத்தமான கடமைகளைச் செய்து நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்தல்.
(2) மக்களின் முன்னேற்றத்திற்கான சூழலை ஏற்படுத்தல்.
(3) நாட்டில் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்தல்.
(4) மக்களின் தேவைகளை நிறைவேற்றுதல்.

**204.** அமைச்சும் அரசாங்க சேவையும்

ஜனாதிபதி
(நாட்டின் பிரதான நிறைவேற்று அதிகாரி)
↓
அமைச்சரவை
(அமைச்சுகளுக்குப் பொறுப்பாகவுள்ளது)
↓
அமைச்சு
(இதன்கீழ் பல திணைக்களங்கள் காணப்படும்)
↓
செயலாளர்
(திணைக்களங்களில் கடமைகளை ஒன்றிணைப்பவர்)
↓
திணைக்களம்
↓
நிர்வாகிகள்

ஒவ்வொரு அமைச்சின் கீழும் பல திணைக்களங்கள் செயற்படும்

உ+ம்
நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு இதன்கீழுள்ள திணைக்களங்கள்

* நில ஆய்வாளர் திணைக்களம்
* நீர்பாசன த் திணைக்களம்
* வனப் பாதுகாப்புத் திணைக்களம்
* அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
* மகாவலி அதிகாரசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**205.** இலங்கையில் நீதித்துறை சுயாதீனமான முறையில் இயங்குகின்றது. நீதிமன்றம் சுயாதீனமானதாகவும் பாரபட்சமற்றதாகவும் செயற்படுவதற்கு 1978 ஆம் ஆண்டு யாப்பில் ஏற்பாடுகள் உள்ளன.

(1) உயர் நீதிமன்றத்தை பிரதம நீதியரசரும் மற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகளும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுதல். எனினும் ஜனாதிபதி தமது சொந்த விருப்பத்தின் பேரில் அவர்களைப் பதவியிலிருந்து விலக்க முடியாது.

(2) நேர்மையீன காரணங்களுக்காக அன்றி ஓய்வு பெறும் வரை நீதிபதியைச் சேவையிலிருந்து நீக்க முடியாது.

(3) நாடாளுமன்றத்தில் 2/3 பங்கினரில் தீர்மானத்திற்கேற்ப ஜனாதிபதி நீதிபதியைச் சேவையின்றும் நீக்க முடியும்.

(4) நீதிபதிகள் சம்பளம் நிரந்தரமானது. அது ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து வழங்கப்படுகின்றது. அவர்கள் ஓய்வு பெறும் காலமும் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(5) நீதிச் சேவை ஆணைக்குழுவே மற்றைய நீதிமன்றங்களுக்குரிய நீதிபதிகளை நியமித்தல், இடம் மாற்றுதல், பதவி உயர்வு வழங்குதல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றை மேற்கொள்ளுகின்றது. இவ் ஆணைக்குழுவின் அலுவல்களில் தலையிடுவது தண்டணைக்குரியதாகும்.

(6) நியாயத்தை வெளிக்காட்டக் கூடிய நடவடிக்கைகளை பகிரங்கமாக நிறைவேற்றுதல்.

(7) நீதிபதி ஒருவர் அவரது கடமையிலிருந்து செய்யும் பதவி வேலைகளுக்கு விரோதமாக வழக்குத் தொடர முடியாது.

(8) நீதிபதிகளுக்கு வாக்குரிமை தவிர்ந்த ஏனைய அரசியல் உரிமைகள் எல்லைப் படுத்தப்பட்டுள்ளன.

**206.** நீதிமன்றங்களின் வகைகள்

1978ம் ஆண்டு யாப்பிற்கிணங்க நீதித்துறை மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது.

(1) உயர் நீதிமன்றம் (2) மேன் முறையீட்டு நீதிமன்றம்

(3) முதல் விசாரணை நீதிமன்றங்கள்

**207.** இலங்கையின் நீதிமன்றங்களின் அமைப்பு: அம்புக்குறிகள் மனுக்கள். முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படும் முறைகளைக் காட்டுகின்றது.

உயர் நீதிமன்றம்
↑
நாட்டின் பிரஜைகள்
↑
மற்றைய வழக்குகள்

உயர் நீதிமன்றம்
↑
மேன் முறையீட்டு நீதிமன்றம்
↑

(1) மேல் நீதிமன்றம்
(2) மாவட்ட நீதிமன்றம்
(3) மாஜிஸ்ரேட் நீதிமன்றம்
(4) முதல் விசாரணை நீதிமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**208.** உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள்

(1) மசோதாக்கள் யாப்புக்கு அமைவானதா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம்.
(2) அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது சம்மந்தமான அதிகாரம்.
(3) இறுதி மேன்முறையீட்டினை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம்.
(4) ஆலோசனை வழங்குவதற்குரிய சட்ட அதிகாரம்.
(5) தேர்தல் மனுக்கள் பற்றிய தீர்ப்பு வழங்கும் அதிகாரம்.
(6) பாராளுமன்றம் தொடர்பான சட்ட அதிகாரம்.
(7) பாராளுமன்றத்தின் மூலம் சட்டமூலமாக வழங்கப்படும் அல்லது விதிக்கப்படும் பிற கருமங்கள் சம்மந்தமான சட்ட அதிகாரம்.

**209.** மேன் முறையீட்டு நீதிமன்றம்

(1) இந்நீதிமன்றம் தலைவர் ஒருவரையும் 6-11 நீதிபதிகளையும் கொண்டிருக்கும்.
(2) யாப்பின் கீழ் நீதிமன்றத்தினால் அல்லது நீதித்துறை சார்ந்த பிறிதொரு தாபனத்தால் வழங்கப்படும் தவறான தீர்ப்பை மீளாய்வு செய்து திருத்தும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

**210.** முதல் விசாரணை நீதிமன்றங்கள்

(1) மேல் நீதிமன்றம் (2) மாவட்ட நீதிமன்றம்
(3) மஜிஸ்ரேட் நீதிமன்றம் (4) முதனிலை நீதிமன்றங்கள்

* இவற்றை விட நிர்வாக, தொழிற்துறை, நீதிமன்றுகள் விசேட கருமங்களுக்காக உள்ளன. உ+ம் இணக்க சபை, தொழில் நீதிமன்று

**211.** மாகாண சபைகள்

(1) 1987 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட யாப்பின் 13 வது திருத்தம், மாகாண சபைகள் சட்டம் ஆகியவற்றின் மூலம் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன.
(2) இதற்கேற்ப வடகிழக்கு மாகாணங்களுக்காக ஒரு மாகாண சபையும் ஏனைய 7 மாகாணங்களுக்காக 7 மாகாண சபைகளுமாக 8 மாகாண சபைகள் நிறுவப்பட்டன.

**212.** மாகாண சபைகள் அமைக்கப்பட்டதன் நோக்கங்கள்

(1) நிருவாக பரவளாக்கலின் ஆரம்ப நிலையாகச் செயற்படல்.
(2) சனத் தொகைப் பிரச்சனைக்கு தீர்வாக அமைதல்.
(3) இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அமைதல்.

213. மாகாண சபைகளின் கட்டமைப்பு

(1) ஆளுநர் - ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர்.
(2) பிரதிநிதிகள் - மாகாணத்திலுள்ள மக்கள், விகிதாசாரத்துவ முறையில் தெரிவு செய்வர்.
(3) முதலமைச்சர் - தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்றவர்.
(4) இதர அமைச்சர்கள் - நான்கிற்கு மேற்படாத அமைச்சர்களை முதலமைச்சர் ஆலோசனைப் படி ஆளுநர் தெரிவு செய்வார்.
(5) நிதி ஆணைக்குழு - மாகாண சபையின் நிதிவருவாயை பங்கீடு செய்தல் இதன் பணியாகும்.
(6) மேல் நீதிமன்றம் - ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு மேல் நீதிமன்றம் நிறுவப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண சபைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள்**

(1) உள்ளூர் சட்டமும் ஒழுங்கும் (2) மாகாணத்திற்கு உட்பட்ட காணியமர்வு
(3) விவசாயமும் கைத்தொழிலும் (4) கல்வியும் கலாசாரமும்

**214.** மாநகர சபைகள்

இலங்கையின் உள்ளூராட்சி அமைப்பில் பிரதான அங்கமாக மாநகரசபைகள் விளங்குகிறது

| மாநகரசபைகளின் அதிகாரங்கள் | மாநகர சபைகள் அமைந்துள்ள இடங்கள் |
|---|---|
| 1. போக்குவரத்து பாதைகள் அமைத்தல் நிர்வகித்தல். | 1. கொழும்பு |
| 2. பொதுமக்களின் சௌக்கியமும் சுகாதாரப் பாதுகாப்பும் | 2. காலி |
| 3. பொதுநல வசதிகள் மேற்கொள்ளல். நீர் விநியோகம். வீதிகளுக்கு மின் வெளிச்சம் வழங்குதல். | 3. தெஹிவளை - கல்கிஸ்ஸ |
| 4. பொதுச் சந்தைகளை நிர்மாணித்து பாராமரித்தல். | 4. யாழ்ப்பாணம் |
| 5. பொது மயானங்களை நிர்வகித்தல். | 5. கோட்டை |
| 6. சுகாதார சேவைகளைப் பேணுதல். | 6. கண்டி |

**கணிப்பீட்டுப் பரீட்சை ❶**

## 01. இலங்கையின் புவியியற் பின்னணி




(1) தரப்பட்ட படத்தில் இலங்கை எவ்வாறுஅழைக்கப்பட்டுள்ளது?

(2) இப்படத்தை வரைந்தவர்யார்? அவர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?

(3) இலங்கை பற்றிய குறிப்புக்களை தமது நூல்களில் எழுதிய வெளிநாட்டவர்கள் நால்வரைத் தருக?




(4) தரப்பட்டட படத்தில் இலக்கங்கள் 1,2,3,4,5 எனக் குறிக்கும் சார்க் நாடுகளை அதே ஒழுங்கில் தருக?


(5) இலங்கையைச் சூழவுள்ள அ. ஆ. இ. ஈ. உ குறிக்கும் தீவுகள் (படம்II) யாவை?

(6) இலங்கையுடன் வெளிநாடுகள் தொடர்பு கொண்ட பிரதான மார்க்கங்கள் சென்ற பாதைகளை I, II, III, IV அம்புக்குறிகள் காட்டுகின்றன அவை எவை எனத்தருக?

(7) பாக்கு நீரிணை. வங்காளவிரிகுடா. அராபியக்கடல் என்பவற்றைக் குறிக்கும் எழுத்துக்களை அதே ஒழுங்கில் தருக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





(8) தரப்பட்டுள்ள படத்தில் இலங்கையின் நிலையம் தொடர்பாக D, E நெடுங்கோடுகள். I. G அகலக்கோடுகள் குறிப்பனவற்றைத் தருக?

(9) அ -ஆ இலங்கையின் அகலத்தையும். இ - ஈ நீளத்தையும் குறிக்கின்றது அவற்றைத் தருக?

(10) இலங்கையின் பரப்பளவு யாது?

கணிப்பீட்டுப் பரீட்சை 2

## 02. இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்கள்




தரப்பட்டுள்ள படத்தில் இலக்கமிடப்பட்ட தரைத் தோற்ற இயல்புகளை அவ்வவ் இடங்களில் எழுதுக?

கணிப்பீட்டுப் பரீட்சை 3




தரப்பட்டுள்ள படத்தை அவதானித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக?

(1) 6. 7. 8. 9. 10 குறிக்கும் கணவாய்கள் யாவை?

(2) 1. 2. 3. 4. 5. குறிக்கும் நீர் வீழ்ச்சிகள் யாவை?

(3) அ. ஆ. இ. ஈ குறிக்கும் மேட்டு நிலங்கள் யாவை?

(4) உ. ஊ குறிக்கும் டெல்ற்ரா அம்சங்கள் கொண்ட ஆறுகள் யாவை?

(5) 11. 12. 13. 14. 15. 16 குறிக்கும் இடங்களைத் தருக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீட்டுப் பரீட்சை 4

## 03. காலநிலை

(முதல் மூன்று வினாக்களுக்கு தரப்பட்ட படத்து விடை தரவும்,

(1) தரப்பட்ட படம் எவ்வகையைச் சார்ந்த மழையைக் காட்டுகின்றது?

(2) இம் மழை பெறப்படும் முக்கிய காலப்பகுதி யாது?

(3) இம் மழையை வருடம் முழுவதும் பெறமுடியாமைக்குரிய காரணம் யாது?

(4) இலங்கையில் கூடிய. குறைந்த மழைவீழ்ச்சி பெறும் இடங்கள் யாவை?

(5) கொழும்பில் வெப்பநிலை 27° உள்ள போது நுவரெலியாவின் வெப்பநிலை 15° ஆக காணப்படுவதற்கான காரணம் யாது?

(6) இலங்கையில் மழைவீழ்ச்சி கிடைக்கும் முறைகளையும் காலத்தையும் தருக?

(7) இலங்கை மத்தியகோட்டு வலயத்தினுள். இருந்தும் அதன் வெப்பம் கட்டுப்படுத்தப்படுவதற்குறிய காரணிகள் மூன்று தருக?

(8) ஈரவலயம் உலர் வலயங்களிடையே மழைவீழ்ச்சி வேறுபாடுகளைத் தருக?

(9) இலங்கையின் காலநிலை வலையங்கள் எவற்றை முக்கியமாகக் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது?

(10) அம்பாந்தோட்டை. இரத்தினபுரி. அனுராதபுரம் எக்கால நிலை வலயத்தினுள் அடங்கும் என்பதைத் தருக?




கணிப்பீட்டுப் பரீட்சை 5

## 04. இலங்கையின் இயற்கைத் தாவர வலயங்கள்

1. தரப்பட்ட படத்தினை அவதானித்து கீழ்த்தரப்பட்டவைகளைக் குறிக்கும் இலக்கங்களை அல்லது எழுத்துக்களைத் தருக?
(அ) பத்தனைப்புல் நிலம் (ஆ) சிங்கராசவனம்
(இ) பற்றை முற்புதர்காடுகள் (ஈ) வில்பத்து (உ) யால

2. பின்வரும் இயல்புகளைக் கொண்ட தாவர வலயங்களுக்குரிய எழுத்துக்களைத் தருக?
(அ) மரங்களின் சாதாரண உயரம் 15-20 மீற்றர் கீழ்வளரிகள் இல்லை முதிரை. பாலை. முதலிய பெறுமதி மிக்க மரங்கள் காணப்படும்.
(ஆ) கள்ளி முட்பற்றைகள் ஏராளம். தாவரங்கள் பரம்பல் குறைவு (இ) கீன. மிகிரிய. சப்பு மரங்கள் உண்டு. மரங்கள் அதிகம் உயரமானவை அடர்த்தியான கீழ்வளரிகள் உள்ளன. (ஈ) மானா. இலூக் போன்ற தடித்த புல் வகைகள் காணப்படுகின்றன. யூக்களிப்ஸ். அக்கேசியா போன்ற மரங்கள் நடப்பட்டுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இயற்கைத் தாவரங்கள் சூழலின் சமநிலையைப்பேண எவ்வாறு உதவுகிறது என்பதை விளக்க 4 காரணங்கள் தருக?

4. காடுகள் ஏன் அழிக்கப்படுகின்றன? என உமது நண்பன் வினாவிய போது நீர் அளிக்கும் பதில் யாது?

5. சிங்கராஜவனம் பற்றி அறியாத ஒருவருக்கு நீர் அளிக்கும் விளக்கம்.

**கணிப்பீட்டு பரீட்சை 6**

## 05. உணவு பயிர்கள்

1. **கீறிட்ட இடங்களை நிரப்புக.**

(1) நெற் செய்கைக்கு அவசியமான காரணிகள்

(அ) வெப்பநிலை (1) __________ C தொடக்கம் (2) __________ C வரை.

(ஆ) மழை வீழ்ச்சி (3) __________ மி.மீ வரை (இ) மண் (4) __________ % தொடக்கம் (5) __________ % வரை களியைக் கொண்டுள்ள மண்.

2. இலங்கையில் (6) __________ நெற்செய்கையை ஆரம்பித்தனர். இவர்களின் குடியேற்றங்கள் நெற்செய்கைக்கு ஏற்ற (7) __________ (8) __________ காணப்பட்ட இடங்களிலேயே அமைந்திருந்தன. அனுராதபுர கால (9) __________ குளங்கள். கால்வாய்கள் அமைத்து உதவினர் (10) __________ நூற்றாண்டில் அன்னியர் படையெடுப்புக்களினால் நெற் செய்கை பாதிப்படைந்தது.

2. **இடைவெளிகளை நிரப்புக.**

| வலயம் | நெற்பயிர்ச்செய்கை மாவட்டங்கள் | எதிர் நோக்கும் பிரச்சனைகள் |
|---|---|---|
| தாழ் நாட்டு | 1 __________ | 9 __________ |
| வரண்ட | 2 __________ | |
| வலயம் | 3 __________ | 10 __________ |
| | 4 __________ | |
| தாழ் நாட்டு | 5 __________ | |
| ஈரலிப்பு | 6 __________ | 11 __________ |
| வலயம் | | |
| மலைநாட்டுப் | 7 __________ | 12 __________ |
| பிரதேசங்கள் | 8 __________ | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கீழே தரப்பட்ட படங்களை அவதானித்து அவை நெற்பயிர் செய்கை சம்மந்தமான பாரம்பரிய முறையா, நவீன முறையா எனத் தருக?


(1) ______


(4) ______


(7) ______


(2) ______


(5) ______


(8)


(3) ______


(6) ______

கணிப்பீட்டுப் பரீட்சை ❼

## 06. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை

1. கீறிட்ட இடங்களை நிரப்புக.

(அ) ______ இல் முதலாவது கோப்பித் தோட்டம் கம்பளையில் ஆரமபிககபபடடது

(ஆ) 1867 இல் ______ என்பவர் கண்டியில் பொருளாதார ரீதியாகத் தேயிலை பயிரிட ஆரம்பித்தார்.

(இ) தாழ்நில தேயிலை ______ குறைவாக உள்ள நிலத்தில் பயிரிடப்படுகின்றது

(ஈ) இலங்கையின் இறப்பர் செய்கையை முதலில் அறிமுகம் செய்தவா ______ ஆவர்.

(உ) இலங்கை இறப்பரை அதிகளவு இறக்குமதி செய்யும நாடு ______ ஆகும.

2. தரப்பட்ட படத்தினை அவதானித்து இலக்கங்கள் குறிக்கும் மாவட்டங்களைத் தருக? (படம் A)

(அ) இறப்பர் பயிரிடப்படும்
1, 6 மாவட்டங்கள்

(ஆ) தேயிலை பயிரிடப்படும
3, 7 மாவட்டங்கள்


(இ) தென்னை பயிரிடப்படும்
5, 8 மாவட்டங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 வினா - 3 தரப்பட்டுள்ள படம் B) படத்தில தென்னோலை. தேங்காய. தென்னை மரம் தொடர்பான உற்பத்திகளை கீறிட்ட இடங்களில் எழுதுக.




4. தேயிலை. இறப்பர். தென்னை ஆகியவற்றிற்கு அவசியமான பௌதீக காரணிகளைத் தருக?

5. நாலாந்தம் தேவைகளுக்கு இறப்பா எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பின்வரும் தலைப்புகளுக்கு ஏற்ப இரண்டு உதாரணம் தருக?
(1) போக்குவரத்து (2) பாதுகாப்பு (3) வைத்திய சேவை

## கணிப்பீட்டுப் பரீட்சை 8

## 07. மீன்பிடித் தொழில்

1. இலங்கை மீனவத் தொழிலுக்குச் சாதகமான பௌதீகச் சூழலிலுள்ள ஏதுக்களைத் தருக?
2. இலங்கையைச் சூழவுள்ள கண்டமேடைகளில் அதிகளவு மீன்கள் காணப்படுவதற்குரிய காரணங்கள் யாவை?
3. இலங்கையின் மீன்பிடித்தொழில் வகைகளையும் அங்கு பிடிக்கப்படும் மீனினங்களுக்கு உதாரணம் தருக?
4. நமது நாட்டில் பின்பற்றப்படும் புராதன. நவீன மீன் பிடிமுறைகளைத் தருக?
5. மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் நீர் கருதுபவற்றைத் தந்து அரசாங்கம் அதனை தீர்க்க எடுத்துள்ள நடவடிக்கைகளைத் தருக?

## கணிப்பீட்டுப் பரீட்சை 9

## 08. இலங்கையில் கால் நடைவளர்ப்பு

(பாடப்புத்தகத்திலுள்ள பாட அலகை அவதானித்து விடைதருக)

1. இலங்கையில் மிருகவளர்ப்பு அடிப்படையில் வளர்க்கப்படும் மிருகங்களின் பெயர்கள் 4 தருக?
2. மிருக வளர்பபுக்குத் தேவையான 3 காரணிகளைத் தருக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கிராமங்களில் மந்தை வளர்ப்பதற்குரிய காரணங்கள் 3 தருக?
4. பின்வரும் அட்டவணைப் படிவிலங்குவளர்ப்பு பிரதேசங்களை அட்டணைப்படுத்துக.
மகலா இலுப்பல்லம். அம்பேவ. கலங்கட்டிய. ஆண்டிகம. போபத்தலாவ. கிராந்துருகோட்டை
5. பாற்பண்ணைகளுக்கு நல்ல இனக் கன்றுகளைப் பெறுவதற்குரிய வழிகள் 2 தருக?
6. இலங்கையில் அமைக்கப்பட்ட மாதிரி விவசாயப் பண்ணைகள் எவ்வாறு கால்நடை வளர்ப்பு அபிவிருத்திக்கு உதவுகின்றது என்பதை விளக்க 3 காரணிகள் தருக?

கணிப்பீட்டுப் பரீட்சை ⑩

## 10. இலங்கையின் சனத்தொகை

**தரப்பட்ட படத்தினை அவதானித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




1. (அ) இலங்கையில் சனத்தொகை கூடிய மாவட்டங்கள் 2 தருக.
   (ஆ) இலங்கையில் சனத்தொகை குறைந்த மாவட்டங்கள் 2 தருக.
   (இ) சிற்றளவுக் கைத்தொழில்கள் அதிகளவில் காணப்படும் மாவட்டங்கள் 2 தருக.
   (ஈ) இலங்கையில் குடியடர்த்தி குறைந்த மாவட்டங்கள் 2 தருக.
   (உ) இலங்கையில் குடியடர்த்தி கூடிய மாவட்டங்கள் 2 தருக.
2. இலங்கையிலுள்ள மாவட்டங்களில் சன அடர்த்தி வரைபடத்தில் குறித்துக் காட்டுக.
3. 1981 ஆம் ஆண்டுச் சனத்தொகையை இன அடிப்படையில் சில்லு விளக்கப்படமொன்று மூலம் வரைந்து காட்டுக.
4. 1981 ஆம் ஆண்டுச் சனத்தொகையைப் பல்வேறுசமயங்களின் அடிப்படையில் சில்லுவிளக்கப்படமொன்று மூலம் வரைந்து காட்டுக.

கணிப்பீட்டுப் பரீட்சை ⑪

## 11. இலங்கையின் கைத்தொழில்

1. பின்வரும் உற்பத்திகள் எக்கைத்தொழில் வகையைச் சார்ந்ததெனத் தருக.
(அ) குளிர்பானம் தயாரித்தல் (ஆ) முகமூடிதயாரித்தல் (இ) பன்னவேலை
(ஈ) சீமெந்து உற்பத்தி (உ) பிஸ்கட் தயாரித்தல் (ஊ) கடதாசி உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இலங்கைக்கு ஏற்ற கைத்தொழில் வகை யாது? காரணங்கள் இரண்டு தருக.
3. சுதந்திர வர்த்தக வலயங்களினால் ஏற்படும் நன்மைகள் (இரண்டு) தீமைகள் (இரண்டு) தருக.
4. இலங்கை கைத்தொழில் சம்மந்தமான பிரச்சனைகள் 4 தருக.
5. இலங்கை உல்லாசப்பயணிகளைக் கவருவதற்குரிய காரணங்கள் 4 தருக.

கணிப்பீட்டுப் பரீட்சை 12

## 12. தம்பதெனியா வீழ்ச்சியடைந்த பின்

**1) சுருக்கமான விடை தருக.**

1. தென்மேற்கே இடம் பெயர்ந்தமைக்குரிய காரணங்கள் 3 தருக.
2. தம்பதெனியாவை இராசதானியாக்கிய மன்னன் யார்?
3. தம்பதெனியா காலத்தில் இயற்றப்பட்ட பிரதான இலக்கிய நூல் ஒன்று தருக.
4. யாப்பகூவாவை, இராராசதானியாக அமைத்தமைக்குரிய காரணி ஒன்று தருக.
5. குருநாகலை நிருவாக நிலையமாக்கி ஆண்ட மன்னன் யார்?
6. ஐநூற்றி ஐம்பது ஜாதகக் கதைகளைப் படைத்த இராசதானி எது?
7. நிருவாக நிலையத்தை கம்பளைக்கு கொண்டு சென்ற அரசன் யார்?
8. நீர்நிலையை அரணாகக் கொண்டு தலைநகரான நிருவாக நிலையம் எது?
9. நிருவாக நிலையங்கள் இடம் பெயர்ந்த காலத்தில் நாட்டை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த மன்னன் யார்?
10. கோட்டை காலத்தில் எழுந்த தூதுக் காவியங்கள் 2 தருக?
11. மயுரசந்தேசய எந் நிருவாக நிலைய காலத்தில் உருவாக்கப்பட்டது?
12. கம்பளை காலத்தில் மரச்சிறபக்கலைக்குப் பேர் பெற்ற ஓர் இடத்தைத் தருக?
13. திறிசிங்களாதீஸ்வர என அழைக்கப்பட்டவன் யார்?
14. இலங்கைமீது இரு முறை படையெடுத்த சந்திரபானு என்ற யாவ நாட்ட மன்னனைத் தோற்கடித்தவன் யார்?
15. "கலிகால சாகித்ய சர்வக்ஞபண்டித" என்ற பட்டம்பெற்றிருந்த மன்னன் யார்?
16. சிங்கள இலக்கியத்தின் பொற் காலம் என இராசதானிக்காலம் அழைக்கப்படுகிறது?
17. யாழ்ப்பாண இராச்சியம் உதயமான காலம் யாது?
18. கோட்டை இராச்சியத்திற்கு "ஜெயவர்த்தனபுர" என பெயரிட்டவன் யார்?
19. "சுப பவ்வத்" என்ற பெயரால் அழைக்கப்பட்ட இராசதானி யாது?
20. யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக விளங்கியது எது?

**2)** தம்பெதனியா. யாப்பகூவா. குருநாகல். கம்பளை. கோட்டை நிலையங்களை இராசதானியாக்கிய மன்னர்களை ஒழுங்கில் தருக?

**3)** மலைத்தொடர்களினால் சூழப்பட்டமை. ஆற்றினால் பாதுகாக்கப்பட்டமை . கற்பாறையுடைய மலைக்குள்ளாகயிருந்தமை ஆசியபாதுகாப்புக் காரணங் களைக் கொண்டு அமைக்கப்பட்ட இராசதானியைத் தருக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) பின்வருவனவற்றுடன் தொடர்புடைய இராசதானிகளைத் தருக.
(அ) குலசேகரபாண்டியன் படையெடுப்பு (ஆ) அம்பக்க தேவாலயம் அமைக்கப்படல் (இ) ஜோதியவின் மலைநாட்டுக் கலகம் அடக்கப்படல் (ஈ) இலங்கையின் வர்த்தகக் கப்பலை விஜய நகர அரசு கைப்பற்றல்.

**கணிப்பீட்டுப் பரீட்சை 13**

## 13. இலங்கை 1500ம் ஆண்டிற்குப் பின்

1. **பின்வரும் நிகழ்வுகள் நடைபெற்ற ஆண்டுகளைத் தருக?**
(1) கொன்ஸ்தாந்து நோபிளின் வீழ்ச்சி (2) வாஸ்கொடகாம மலபார் துறைமுகத்தை வந்தடைதல் (3) இலங்கைக்கு தொன்லொறன்சோ அல்மேதாவின் வருகை (4) விஜயபாகு கொள்ளை (5) முல்லேரியா யுத்தம் (6) 1ம் இராஜசிங்கன் கண்டியைக் கைப்பற்றியமை (7) மல்வானை ஒப்பந்தம் (8) வெஸ்ரவோல்ட் - 2ம் இராசசிங்கன் ஒப்பந்தம் (9) இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படல் (10) பிரித்தானியா கிழக்கிந்தியக் கம்பெனி இலங்கையின் கரையோரப் பிரதேசத்தைக் கைப்பற்றல்

2. **சரியாயின் "சரி" யெனவும் பிழையாயின் "பிழை" யெனவும் எழுதுக?**
(1) 1521ல் சீதாவாக்கை இராட்சியம் உதயமானது. (..........)
(2) முல்லேரியா யுத்தத்தில் 1ம் விமலதர்மசூரியனை வெற்றியீட்டினான். (..........)
(3) கண்டி இராட்சியத்தின் கடைசிச் சிங்கள மன்னன் வீரபராக்கிர நரேந்திர சிங்கனாவான். (..........)
(4) ஒல்லாந்தர் ஆட்சியால் இலங்கையில் பறங்கியர் என்ற இனம் தோன்றியது. (..........)
(5) ஒல்லாந்தரே இந்நாட்டில் அச்சுக்கலையை முதலில் அறிமுகப் படுத்தியவர்களாவார். (..........)

2. **இலங்கையில் போத்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சி சம்பந்தமாக கீறிட்ட இடங்களை நிரப்புக.**

| போர்த்துகேயர் | ஒல்லாந்தர் |
|---|---|
| (1) போர்த்துக்கல் மன்னனின் கீழ் நேரடி ஆட்சி | ..........................................(அ) |
| (2) ..........................................(ஆ) | புரட்டஸ்தாந்து மதம் பரவியமை |
| (3) இடையறாத யுத்தத்தில் ஈடுபட்டமை | ..........................................(இ) |
| (4) ..........................................(ஈ) | போல்றூம் நடனம் தேவாலய சங்கீதம் |
| (5) நீதி முறையால் கவனம் செலுத்தவில்லை | ..........................................(உ) |

4. **பின்வரும் கூற்றுடன் தொடர்புடையவர்களைத் தருக.**
(1) "நாங்கள் வாசனைத் திரவியத்திற்கும் கிறிஸ்தவ சமயத்திற்கும் வந்துள்ளோம்."
(2) "இஞ்சியைக் கொடுத்து மிளகு வாங்கியது போல்"
(3) "பறங்கியர் கோட்டைக்குள் சென்றது போல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **போத்துக்கீசர் ஆட்சியால் ஏற்பட்ட செல்வாக்கை மட்டும் கீறிடுக.**

(அ) புரட்டஸ்தாந்து மதம் பரவியமை (ஆ) நிலையான திருமண முறை ஏற்பட்டமை (இ) கத்தோலிக்க மதம் பரவியமை (ஈ) உரோமன் டச்சுச் சட்டம் அறிமுகம் (உ) மேடைநாடகங்கள் அறிமுகம் (ஊ) பறங்கியர் இனம் தோற்றம் (எ) மத்திய வகுப்பினர் உதயம் (ஏ) பைலா கபிரிஞ்சா அறிமுகம் (ஐ) 'பரிஷ்' பற்றுகளில் பாடசாலைகளை அமைத்தமை (ஒ) கைத்தொழில்களை விருத்தி செய்தமை.

**கணிப்பீட்டுப் பரீட்சை (14)**

## 14. இலங்கையும் பிரித்தானியரும்

1. **பின்வருவோர் யார் எனச் சுருக்கமாகத் தருக.**

A. பிரடரிக் நோத் B. றொபர்ட் பிரவுன்றிக் C. வில்லியம் கோல்புறூக் D. சாள்ஸ்ஹேகெமரன் E. புரன் அப்பு F. டெவன் சயர் G. எகலப்பொல H. ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் I. சேர் பொன் இராமநாதன் J. சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா

2. **ஒரு சொல்லில் விடை தருக.**

(அ) இலங்கையில் இரட்டை ஆட்சி நிலவிய காலம் யாது?

(ஆ) கண்டி உடன்படிக்கையில் மூன்றாம் ஜோஜ் மன்னர் பிரதிநிதியாக கைச்சாத்திட்டவர் யார்?

(இ) இலங்கையின் கரையோரப் பகுதி பிரித்தானிய மன்னராட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்ட ஆண்டு எது?

(ஈ) 1818 ஆம் ஆண்டுச் சுதந்திரப் போராட்டம் ஆரம்பமான இடம் எது?

(உ) 1818 சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை வகித்தவர்களில் ஆங்கிலேயரால் சிரச்சேதம் செய்யப்பட்ட ஒருவரைத்தருக.

(ஊ) 1848 ஆம் அண்டுப் புரட்சி தோன்றுவதற்கு காரணமான புதிய வரிகளை விதித்தவர் யார்?

(எ) 1848 ஆம் ஆண்டு புரட்சி நடைபெற்ற இடங்கள் யாவை?

(ஏ) 1848 ஆம் ஆண்டு புரட்சிக்குத் தலைமை வகித்த இருவரைத் தருக?

(ஐ) சர்வஜன வாக்குரிமையைச் சிபார்சு செய்த விசாரணைக் குழுவினர் யார்?

(ஒ) இருசபைகளைக் கொண்ட பாராளுமன்றத்தை அமைத்தவர் யார்?

(ஓ) கொழும்பு - கண்டி நெடுஞ்சாலையை அமைத்தவர் யார்?

(ஔ) இலவச கல்வி முறை புகுத்தப்பட்ட ஆண்டு எது?

3. **"அ" நிரலில் தரப்பட்டுள்ளவர்களுள் பின்வருவனவற்றுடன் தொடர்புள்ளவர்களைத் தருக.**

| | |
|---|---|
| *(அ) பரம விஞ்ஞானார்த்த சங்கம்* | *(ஆ) மகாபோதி சங்கம்* |
| *(இ) சைவப்பிரகாச வித்தியாசாலை* | *(ஈ) கொழும்பு முஸ்லீம் சங்கம்* |
| *(உ) பரமேஸ்வராக் கல்லூரி* | |

1) சேர் பொன் இராமநாதன் 2) டி.பீ. விஜயதுங்க 3) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 4) ஜனாப் எம்.சீ. சித்திலெப்பை 5) ஈ.டபிள்யூ. பெரரோ 6) அனாகரிகதர்மபால 7) எ.ஈ. குணசிங்க 8) குமாரசுவாமிப்புலவர் 9) கென்றி ஒல்கொட்

4. பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட நன்மைகள் இரண்டினையும் தீமைகள் இரண்டினையும் தருக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. இலங்கையின் ஆட்சிமுறை

1. 1978 ஆம் ஆண்டு யாப்பின் பின் ஊடாக மக்கள் தமது இறைமையை செயற்படுத்தக் கூடிய வழிகள் இரண்டு தருக?
2. இலங்கையில் நீர் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகள் 5 தருக?
3. வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதற் குரிய காரணங்கள் இரண்டினைத் தருக?
4. நாட்டிலுள்ள பிரஜை ஒருவரின் பொறுப்புக்கள் என நீர் கருதுபவற்றில் இரண்டைத் தருக?
5. எமது பாராளுமன்றத்தில் அங்கத்தவர்கள் நியமனம் பெற்ற முறையியைத் தருக?
6. விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் மூலம் ஜனாதிபதி. பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாக்கு முறையில் தெரியப்படுகின்றனர்.
7. பாராளுமன்றம் தொடர்பாக ஜனாதிபதிக் குரிய அதிகாரங்கள் இரண்டினைத் தருக?
8. இலங்கையில் நிதித்துறை சுயாதீனமாக செயல்படுவதற்கான 1978 ஆம் ஆண்டு யாப்பில் உள்ள ஏற்பாடுகள் இரண்டினைத் தருக?
9. இலங்கையில் உள்ள நீதிமன்ற வகைகளைத் தருக?
10. மாகாண சபைகள் அமைக்கப்பட்டதன் நோக்கங்கள் இரண்டு தருக?

## விடைகள்

### பரீட்சை 1 விடைகள்

(1) தப்ரபேன் (2) தொலமி (அலெக் சாந்திரியா எகிப்து)

(3) பாகியன் (சீனர்). மார்க்கோபோலோ (வெனிசியர் - இத்தாலி). இபன்பதூத (தன்ஜியர்-வட ஆபிரிக்கா), மாறிஞொலி (புலோரன்ஸ்-இத்தாலி)

(4) 1) பாகிஸ்தான் 2) இந்தியா 3) நேபாளம் 4) பங்களாதேசம் 5) பூட்டான்

(5) அ) சுமாத்ரா ஆ) அந்தமான் தீவுகள் இ) நிக்கோபார் தீவுகள் ஈ) மடகாஸ்கர்

(6) I நன்னம்பிக்கை முனைவழி: II செங்கடல். சுயஸ்கால்வாய் வழி: III பாரசீகக் குடாவழி IV மலாக்கா நீரிணை வழி

(7) B, C, A (8) 80° - 82°, 6°- 10°

(9) அகலம். 224 கி.மீற்றர். கொழும்பு சங்கமன் கந்தமுனைவரை: நீளம் 432 கி.மீற்றர் பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரமுனை வரை.

(10) 65525 சது.கி.மீ

### பரீட்சை 2 விடைகள்

(1) நெடுந்தீவு (2) மன்னார் (3) யாழ்ப்பாண கடனீரேரி (4) புத்தளம் கடனீரேரி (5) நிலாவெளி (6) கொட்டியாரக் குடா (7) சிகிரியா (8) கதிர்காமம் (9) வெலிகம (10) தேவேந்திர முனை (11) சப்பிரகமுவ (12) கல்லோயா (13) மிகிந்தலை (14) மீ ஓயா (15) கலா ஓயா (ஊ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை 3 விடைகள்

**(1)** (6) கலகெதர (7) பலன (8) கினிகத்தென (9) அபபுததளை (10) அல்ல
**(2)** (1) துன்கிந்த (2) அபர்டின் (3) லக்சபான (4) தியலும (5) பப்பரகந்த
**(3)** (அ) கண்டி (ஆ) அட்டன் (இ) கொஸ்லந்த (ஈ) வெலிமட
**(4)** (உ) மகாவலி (ஊ) களனி (எ) கலுகங்கை (ஏ) வளவ கங்கை (ஐ) கிரிந்தி ஓயா
**(5)** (11) கண்டி (12) மாத்தளை (13) கம்பளை (14) நுவரெலியா (15) வெலிமட (16) பதுளை

## பரீட்சை 5 விடைகள்

**(1)** (அ) E (ஆ) 8 (இ) F (ஈ) 1 (உ) 9 **(2)** (அ) B (ஆ) F (இ) A (ஈ) E
**(3)** குறிப்பு எண் 49 பார்க்கவும் **(4)** குறிப்பு எண் 48 **(5)** குறிப்பு எண் 40

## பரீட்சை 6 விடைகள்

**(1).** (1) 21° (2) 32° (3) 1900 மி.மீ (4) 30% (5) 40% (6) ஆரியர் (7) காலநிலை (8) நீர்வசதி (9) மன்னர்கள் (10) 13 ஆம்
**(2).** (1) குருணாகல் (2) அனுராதபுரம் (3) மட்டக்களப்பு (4) அம்பாந்தோட்டை (5) கொழும்பு (6) குருணாகல் (7) கண்டி (8) பதுளை (9) நீர்ப்பற்றாக்குறை (10) வரட்சி (11) வெள்ளப்பெருக்கு (12) நீர்ப்பிரச்சனை
**(3).** (1) நவீன முறை (2) நவீன முறை (3) பாரம்பரிய முறை (4) பாரம்பரிய முறை (5) நவீன முறை (6) நவீன முறை (7) நவீன முறை (8) பாரம்பரிய முறை

## பரீட்சை 7 விடைகள்

**(1)** (அ) 1823 இல் (ஆ) ஜேம்ஸ்ரெயிலர் (இ) 600 மீ (ஈ) ஹென்றி விக் ஹெம்கே (உ) சீனா
**(2)** 1) களுத்துறை 2) கேகாலை 3) நுவரெலியா 7) பதுளை 5) குருணாக்கல் 8) கம்பகா
**(3)** (அ) பெட்டி. தொப்பி. விளக்கமாறு. பாய் (ஆ) எண்ணை. வினாகிரி. பிண்ணாக்கு. (இ) மரத்தளபாடம். மின்கம்பங்கள்

| (4) | தேயிலை | இறப்பர் | தென்னை |
|---|---|---|---|
| வெப்பநிலை | 15°C -27°C | 27°C | 27°C |
| மழைவீழ்ச்சி | 200° - 400° மி.மீ. | 200மி.மீ. அதிகம் | 200- 250 மி.மீ. |
| மண் | சரளைமண் | கபூகடுமண் | மணல்மண் |
| நிலம் | மென்சாய்வான மையப்பகுதி | சரிவான உயர் நிலம் | தாழ் நிலப்பகுதிகள் |

(5) 1) போக்குவரத்து - ரயர். ரீயூப் 2) பாதுகாப்பு - கையுறை . சப்பாத்து 3) தொடர்பாடல் - கேபிள். வயர் 4) வைத்திய சேவை - போத்தல். கையுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை 8 விடைகள்

(3)

| மீன்பிடி வகைகள் | முறைகள் | பிரதேசம் | மீனினம் |
|---|---|---|---|
| ஆழ்கடல் மீன்பிடிப்பு | இழுகப்பல்கள் | கரையிலிருந்து 320 கி.மீற்றர் வரை பிரதேசம் | அறக்குளா பாரை. சூரை. பன்னா. கொப்பறா |
| கண்டமேடைகள் | பாய்த்தோணிகள் | கரையிலிருந்து 20 கி.மீற்றர் | சாளை. சூரை. சிங்கஇறால் |
| (கரையோர மீன்பிடிப்பு) நன்னீர் மீன் பிடிப்பு | வீச்சுவலை வீச்சுவலை | களப்புகள் செற்று நிலங்கள் | இறால். நண்டு. சேற்று நிலம் சிங்கறால். வர்ண மீன்கள் |

(4)

| | புராதன மீன் பிடிமுறை | நவீன மீன்பிடிமுறை |
|---|---|---|
| 1) | கரைவலை. வீச்சுவலை | இழுவைக்கப்பல் |
| 2) | கைவலை. இறகு வலை | கெவுள் வலை |

## பரீட்சை 9 விடைகள்

(1) மாடுகள். ஆடுகள். பன்றிகள். கோழிகள்

(2) புற்றரை. நீர்வசதி. பொருத்தமான பிரதேசம்

(3) பாலைப் பெறுவதற்கு. பாரமிளுப்பதற்கு. இறைச்சி பெறுவதற்கு

(4)

| | மலைநாட்டின் பசுமையான விலங்கு வளர்ப்பு பிரதேசம் | கரையோரவரண்ட விலங்கு வளர்ப்புப் பிரதேசம் | மகாவலிப் பகுதி விலங்கு வளர்ப்புப் பிரதேசம் |
|---|---|---|---|
| 1) | அம்பேவேவ | ஆண்டிகம | கலங்குட்டிய |
| 2) | போபத்தலாவ | மகாஇலுப்பலம | கிராந்துரு கோட்டை |

(5) 1) நல்ல இனமாடுகளை இறக்குமதி செய்தல்
2) செயற்கை சினைப்படுத்தல் மூலம் புதிய இனங்களை விருத்தி செய்தல்
3) கலப்பு இனவாக்கங்களைப் பெறுதல்.

(6) 1) மிருகவளர்ப்பு பயிற்சிகள் 2) பரிசோதனைகள் 3) மிருக இனவிருத்திகள் மிருக வளர்ப்பு பற்றிய விஞ்ஞான அறிவு விருத்திகள் மேற்கொள்ளல்.

## பரீட்சை 10 விடைகள்

(1) (அ) 14 கொழும்பு 13 கம்பகா (ஆ) 21 மொனராகலை 4 முல்லைத்தீவு (இ) 14 கொழும்பு 13 கம்பகா (ஈ) 3 மன்னார் 5 வவுனியா 2) 14 கொழும்பு 13 கம்பகா

(2) பாடப்புத்தகத்தைப்பார்க்கவும்.

(3) பாடப்புத்தகத்தைப்பார்க்கவும்.

(4) பாடப்புத்தகத்தைப்பார்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை 11 விடைகள்

(1) (அ) சிற்றளவுக் கைத்தொழில் (ஆ) குடிசைக் கைத்தொழில் (இ) குடிசைக் கைத்தொழில் (ஈ) பாரிய கைத்தொழில் (உ) சிற்றளவுக் கைத்தொழில் (ஊ) பாரிய கைத்தொழில்

(2) சிற்றளவுக் கைத்தொழில் 1) அதிகளவு மூலதனம் தேவையில்லை 2) கூடிய வேலைவாய்ப்பைப் பெறலாம்.

(3) குறிப்பு எண் 129, 130 (பக்கம் 53)

(4) குறிப்பு எண் 131

(5) குறிப்பு எண் 133

## பரீட்சை 12 விடைகள்

(1) (1) 1) மாகனின் படையெடுப்பு 2) அரசுரிமைப் பிணக்குகள் 3) மலேரியா நோய் பரவியமை

(2) 3 ம் விஜயபாகு (3) பூஜாவலிய (4) பாதுகாப்பு - பாறைக் குன்றுகள் காணப்பட்டமை (5) 2 ம் புவனேகபாகு (6) குருணாகல் (7) 4 புவனேகபாகு (8) கோட்டை (9) 6 ம் பராக்கிரமபாகு (10) அன்னம் விடு தூது, புறா விடு தூது (11) குருணாகல் (12) அம்பக்கே தேவாலயம் (13) 4 ம் புவனேகபாகு (14) 2 ம் பராக்கிரமபாகு (15) 2 ம் பராக்கிரமபாகு (16) கோட்டை (17) 13ம் நூற்றாண்டு (18) 6 ம் பராக்கிரமபாகு (19) யாப்பகூவா (20) நல்லூர்

(2) 3 ம் விஜயபாகு 1 ம் புவனேகபாகு, 2 ம் புவனேகபாகு, 4 ம் புவனேகபாகு, 6 ம் பராக்கிரமபாகு

(3) A கம்பளை, B கோட்டை, C யாப்பகூவா

(4) (அ) யாப்பகூவா (ஆ) கம்பளை (இ) கோட்டை (ஈ) கோட்டை

## பரீட்சை 13 விடைகள்

(1) 1) 1453 2) 1498 3) 1505 4) 1521 5) 1562 6) 7) 1597 8) 1638 9) 1658 10) 1796

(2) 1) சரி 2) பிழை 3) சரி 4) சரி 5) சரி

(3) (அ) கம்பனி ஆட்சி, நேரடியற்ற ஆட்சி (ஆ) கத்தோலிக்கம் (இ) யுத்தத்தைத் தவிர்த்தமை (ஈ) பைலா, கபிரிஞ்ஞா (உ) உரோமன் டச்சுச் சட்டம்

(4) 1) வஸ்கொடகாம 2) 2 ம் இராஜசிங்கன் 3) போர்த்துக் கீசரைச் சுற்றுப்பாதையால் அழைத்துச்சென்றமை.

(5) ஆ, ஈ, உ, ஏ, ஐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை 14 விடைகள்

(1) A. முதலாவது ஆள்பதி
B. கண்டியைக் கைப்பற்றிய ஆள்பதி
C. 1829ல் இலங்கைக்கு வந்து அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களைச் சிபார்சு செய்தவர்.
D. கோல்புறூக்குடன் நீதித்துறை சீர்திருத்தங்களைச் செய்தவர்.
E. 1848 கலகத்தலைவர்களில் ஒருவர்.
F. 1931ல் யாப்பு சீர்திருத்தம் செய்தவர்.
G. 1818 கலகத்தலைவர்களில் ஒருவர்.
H. கண்டி கடைசி நாயக்க மன்னன்.
I. முதலாவது படித்த இலங்கையர் பிரதிநிதி.
J. இலவசக் கல்வி முறையைக் கொண்டு வந்தவர்.

(2) (அ) பிறவுன்றிக் (ஆ) 1802 (இ) கெப்பிற்றிப் பொல. மடுகல்ல (ஈ) வெல்லச (உ) ஆள்பதி ரொறிங்டன் (ஊ) குருணாகல், மாத்தளை. (எ) கொங்கல கொட பண்டார. புரன் அப்பு (ஏ) டொனமூர் (ஐ) டொனமூர் (ஒ) சோல்பரி (ஓ) எட்வேர்ட் பாண்ஸ (ஔ) 1945
(3) (அ) 9 (ஆ) 6 (இ) 3 (ஈ) 4 (உ) 1
(4) குறிப்பு 191, 192 பார்க்கவும்.

## பரீட்சை 15 விடைகள்

(1) வாக்குரிமை. அடிப்படைஉரிமைகள்
(2) (அ) பேச்சுச்சுதந்திரம் (ஆ) மதச்சுதந்திரம் (இ) விரும்பிய தொழில் செய்யும் சுதந்திரம் (ஈ) ஏதேட்சையாகக் கைதுசெய்யாமலிருக்கும் சுதந்திரம் (உ) இலங்கை முழுவதிலும் தடையின்றிநடமாட. வசிப்பிடத்தைத் தெரிந்து கொள்வதற்கான சுதந்திரம்
(3) குறிப்பு 195 (4) குறிப்பு 197
(5) 196 பேர் மக்களின் வாக்குகளினாலும் 29 பேர் தேசிய பெயர்ப்பட்டியல் மூலம் தெரியப்படுவர்.
(6) தனிமாற்று வாக்குமுறை (ஜனாதிபதி தேர்தல்) பட்டியல் முறை (பாராளுமன்றத் தேர்தல்)
(7) குறிப்பு 201 (8) குறிப்பு 205 (9) குறிப்பு 206 (10) 212



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலனறுவை வீழ்ச்சிக்குப் பின் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற மன்னர்கள்

| | | |
|---|---|---|
| கலிங்க மாகன் | - | 1215 - 1236 |
| மூன்றாம் விஜயபாகு | - | 1232 - 1236 |
| இரண்டாம் பராக்கிரமபாகு | - | 1236 - 1270 |
| நான்காம் விஜயபாகு | - | 1270 - 1272 |
| 1ம் புவனேகபாகு | - | 1272 - 1284 |
| 3ம் பராக்கிரமபாகு | - | 1287 - 1293 |
| 2ம் புவனேகபாகு | - | 1293 - 1302 |
| 4ம் பராக்கிரமபாகு | - | 1302 - 1326 |
| 5ம் விஜயபாகு | - | 1335- 1341 |
| 4ம் புவனேகபாகு | - | 1341 - 1351 |
| 5ம் பராக்கிரமபாகு | - | 1344 - 1359 |
| 3ம் விக்கிரமபாகு | - | 1357 - 1374 |

## கோட்டை அரசர்கள்

| | | |
|---|---|---|
| 6ம் பராக்கிரமபாகு | - | 1411 - 1466 |
| ஜயவீர பராக்கிரமபாகு | - | 1466 - 1469 |
| 6ம் புவனேகபாகு | - | 1469 - 1477 |
| 7ம் பராக்கிரமபாகு | - | 1477 |
| 8ம் வீரபராக்கிரமபாகு | - | 1477 - 1489 |
| 9ம் தர்ம பராக்கிரமபாகு | - | 1489 - 1513 |
| 6ம் விஜயபாகு | - | 1513 - 1521 |
| 7ம் புவனேகபாகு | - | 1521 - 1551 |
| தர்மபால | - | 1551 - 1597 |

## சீதாவாக்கை மன்னர்கள்

| | | |
|---|---|---|
| மாயாதுன்னை | - | 1521 - 1581 |
| 1ம் இராஜசிங்கன் | - | 1581 - 1593 |

## மலையக மன்னர்கள்

| | | |
|---|---|---|
| சேனாசம்மத விக்கிரமபாகு | - | 1469 - 1511 |
| ஜெயவீர | - | 1511 - 1552 |
| கரலியட்ட பண்டார | - | 1552- 1582 |
| 1ம் விமலதர்மசூரியன் | - | 1591 - 1604 |
| சேனரத் | - | 1604 - 1635 |
| 2ம் இராஜசிங்கன் | - | 1635 - 1687 |
| 2ம் விமலதர்மசூரியன் | - | 1687 - 1707 |
| நரேந்திரசிங்கன் | - | 1707 - 1739 |
| கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன் | - | 1747 - 1782 |
| ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் | - | 1798 - 1815 |

## யாழ்ப்பாண இராச்சிய மனன்னர்கள்

விஜய கூலங்கைச் சக்கரவர்த்தி முதல் கனக சூரியசிங்கையாரியன் வரை (ஆண்டுகள் தெரியவில்லை)

| | | |
|---|---|---|
| பரராச சேகரன் | - | 1478 - 1519 |
| 1ம் சங்கிலி | - | 1519 - 1561 |
| புவிராஜ பண்டாரம் | - | 1561 - 65 - 1582 - 1591 |
| பெரிய பிள்ளை | - | 1565 - 1582 |
| எதிர்மனசிங்கன் | - | 1591 - 1616 |
| 2ம் சங்கிலி | - | 1616 - 1620 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு மேலதிக மீட்டற் குறிப்புகள்

**1. பொலனறுவைக் காலத்தின் பின்னர் இராசதானிகள் மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் யாவை?**

1. **கலிங்கமாகனின் படையெடுப்பு** : 1214ல் 24000 போர்வீரர்களுடன் படையெடுத்து பொலன்னறுவையைக் கைப்பற்றினான்.
2. **அரசுரிமைக் குழப்பங்கள் ஏற்பட்டமை;** நிஸங்கமல்லனின் ஆட்சியின்பின் 20 ஆண்டுகளில் 11 ஆட்சியாளர்கள் சிம்மாசனம் ஏறினர். கலிங்க, பாண்டிய தளபதிகளின் குழப்பங்கள், போர்கள் ஏற்பட்டன.
3. **நீர்ப்பாசனம் சீர்குலைந்தமை:** விவசாயப் பொருளாதாரத்தின் உயிர் நாடியான நீர்ப்பாசனம் சீர்குலைந்தமையால் இராசரட்டை நாகரிகத்தின் அத்திவாரமே தகர்ந்தது.
4. **மலேரியா நோய்பரவியமை:** காடுகள் தோன்றி மலேரியா நோய் பரவியமையால் இராசரட்டைச்சமவெளி மக்கள் வசிப்பதற்கு ஒவ்வாத பகுதியாக மாறியது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **பொலன்னறுவையின் பின் இராசதானிகளைத் தருக.**

| இராசதானிகள் | இராசதானிகளாக்கிய மன்னர்கள் |
|---|---|
| 1. பொலன்னறுவை | முதலாம் விஜயபாகு |
| 2. தம்பதெனியா | மூன்றாம் விஜயபாகு |
| 3. யாப்பகூவா | முதலாம் புவனேகபாகு |
| 4. குருநாகல் | இரண்டாம் புவனேகபாகு |
| 5. கம்பளை | நான்காம் புவனேகபாகு |
| 6. கோட்டை | ஆறாம் பராக்கிரமபாகு |

3. **தம்பதெனியாவை இராசதானியாக்கிய மூன்றாம் விஜயபாகுவின் சேவைகளைத் தருக.**

(இவன் 1232 - 1236வரை ஆட்சிபுரிந்தான். இவனை வத்க்மிவிஜயபாகு அல்லது வன்னி விஜயபாகு எனவும் அழைத்தனர்.)

1. தம்பதெனியா பாதுகாப்பான இடம் எனக்கருதியதால் தலைநகராகத் தெரிவு செய்தான்.
2. புத்தகுருமார்கள், வன்னித்தலைவர்களின் ஆதரவைப் பெற்றான்.
3. பகைவர்களிடமிருந்து பாதுகாப்பதற்காகக் கொத்மலையில் ஒளித்து வைத்திருந்த புனிததந்ததாதுவை கொணர்வித்து கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகலை மலை உச்சியில் தலதாமாளிகை அமைத்து அங்கே வைத்தான்.
4. தந்ததாதுவிற்குப் பொறுப்பாக இருந்தமையால் இவனது ஆட்சி உரிமை உறுதி செய்யப்பட்டது.
5. தனது பெயரைக்கொண்டு விஜயசுந்தராமய என்ற விகாரையை தம்பதெனியாவில் கட்டுவித்து அதனைப் புத்தபிக்குகளின் தலைமை நிலையமாக்கினான்.
6. களனிவிகாரை, அத்தனகல்ல விகாரை போன்ற பல விகாரைகள் இவனால் புனரமைப்புச் செய்யப்பட்டன.
7. பிக்குகளுக்கான ஒழுக்கக் கோவை தயாரித்தான். திரிபிடகம் என்ற தர்ம நூலையும் வரைவித்தான்.

4. **இரண்டாம் பராக்கிரமபாகுவின்(1236-1270)ஆட்சியின் முக்கியத்துவத்தைத் தருக.**

1. 3ம் விஜயபாகுவின் மூத்த புதல்வன், இரண்டாம் பராக்கிரமபாகு என்ற பெயருடன் அரசனாகினான். 35வருடங்கள் ஆட்சிபுரிந்தான்.
2. மாயரட்டை, உறுகுணைப்பகுதியில் முதலில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினான். 1255ல் பாண்டியப் பேரரசின் உதவியுடன் மாகனைத்துரத்திவிட்டு பொலன்னறுவையையும் மீட்டான்.
3. இவனது ஆட்சிக்காலத்தில் யாவா நாட்டைச்சேர்ந்த சந்திரபானு இருதடைவைகள் 1247லும் 1261லும் படையெடுத்தபோது தோற்கடிக்கப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இவன் சிறந்த இலக்கிய மேதையாகவும் விளங்கினான் வ்சுதத் மார்க்கய என்ற நூலுக்கு இவன் எழுதிய பாயிரம் இவனது பாண்டித்தியத்தைக் காட்டும்.
5. கவிசிலுமின என்ற காவியத்தை எழுதினான். "கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டித" என்ற பட்டத்தினால் போற்றப்பட்டான்.
6. புத்தகுருமார்கள், விகாரைகள் கட்டுப்பாடு சம்பந்தமான "கதிகாவக" என்ற நூல் இம்மன்னனின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டது.
7. பெலிகலையில் வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவை கொணர்வித்து தம்பதெனியாவில் தலதா மாளிகை அமைத்து அங்கு வைப்பித்தான்.

**5. முதலாம் புவனேகபாகுவின் ஆட்சியின் முக்கியத்துவத்தைத் தருக.**

1. இயற்கைப்பாதுப்புடன் விளங்கிய யாப்பகூவாவைத் தலைநகராக்கினான்.
2. வன்னித்தலைவர்கள் போன்ற உள்நாட்டவர்களின் கலகங்களை அடக்கினான்.
3. யாப்பகூவவின் உச்சியில் அரசமாளிகையையும் தலதா மாளிகை யையும் அமைத்தான்.
4. வருடாந்த உபசம்பதா விழாவை நடாத்தினான்.
5. எகிப்து நாட்டுச் சுல்தானுடன் வர்த்தகத் தொடர்புகளை மேற்கொள்வத-ற்குத் தூதுக்குழுவை அனுப்பிவைத்தான்.
6. இவனது ஆட்சிக் காலத்தில் கறுவா முக்கிய வர்த்தகப்பொருளாக மாறியது. அராபியவர்த்தகர்கள் மத்தியகிழக்கு நாடுகளுக்கு எடுத்துச் சென்றனர்.
7. இவனால் அமைக்கப்பட்ட யாப்பகூவக் கோட்டையின் நுழைவாயிலை இன்றும் காணலாம். கருங்கல்லில் செதுக்கப்பட்ட கலைத்திறனோடு கூடிய வேலைப்பாடுகள் காணப்படுகின்றது.
8. யாப்பகூவவின் இவனால் அமைக்கப்பட்ட நீர்க்கால்வாய் அகலமாகவும் உறுதியாகவும் காணப்படுகிறது.
9. இவனது ஆட்சியின் இறுதிக்காலத்தில் குலசேகர பாண்டியன் படையெடுத்து வந்து யாப்பகூவாவைத் தாக்கி தந்ததாதுவையும் வேறுவஸ்துக்களையும் எடுத்துச் சென்றான்.

**6. பொலன்னறுவையின் பின் இராசதானிகள் மாறிச்சென்றமை.**

| இராசதானி | அரசர்கள் | உறவுமுறைகள் |
|---|---|---|
| தம்பதெனியா | மூன்றாம்விஜயபாகு (1232-1236)<br>இரண்டாம்பராக்கிரமபாகு (1236-முதலாவது பண்டித பராக்கிரமபாகு எனவும் அழைக்கப்பட்டான்) | வத்கமி விஜயபாகு வன்னி விஜயபாகு 3வது விஜயபாகுவின் மூத்தபுதல்வன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | **நான்காம்விஜயபாகு** (1270-1272) போசற்விஜயபாகு எனவும் அழைக்கப்பட்டான். | இரண்டாம்பராக்கிரம பாகுவின் மகன். |
| **யாப்பகூவா இராஜதானி** | **முதலாம் புவனேகபாகு** (1272-1284) (1284-1287 வரை அரசனின் ஆட்சிநிலவவில்லை | நான்காம்விஜயபாகு வின் மகன் |
| **குருநாகல் இராஜதானி** | **மூன்றாம் பராக்கிரமபாகு** (1287-1293) பாண்டியரிடம் தந்ததாதுவைப் பெற்று தற்காலிகமாகப் பொலன்னறுவையில் இராச -தானி அமைத்து ஆண்டான். | முதலாம்புவனேக பாகுவின் இளைய சகோதரன். |
| | **இரண்டாம் புவனேகபாகு** (1293-1302) | முதலாம்புவனேக பாகுவின் மகன் |
| | **நான்காம் பராக்கிரமபாகு** (1302-1326) (இரண்டாவது பண்டித பராக்கிரமபாகு எனவும் அழைக்கப்பட்டான்) | புவனேகபாகுவின் மகன். |
| | **மூன்றாம் புவனேகபாகு** (வன்னி புவனேகபாகு எனவும் அழைக்கப்பட்டவன்) (1326-1335) **ஐந்தாம் விஜயபாகு** (1335-1341) சவுலு விஜயபாகு எனவும் அழைக்கப்பட்டவன். | இவர்கள் பற்றிய தகவல்கள் தெரியவில்லை |
| **கம்பளை இராஜஸ்தானி** | **நான்காம் புவனேகபாகு** (1341-1358) | "திருசிங்கள ஆதீஸ்வர" என்ற பட்டம் பெற்றவன். |
| | **ஐந்தாம் பராக்கிரமபாகு** (1344-1359) (கம்பளையிலும் டெடிகமவிலும் ஆட்சி செய்தவன்) | நான்காம் புவனேகபாகுவின் சகோதரன் |
| | **மூன்றாம் விக்கிரமபாகு** (1360-1374) | நிஸங்க அழகக் கோனரின் உதவியுடன் ஆட்சி பீடமேறியவன் |
| **கோட்டே இராஜதானி** | **ஆறாம் பராக்கிரமபகு** (1415-1467) | இவனது ஆரம்ப காலத் தகவல்கள் தெரியவில்லை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **பொலன்னறுவையின் பின் இராஜதானிகள் தென்மேற்கே தெரிவு செய்யப்பட்டமைக்குரிய காரணங்கள் யாவை?**

1. **தொடர்ச்சியாக வெளிநாட்டவர்களின் ஆக்கிரமிப்புக்கள் ஏற்பட்டமை.**
   உ.ம்: அ. மாகன் (கலிங்கம்), ஆ. சந்திரபானு (ஜாவா)
   இ. குலசேகரன் (பாண்டியநாடு), ஈ. செங்கோ (சீனா)
2. **இயற்கை அரண்களைக் கொண்ட பாதுகாப்பிடங்களை நாடியமை.**
   உ.ம்: யாப்பகூவா, கம்பளை (மலையரண்) கோட்டே (நதி, சதுப்புநிலம்)
3. **சிறந்த காலநிலை கொண்ட இடங்களாக அமைந்தமை.**
   உ.ம்: குருணாகல்
4. **வருவாய் தரும் மார்க்கங்கள் காணப்பட்டமை.**
   உ.ம்:கோட்டே (கறுவா, முத்துக்குளிப்பு பிரதேசங்களைக் கட்டுப்படுத்தலும், வர்த்தகமும்.)
5. **முன்னரே அறிந்தபிரதேசங்களாகவும் சாதாரண வாழ்க்கைக்கு ஏற்றதாகவும் அமைந்திருந்தமை.** உ.ம்: குருநாகல், கோட்டே.

8. **தென்மேற்கே அமைந்த இராசதானிகள்.**

| | புவியியற்சூழல் | தெரிவுசெய்யப்பட்டமைகான காரணங்கள். | ஆரம்ப நிலை |
|---|---|---|---|
| **தம்பதெனியா** | இயற்கை அரண் குன்றுகள் | மாகனை எதிர்த்ததன் மூலம் தம்பதெனியா விஜயபாகு மக்கள் ஆதரவு பெற்றிருந்தமை. | மாலனுக்கு எதிராகப் படை திரட்டப்பட இடம் |
| **யாப்பகூவா** | அரண்கள் அமைக்க ஏதுவான கற்பாறைக் குன்றுகள் | ஏற்கனவே கோட்டை அரணைக் கொண்டிருந்தமை. | சுபன் என்ற தளபதி கோட்டை அரண் அமைத்து மாகனை எதிர்த்தமை. |
| **குருநாகல்** | குன்றுகளால் சூழப்பட்டது | பாண்டியர் படையெடுப்பு வன்னித் தலைவர்கள் கிளர்ச்சியிலிருந்து பாதுகாப்புப் பெற. | பாதுகாப்பானது வளமுடையது |
| **கம்பளை** | மலைகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்கு. | மத்திய மலை நாட்டில் பாதுகாப்பான இடம். | உபநகரமாக விளங்கியது |
| **கோட்டே** | மேற்குக் கரைப்பகுதி நதி, சதுப்பு நிலத்தால் சூழப்பட்டது. | வடபகுதியிலிருந்து வரும் ஆக்கிரமிப்புகளைக் கட்டுப்படுத்தல் கறுவாப் பிரதேசங்களைப் பாதுகாத்தல் | 5ம் புவனேகபாகு அமைத்த பாதுகாப்பு அரண் காணப்பட்டது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. தென்மேற்கு அரசர்கள், சேவைகள்

| மன்னர்கள் | அரசியல் | சமயம் | இலக்கியம் |
|---|---|---|---|
| 2ம் பராக்கிரமபாகு | மாகனை விரட்டியமை சந்திரபானுவைத் தோற்கடித்தமை | தம்பதெனியா ஒழுக்கக் கேவை வெளியிட்டமை | கவிசிலுமின காவியத்தை எழுதினான் விசுத்தி மார்க்கய நூலுக்குப் பாயிரம் எழுதினான். |
| 1ம் புவனேகபாகு | வன்னித் தலைவர்கள் கலகங்களை அடக்கியமை குலசேகரப் பாண்டியன் படையெடுப்பு | வருடாந்த உபசம்பதாவை நடாத்தியமை | |
| 4ம் பராக்கிரமபாகு | குருணாக்கலில் போதி மாபாவின் கலகம் | தந்ததாதுவிற்கு கோயில அமைத்தமை நன்கொடைகள் பராமரிக்க வழங்கியமை பூசைகள் நடைபெறும் முறைபற்றி தலதா சிறி என்ற நூலை எழுதியமை.<br>அஸ்கிரிய பீடத்தை அமைத்தமை வில்கமுவ சங்கர ராஜ தேரருக்கு ஆதரவு அளித்தமை. | பிரிவெனாக்களுக்கு காணிகளை நன்கொடையாக வழங்கியமை<br>"பண்சிய பணஸ் ஜாதகய" சிங்களத்தில் மொழி பெயர்த்தமை சிங்கள போதி வங்ஸ |
| 4ம் புவனேகபாகு | அழகக் கோனார் குடும்பம் ஆதிக்கம் பெறல் | இலங்காதெனிய கடலா -தெனிய விகாரைகள் அமைக்கப்பட்டமை புத்தகுரு பீடம் புனரமைக்கப்பட்டமை | சந்தேச நூல்கள் தோன்றியமை |
| 6ம் பராக்கிரமபாகு | இலங்கை முழுவ-தையும் ஒரு ஆட்சிக்குக் கீழ் கொண்டு வரல். வன்னிப் பிரதேசத்தை வெற்றி கொள்ளல். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றல். மலை நாட்டு ஜோதிய கலகத்தை அடக்கல். | கோட்டேயில் தலதா மாளிகை நிறுவியமை. இந்து சமயத்துக்கு ஆதரவு வழங்கியமை. | தூதுவிடு காவியங்கள் தோன்றியமை இலக்கியத்தில் பொற்காலமாக விளங்குதல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 **அட்டவணையை நிரப்புக. (தரவுகளை அவதானிக்கவும்)**

(1) பொலன்னறுவை இராசதானியின் ஆட்சியாளர்கள் செய்த சேவைகள் தரப்பட்டுள்ளன. (இலக்கமிடப்பட்டுள்ளன)

(2) இராசதானிகள் தம்பதெனியா (A) யாப்பகூவா (B) குருணாக்கல் (C) கம்பளை (D) கோட்டே (E) எனக் குறிப்பிடவும்.

(3) ஆட்சியாளர்கள் 6ம் பராக்கிரமபாகு (அ) 2ம் பராக்கிரமபாகு (ஆ) 3ம் விஜயபாகு (இ) நான்காம் பராக்கிரமபாகு (ஈ) நான்காம் புவனேகபாகு (உ) முதலாம் புவனேகபாகு (ஊ) எனக் குறிப்பிடவும்.

**ஆட்சியாளர்களின் சேவைகள்**

1. மாகனை விரட்டியமை. 2. லங்காதிலக விகாரையைக் கட்டியமை
3. அஸ்கிரிய பீடம் அமைத்தல் 4. விஜயசுந்தராமையை அமைத்தல்
5. இலங்கையை ஒன்று படுத்தியமை
6. சந்திரபானுவைத் தோற்கடித்தமை 7. தலாசிறித எழுதுவித்தமை
8. விஜய நகர ஆட்சியாளர்களிடம் கப்பம் பெறல்
9. பெலிகலையில் தலதா மாளிகை அமைத்தமை
10. மலைநாட்டு ஜோதிய கலகம் 11. அழகக் கோனார் ஆதிக்கம்
12. தம்பதெனிய கதிகாவத்தை எழுதியது
13. போதிமாபாவின் கலகத்தை அடக்குதல்
14. பௌத்த பாளிநூல்கள் சிங்கள மொழியில் மொழிபெயர்த்தமை
15. வருடாந்தம் உபசம்பதாவை நடாத்தியமை

**அட்டவணையை நிரப்புதல்**

| சேவைகளைக் காட்டு இலக்கங்கள் | சேவைக்கான இராசதானி | சேவை தொடர்பான ஆட்சியாளர்கள் |
|---|---|---|
| 1, 6, 12 | (A) தம்பதெனியா | (ஆ) 2ம் பாரக்கிரமபாகு |
| 4, 9 | (A) தம்பதெனியா | (இ) 3ம் விஜயபாகு |
| 15 | (B) யாப்பகூவா | (ஊ) 1ம் புவனேகபாகு |
| 3, 7, 13, 14 | (C) குருணாக்கல் | (ஈ) 4ம் பராக்கிரமபாகு |
| 11, 2 | (D) கம்பளை | (ஊ) 4ம் புவனேகபாகு |
| 5, 8, 10 | (E) கோட்டே | (ஆ) 6ம் பராக்கிமபாகு |

## போத்துக்கேயரும் ஒல்லாந்தரும்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

10. **கீழைத் தேச நாடுகளுக்கான கடல் மார்க்கத்தை அறிவதில் மேலைத் தேசத்தவர்கள் ஆர்வம் காட்டியமைக்குரிய காரணங்கள் யாவை?**

1. கொன்சாந்தி நோபிள் கைப்பற்றப்பட்டதால் தரைமார்க்க தொடர்புகள் தடைப்பட்டமை.
2. கீழைத்தேச வாசனைத் திரவியங்களைப் பெறமுடியாமை.
3. சமயம் பரப்பும் நோக்கமும் புகழ் பெறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **"விஜயபாகு கொள்ளய" நடைபெறவிட்டால் போத்துக்கேயர் கோட்டையிராட்சியத்தை கைப்பற்றியிருக்க மாட்டார்கள். இக்கூற்றை உறுதிப்படுத்துக.**
   1. இராசதானி மூன்றாகப் பிரிக்கப்பட்டதால் பலவீனமடைந்தமை.
   2. இராசதானிகள் பலவீனம், அபிலாசைகளால் போர்த்துக்கேயர் உதவியமை நாடியமை.
   3. இராசதானி நிர்வாகத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டமை.
   4. புவனேகபாகு, மாயதுன்னை, விதியபண்டாரன், 1ம் இராசசிங்கன் போன்றோர் ஒருமித்து எதிர்த்திருந்தால் கைப்பற்றுவது கடினமாக இருந்திருக்கும்.

12. **நாட்டின் நிர்வாகத்தில் "விஜயபாகு கொள்ளய" மூலம் ஏற்பட்ட தாக்கங்கள் யாவை?**
   1. ஆட்சிப் போட்டியினால் அரசியல் உறுதிப்பாடு சீர்குலைந்து நிர்வாகம் பலயீனமடைந்தமை.
   2. சமாதானம் முதன்மை பெற்ற கோட்டை இராஜதானியின் நிர்வாகம் சீர்குலைந்தமை.
   3. இடையறாயுத்தங்களினால் மக்கள் அழிந்தமை, இடம் பெயர்ந்தமை.

13. **மயாதுன்னை புவனேகபாகுவின் ஆட்சியினை ஒப்பிடுக.**

| | மயாதுன்னை | புவனேகபாகு |
|---|---|---|
| 1. | போர்த்துக்கேயரை விரட்ட யுத்தம் புரிதல் (எதிர்க்கும் கொள்கை) | போர்த்துக்கேயரிடம் உதவி கோரி தலையிட வைத்தல் (பாதுகாப்பு பெறும் கொள்கை) |
| 2. | தனது தந்தையின் கொலைக்குத்திட்டமிட்டவன் பின் தனயனால் கொல்லப்பட்டவன். | போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்தவன் போர்த்துக்கேயரால் வஞ்சகமாக கொல்லப்பட்டான். |
| 3. | தனது இலட்சியமாகக் கோட்டையிராட்சியத்திற்கும் பின் இலங்கை முழுவதற்கும் அரசனாக வரத்திட்டமிட்டவன். | தனது பேரன் தர்மபாலன் ஆட்சியுரிமை பெற வேண்டுமென்ற ஆவல் கொண்டவன். |
| 4. | போர்த்துக் கேயரின் கடலாதிக்கத்தை கள்ளிக் கோட்டை சமோரின் உதவியுன் எதிர்த்தவன். | போர்த்துக்கேயரின் படைபலத்திற்கு அடிபணிந்தவன். |
| 5. | தனது மகன் 1ம் இராசசிங்கனை வீரம் மிக்கவனான போர்களில் ஈடுபடுத்தினான். | பேரன் தர்மபாலன் கோழையாக பரிதபமாக இறக்கக் காரணமானவன். |
| 6. | பௌத்த மதம், குருமாருக்கு பாதுகாப்பு நல்கினான். | கத்தோலிக்க மதம் பரவக் காரணமாணான். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. முதலாம் இராசசிங்கன் சீதாவக்கையின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் எவ்வாறு காரணமாயினான்.

| சீதாவாக்கையின் எழுச்சி | சீதாவாக்கையின் வீழ்ச்சி |
|---|---|
| (1) போர்த்திறன் மிக்கவன் போர்த்துக்கேயர் இவனைக் கனிபல் அலெக்சாண்டர் சீசருடன் ஒப்பிட்டனர். | சீதாவாக்கை இராட்சியம் இவனால் இடையறாப் போரில் ஈடுபட்டது. பொருளாதாரம் சீர்குலைந்தது. |
| (2) இராஜதந்திரம் மிக்கவனாய் விளங்கினான். முல்லேரியா யுத்தம், கொழும்பு முற்றுகையில் தனது தந்திரத்தை வெளிப்படுத்தினான். | தூர நோக்கற்ற கொள்கையால் மலையகத்தில் எதிர்ப்பைப் பெற்றான். வீரசுந்தர பண்டாரனைக் கொன்று அங்கு வெறுப்பைச் சம்பாதித்தான் |
| (3) மலையகராட்சியத்தை இணைத்து சீதாவாக்கையின் எழுச்சியின் உச்சநிலைக்கு காரணமாகினான். | சீதாவாக்கையுடன் தீடீரென அரசுகள் இணைக்கப்பட்டமையால் நிர்வாகப் பிரச்சனைகள் தோன்றின. |
| (4) சைவ சமயத்தைத் தழுவினான். எல்லா மக்களின் ஆதரவும் கிட்டியது. இறுதிவரை வீரயுத்தம் புரிந்தான். | புத்தகுருமாரின் ஆதரவை இழந்தான் வாரிசின்றி இறந்தான். சீதாவாக்கையின் வீழ்ச்சியை விரைவாக்கினான். |

11. செல்வாக்கு : ஒப்பீடு.

| போர்த்துக்கேயர் | ஒல்லாந்தர் |
|---|---|
| 1 காலம் கி. பி. 1505 - 1658 | காலம் கி. பி. 1658 - 1796 |
| 2. போர்த்துக்கேயர் மன்னனின் கீழ் நேரடி ஆட்சி | ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பனியின் நேரடியற்ற ஆட்சி |
| 3. இடையறாத யுத்தத்தில் ஈடுபட்டனர். | யுத்தத்தைக் கூடியளவு தவிர்த்தனர். |
| 4. உரோமன் கத்தோலிக்க மதம் அறிமுகம். | புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதம் பரப்புதல். |
| 5. நிலையான சட்டபூர்வமான திருமணத்தை ஏற்படுத்தினர். | நிலையான நீதிநிர்வாகம் ஏற்படுத்தினர். பொதுத்துறை, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | மாவட்ட நீதிமன்றங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. |
| 6. நீதிமுறையில் கவனம் செலுத்தவில்லை ஊழல் இலஞ்சம் மிகுந்த ஆட்சி. | உரோமன் டச்சுச் சட்டம் தேசவழமைச் சட்டம் அறிமுகம் |
| 7. கல்வி மூலம் மதம் பரப்பினர். பரிஷ் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. | கல்வி கற்பித்தல், பதவிகள் வழங்குதல் மூலம் மதம் பரப்பினர். உயர்கல்விக்கு கொழும்பில் செமினரி அமைத்தனர். |
| 8. உரோமானியக் கட்டட முறையைப் புகுத்தினர். | ஒல்லாந்தரின் வீடுகட்டும் முறை அறிமுகம் ஒல்லாந்தரின் கோட்டைகள் இன்றும் நிலைத்திருத்தல் |
| 9. கபிரிஞ்ஞா, பைலா, மேடைநாடகம் அறிமுகம் | போல் நடனம் தேவாலய சங்கீதம் அறிமுகம் |
| 10. புதிய உணவுவகைகள் அறிமுகம். மாட்டிறைச்சி சாப்பிட, மதுபானம் குடிக்க அறிமுகம். பாண், பற்றிஸ், ஊறுகாய், அச்சாறு, சம்பல் அறிமுகம் | புதிய உணவு வகை பானங்கள் அறிமுகம், சொற்கள் அறிமுகம் தோம்பு, பிசுக்காஸ், கொர்கிஸ், துட்டு |
| 11. சிங்கள மக்கள் சோம்பேறிகளாக மாறினர். | சிங்கள கலாசாரம் பாதிக்கப்பட்டமை. |

**12. இடைவெளிகளை நிரப்புக.**

1. போர்த்துக்கேயரின் சமகாலத்தில் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட நாடுகள் ....................................... ............................................ ஆகும்.
2. போர்த்துக்கேயர் ஒல்லாந்தரின் கீழைத்தேய தலைமையமாக விளங்கியவை முறையே .......................... ............................ ஆகும்.
3. இரண்டாம் இராசசிங்கன் போர்த்துக்கேயரை விரட்ட ........................ இனத்தவர்களை அழைத்ததுடன் ....................... ஆண்டில் ஒப்பந்தமும் செய்து கொண்டான்.
4. 1638ம் ஆண்டு உடன் படிக்கையில் யுத்த செலவினங்கள் பற்றித் தகராறு ஏற்பட்டமைக்கு ........ ........ ......... காரணங்களாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 1638ம் ஆண்டு உடன்படிக்கை எழுதப்பட்ட மொழி ............................. அதிலுள்ள பிரச்சனைக்குரிய வாசகம் ................................. ஆகும்.
6. 2ம் இராசசிங்கன் ................................... விரட்ட ஒல்லாந்தரின் உதவியை நாடியது. ........ என்ற கூற்று உருவாக ழிவகுத்தது.
7. ............................ நிர்மாணிக்கப்பட்ட ............................ கோட்டை உலக கலாசாரத்துக்கு உரிமை பாராட்டக் கூடிய அளவிற்குப் புகழ் பெற்றது.
8. ஒல்லாந்தரின் தூதுவராக 1602ல் ................ என்பவரும் ஆங்கிலேயரின் தூதுவராக 1762ல் .............. என்பவரும் மலைநாட்டுக்கு வருகை தந்தனர்.
9. கண்டியிராட்சியத்துடன் சமாதானக் கொள்கையை ....................... தேசாதிபதியும் உறுதியான கொள்கையை ........................ தேசாதிபதியும் மேற்கொண்டனர்.
10. ஒல்லாந்தர் கீழைத் தேசங்களுக்கு வருகை தருவதற்கு ................. .......................................... முக்கிய காரணங்களாக அமைந்தன.

## விடைகள்

1. இசுப்பானியர், ஒல்லாந்தர் 2. கோவா, பற்றேவியா
3. ஒல்லாந்தர், 1638 4. (அ) ஒல்லாந்தர் யுத்த செலவுகளைக் கணிப்பதில் தாமதம் ஏற்படுத்திமை. (ஆ) கோட்டையிலிருந்த ஊழியர்களின் சம்பளங்களைக் கொடுப்பது தனக்குரிய பொறுப்பு அல்ல என மன்னன் கூறியமை. (இ) ஒல்லாந்தர் உதவியளித்து ஏழுவருடங்களுக்கு பின்னரும் மன்னர் செலவுகளைக் கொடுத்து முடிக்காமை.
5. ஒல்லாந்தம் மொழி "மன்னர் விரும்பினால் மட்டும்"
6. போர்த்துக்கேயர் "இஞ்சியைக் கொடுத்து மிளகைப் பெற்றுக் கொண்டதுபோல்"
7. ஒல்லாந்தர், காலி
8. ஸ்பில் பேர்கன், யோன் பைபஸ்
9. சமாதானக் கொள்ளை: லோறன்ஸ் பைல் விலெம் வான் இம் ஹொவ் உறுதியான கொள்கை பரன்வான்ஏக் இமாம் விலெம்பார்க்.
10. வர்த்தக நோக்கம், புரட்டஸ்தாந்து மதம் பரப்பும் நோக்கம்

13. சுருக்கமான விடை தருக.

**1. மக்கள் தமது இறைமை அதிகாரத்தைச் செயற்படுத்தக் கூடிய வழிகள் இரண்டு தருக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 1978ம் யாப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் யார்? சட்டங்களைப் பிறப்பிப்பது யார்?
3. அமைச்சரவையின் தலைவர் யார்? அமைச்சர்கள் யார் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்வர்?.
4. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் முறையின் குறைபாடுகள் இரண்டு தருக.
5. ஒம்புட்ஸ்மனின் கடமை யாது? ஏன் ஏற்படுத்தப்பட்டது.
6. உயர் நீதிமன்றின் கடமைகள் இரண்டு தருக?
7. இலங்கையில் சட்டங்களைப் பிறப்பிப்பது யார்? நடைமுறைப் படுத்துவது யார்?
8. நீதிமன்றங்களின் சுதந்திரம் பேணப்படுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் இரண்டு தருக.
9. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் ஜனாதிபதி, பராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
10. அரசியற் கட்சிகளுக்கு வாக்களிக்கும் போது வாக்குச் சீட்டொன்று செல்லுபடியாகாத சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

## விடைகள்

1. (அ) வாக்குரிமை மூலம் (ஆ) அடிப்படை உரிமைகள் மூலம்
2. (அ) ஜனாதிபதி (ஆ) பாராளுமன்றம்
3. (அ) ஜனாதிபதி (ஆ) ஜனாதிபதி
4. (அ) ஜனாதிபதியின் எல்லையற்ற அதிகாரம்
   (ஆ) பிரதமர்,அமைச்சரவையின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டிருத்தல்
5. (அ) அரசாங்க, திணைக்கள கருமங்களில் மனித உரிமைகள் மீறப்படுமிடத்து அவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தல்
   (ஆ) அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்
6. (அ) மசோதாக்கள் யாப்புக்கு அமைவானதா என்பதைத் தீர்மானித்தல்
   (ஆ) அடிப்படை உரிமைகள் பாதுகாப்புத் தொடர்பான அதிகாரம்
7. (அ) பாராளுமன்றம் (ஆ) ஜனாதிபதி
8. (அ) ஓய்வு பெறும்வரை நீதிபதிகளை பதவி நீக்க முடியாது
   (ஆ) சம்பளம் நிரந்தரமானதாகவும் திரட்டுநிதியிலிருந்தும் வழங்கப்படுதல்
9. (அ) பட்டியல் முறை (ஆ) தனிமாற்று வாக்குமுறை
10. (அ) அரசியற்கட்சிக்கு வாக்களிக்காமல் விருப்பங்களை மட்டுமே அடையாளமிடல்
    (ஆ) பல அரசியற்கட்சிகளுக்கு புள்ளியிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டுகள் | முக்கிய நிகழ்வுகள் |
|---|---|
| கி.பி 1214 | கலிங்க மாகனின் படையெடுப்பு. |
| கி.பி 1232 | தம்பதெனியா இராசதானியாக்கப்படல். |
| கி.பி 1236 | இரண்டாம் பராக்கிரமபாகு சிம்மாசனம் ஏறல். |
| கி.பி 1247 | சந்திரபானுவின் படையெடுப்பு. |
| கி.பி 1261 | சந்திரபானுவின் இரண்டாவது படையெடுப்பு. |
| கி.பி 1270 | நான்காம் விஜயபாகு ஆட்சிபீடமேறல். |
| கி.பி 1272 | முதலாவது புவனேகபாகு யாப்பகூவாவைத் தலைநகராக்கல். |
| கி.பி 1284 | குலசேகர பாண்டியன் படையெடுப்பு. |
| கி.பி 1293 | 2வது புவனேகபாகு குருநாகலை தலைநகராக்குதல். |
| கி.பி 1302 | நான்காவது பராக்கிரமபாகு சிம்மாசனம் ஏறல். |
| கி.பி 1312 | அஸ்கிரிய பீடம் ஸ்தாபிக்கப்படல். |
| கி.பி 1341 | 4வது புவனேகபாகு கம்பளையைத் தலைநகராக்குதல். |
| கி.பி 1358 | கம்பளையில் அழகக் கோனார் உதவியுடன் கலகம். |
| கி.பி 1405 | செங்கோ புனிததந்ததாதுவைக் கைப்பற்ற படையெடுப்பு. |
| கி.பி 1410 | செங்கோவின் இரண்டாவது படையெடுப்பு வீர அழகேஸ்வரன், அவனின் மனைவி கைதியாகச் சீனாவிற்குக் கொண்டு செல்லப்படுதல், ஆறாவது பராக்கிரமபாகு கோட்டையைத் தலைநகராக்குதல். |
| கி.பி 1453 | துருக்கியர் கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றல். |
| கி.பி 1498 | வாஸ்கொடகாம கள்ளிக்கோட்டையை அடைதல். |
| கி.பி 1505 | லொறன்ஸோ டி அல்மேடா இலங்கைக்கு வருகை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டுகள் | முக்கிய நிகழ்வுகள் |
| --- | --- |
| கி.பி 1518 | கொழும்பில் போர்த்துக்கேயர் கோட்டை கட்டுதல். |
| கி.பி 1521 | விஜயபாகு கொள்ளை,கோட்டை இராட்சியம் பிரிக்கப்படல். |
| கி.பி 1537 | மாயதுன்னன் புவனேகபாகு யுத்தம். |
| கி.பி 1538 | இறைகம பண்டார மரணம் இறைகம சீதாவாக்கையுடன் இணைக்கப்படல். |
| கி.பி 1543 | பிரான்சிஸ்கன் குருமார்கள் வருகை யாழ்ப்பாண இராட்சியம் மீது படையெடுப்பு. |
| கி.பி 1557 | தர்மபாலன் கத்தோலிக்க மதத்தைத் தழுவுதல். |
| கி.பி 1562 | முல்லேரியாயுத்தம் போர்த்துக்கேயருக்கு முதலாவது தோல்வி ஏற்படல். |
| கி.பி 1580 | மாயதுன்னை மரணம். |
| கி.பி 1582 | முதலாவது இராசசிங்கன் கண்டியைக் கைப்பற்றல். |
| கி.பி 1591 | நல்லூர் மாநாடு. |
| கி.பி 1592 | முதலாம் இராசசிங்கனின் மரணம். |
| கி.பி 1594 | முதலாவது விமலதர்மசூரியன் தந்துரே யுத்தத்தில் வெற்றிபெறல். |
| கி.பி 1597 | மல்வானை ஒப்பந்தம். |
| கி.பி 1600 | பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் ஸ்தாபிதம். |
| கி.பி 1601 | ஒல்லாந்த கிழக்கிந்தியசங்கம் உதயம். |
| கி.பி 1602 | முதலாவது ஒல்லாந்த தூதுவர் ஸ்பில் பேகன் வருகை பலனையுத்தத்தில் முதலாம் விமலதர்மசூரியன் வெற்றி பெறல். |
| கி.பி 1604 | முதலாம் விமலதர்மசூரியன் மரணம். |
| கி.பி. 1630 | இரந்தெனிவலயுத்தத்தில் இரண்டாம் இராசசிங்கன் வெற்றிபெறல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டுகள் | முக்கிய நிகழ்வுகள் |
|---|---|
| கி.பி 1638 | இரந்தெனிவலயுத்தத்தில் இரண்டாம் இராஜசிங்கன் வெற்றிபெறல் |
| கி.பி 1638 | 2ம் இராஜசிங்கன்-வெஸ்ரவோல்ட் உடன்படிக்கை கன்னொருவயுத்தத்தில் போர்த்துக்கேயர் படுதோல்வி அடைதல் |
| கி.பி 1656 | ஒல்லாந்தர் கொழும்புக் கோட்டையைக் கைப்பற்றல் |
| கி.பி 1658 | ஒல்லாந்தர் யாழ்ப்பாணம், மன்னார் கோட்டைகளைக் கைப்பற்றல் |
| கி.பி 1734 | கண்டியில் நாயக்கர் வம்சம் ஸ்தாபிக்கப்படல் |
| கி.பி 1762 | யோன் பைபஸ் தூதுக்குழு வருகை. |
| கி.பி 1766 | ஒல்லாந்தர் மலையக மன்னன் ஒப்பந்தம் |
| கி.பி 1796 | இலங்கையின் கரையோரப்பகுதிகளை பிரித்தானியர் கைப்பற்றல் |
| கி.பி 1797 | சென்னை நிர்வாகத்திற்கெதிரான கிளர்ச்சி |
| கி.பி 1798 | இரட்டையாட்சி ஆரம்பம் பிரடரிக்நோத் முதலாவது ஆளுநராக நியமனம் |
| கி.பி 1802 | பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாதல் இரட்டை ஆட்சி முடிவுறல் |
| கி.பி 1803 | கண்டியிராட்சியத்தின் மீது நோர்த்தின் 1வது படையெடுப்பு |
| கி.பி 1805 | தோமஸ்மெயிற்லாந்து ஆளுநராக நியமனம் |
| கி.பி 1810 | யூரிசபை இலங்கையில் அமைக்கப்படல் |
| கி.பி 1815 | பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றல் கண்டி உடன்படிக்கை |
| கி.பி 1817.`.1818 | கண்டிய மக்களின் சுதந்திரப் போராட்டம் (கண்டிக்கலகம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டுகள் | முக்கிய நிகழ்வுகள் |
| --- | --- |
| கி.பி 1829 | கோல்புறூக் ஆணைக்குழுவின் வருகை |
| கி.பி 1833 | சட்டவாக்கக் கழகம் அமைக்கப்பட்டமை |
| கி.பி 1848 | பிரித்தானியருக்கு எதிரான கிளர்ச்சி |
| கி.பி 1915 | சிங்கள முஸ்லீம் கலகம் |
| கி.பி 1931 | டொனமூர்யாப்பு சர்வசனவாக்குரிமை வழங்கப்பட்டமை |
| கி.பி 1945 | இலவசக் கல்வித்திட்டம் ஆரம்பம் |
| கி.பி 1947 | சோல்பரியாப்பு அமுல் செய்யப்பட்டமை |
| கி.பி 1948 | இலங்கை சுதந்திரமடைதல் |
| கி.பி 1972 | இலங்கை குடியரசாகுதல். வில்லியம் கோபல்லாவ முதலாவது ஜனாதிபதி |
| கி.பி 1978 | இலங்கைக் குடியாட்சிச் சோசலிசக் குடியரசு யாப்பு அமைக்கப்பட்டமை. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகுதல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு கல்விச் சேவை வெளியீடுகள்:

சமூகக்கல்வியும் வரலாறும்

குறிப்புகள்
வினா – விடைகள்

தரம் 10

சமூகக்கல்வியும் வரலாறும்

குறிப்புகள்
வினா – விடைகள்
கணிப்பீட்டுப் பயிற்சிகள்

தரம் 7

சுற்றாடற் கல்வி

குறிப்புகள்
கணிப்பீட்டுப் பயிற்சிகள் – விடைகள்

தரம் 6

ஆக்கம்: நா. மயில்வாகனம்

சகல புத்தகசாலைகளிலும் பெறலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org